**தலைப்பு 111 - சுகாதார அமைச்சு**

1. நிதிக்கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

சுகாதார அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் சுகாதார அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 யூன் 23 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 செப்தெம்பர் 16 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படவேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக் கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சுகாதார அமைச்சின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேறகொண்டேன் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் பிரிவின் பிரகாரம் சுகாதார அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள் செலவினங்கள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உபபிரிவின் பிரகாரம் அமைச்சினால் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக்காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல்வேண்டும்.

1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரிள் பொறுப்பு

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.
- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.
- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.
- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்பத்தப்பட்டது.

1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

……………………………………………………………..

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) இந்நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) இந்த அறிக்கையின் 1.6.1 (அ) (ஆ) மற்றும் (இ) பந்திகளில் குறிப்பிட்ட அவதானிப்புக்கள் சம்பந்தமாக முன்னைய ஆண்டிற்கான நிதிகூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரைகள்

……………………………………………………………

1.6.1 நிதியற்ற சொத்துக்கள்

………………………………

நிதிக்கூற்றுக்களில் காட்டப்படுகின்ற நிதியற்ற சொத்துக்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) முன்னைய ஆண்டின் போது திறைசேரியினால் பேணப்பட்ட திரண்ட நிதியற்ற சொத்துக்கள் கணக்கறிக்கையின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியற்ற சொத்துக்களின் கிரயம் ரூபா 172,439.71 மில்லியனாக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் போது திறைசேரியினால் பேணப்பட்ட திரண்ட நிதியற்ற சொத்துக்கள் கணக்கறிக்கையின் பிரகாரம் 2021 சனவரி 01 இல் உள்ளவாறான நிதியற்ற சொத்துக்களின் கிரயம் ரூபா 184,327.77 மில்லியனாகும். ரூபா 11,888.06 மில்லியன் வித்தியாசத்திற்கான காரணம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகிறேன். இது தொடர்பாக அரசாங்க கணக்குகள் திணைக்களத்திடம் விசாரித்து எதிர்காலத்தில் உரிய தகவல்கள் சமர்ப்பிக்கப்படும். | இந்த வித்தியாசத்திற்கான காரணத்தை ஆராய்ந்து பார்த்து தேவையான செம்மையாக்கல்களை மேற்கொண்டு 2022 ஆம் ஆண்டிற்கான சரியான நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் 2021 சனவரி 01 இல் உள்ளவாறான ஆதனம், பொறி, உபகரணம் என்பவற்றின் கிரயம் ரூபா 192,229.15 மில்லியனாக இருந்த போதிலும் திறைசேரியினால் பேணப்பட்ட நிதியற்ற சொத்துக்கள் கணக்கின் மாதாந்த பொழிப்பு மற்றும் திரண்ட நிதியற்ற சொத்துக்கள் கணக்கறிக்கையின் பிரகாரம் 2021 சனவரி 01 இல் உள்ளவாறான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கிரயம் முறையே ரூபா 172,439.71 மில்லியன் மற்றும் ரூபா 184,327.77 மில்லியனாகும். முறையே ரூபா 19,789.44 மில்லியன் மற்றும் ரூபா 7,901.38 மில்லியன் வித்தியாசத்திற்கான காரணம் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | 2021 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இணங்க செலவுக் கூற்றுக்கள் மற்றும் திறைசேரியினால் பேணப்பட்ட மாதாந்த செலவுப் பொழிப்புக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது மூலதன சொத்துக்களை பெற்றுக்கொள்ளல் செலவுகள் ரூபா 18,379.96 மில்லியனாக இருந்த போதிலும் திறைசேரியினால் பேணப்பட்ட திரண்ட நிதியற்ற சொத்துக்கள் கணக்கறிக்கையின் பிரகாரம் அச்செலவுகள் ரூபா 1,502.07 மில்லியனாகும். வித்தியாசம் ரூபா 16,877.88 மில்லியனுக்கான காரணம் வெளிப்படுத்தப்படவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறான நிதியற்ற சொத்துக்களின் கிரயம் ரூபா 190,551.71 மில்லியனாக இருந்த போதிலும் கணக்காய்விற்காகச் சமர்ப்பித்திருந்த அமைச்சு மற்றும் அதற்குரிய 55 | காணப்படுகின்ற வித்தியாசத்திற்கான காரணத்தை இனங்கண்டு எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனங்களின் நிதியற்ற சொத்துக்கள் தொடர்பான தகவல்களைக் காட்டும் கணனி மென்பொருள் பிரதியின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறான நிதியற்ற சொத்துக்களின் கிரயம் ரூபா 196,854.76 மில்லியனாகும். வித்தியாசம் ரூபா 6,303.05 மில்லியனுக்கான காரணம் வெளிப்படுத்தப்படவில்லை. | | |
| (உ) | 2010 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது அமைச்சினால் அமுல்ப்படுத்தப்பட்ட 54 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 10,630.37 மில்லியன் நிதி ஏற்பாட்டில் ரூபா 7,603.09 மில்லியன் உரிய காலப்பகுதியின் போது செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் அச்செலவில் உள்ளடக்கப்பட்ட நிதியற்ற சொத்துக்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் அபிவிருத்தி செய்வதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் நிதியற்ற சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பான உறுதிப்படுத்தல்கள் பின்னர் சமர்ப்பிக்கப்படும். | செயற்திட்டத்தின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட அனைத்து சொத்துக்களும் கணக்கீடு செய்யப்பட்டது என்பதனை உறுதிப்படுத்தும் எழுத்துமூல சான்றுகளை விரைவாக கணக்காய்விற்குச் சமர்ப்பித்தல் வேண்டும். |

1.6.2 அன்பளிப்பு பொருட்களும் மருத்துவ வழங்கல்களும் கணக்கீடு செய்யப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2020 ஆம் ஆண்டின் போது பல்வேறு வெளிநாட்டு அரசாங்கங்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள், அமைப்புக்களும் தனிப்பட்டவர்களும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு அரசசார்பற்ற அமைப்புக்கள் என்பவற்றினால் அமைச்சிற்கும் அதன் கீழ் காணப்படுகின்ற வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கும் வழங்கப்பட்டிருந்த நிதியற்ற உதவிகள் அல்லது நன்கொடைகள் தொடர்பாக 2021 ஒக்தொபர் 15 ஆந் திகதி வரை | கொவிட் 19 இன் கீழ் வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு கிடைத்துள்ள நிதி மற்றும் நிதியற்ற உதவிகள் அல்லது நன்கொடைகள் தொடர்பான தகவல்களைப் பெற்று நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்குதல் அல்லது உள்ளடக்காமை தொடர்பாக விரைவாக அறிக்கையிடப்படும். | கணக்கீடு செய்யப்படாத அனைத்து சொத்துக்களையும் இனங்கண்டு கணக்கீடு செய்து 2022 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களைத் தயாரித்து சமர்ப்பித்தல் வேண்டும். |

கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருந்த தகவல்களின் பிரகாரம் வைத்தியசாலைகள், சுகாதார நிறுவனங்கள் மற்றும் அமைச்சின் பல்வேறு நிறுவனங்களுக்கு கிடைத்திருந்த ரூபா 1,339.28 மில்லியன் கிரயமான பல்வேறு பொருட்கள் மருத்துவ உபகரணங்கள் மற்றும் மருத்துவ வழங்கல்களும் பெறுமதி தெரிவிக்கப்படாத 2,444 பொருள் அலகுகளும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

1.6.3 கணக்காய்வு சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

.....................................................................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| ....................................................... | ............................. | .............................. |
| ரூபா 190,551.72 மில்லியன் மொத்த கிரயமான பல்வேறு சொத்துக்களும் ரூபா 119.75 மில்லியனான பல்வேறு செலவுகளும் தொடர்பாக முறையே விபரமான பட்டோலைகள் மற்றும் பல்வேறு தகவல்களும் எழுத்துமூல சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாததனால் அப்பெறுமதிகளை திருப்பதிகரமாக மெய்மையாய்வு செய்வதற்கும் சான்றுறுதி செய்வதற்கும் முடியாதிருந்தது. மேலும் அமைச்சின் வாகன பயன்பாடு தொடர்பான செயலாற்றல் மதிப்பீட்டிற்குத் தேவையான தகவல்களும் 2021 ஆம் ஆண்டிற்கான பொருள் மீளாய்வுச் சபையினை நியமித்தல் மற்றும் பொருள் மீளாய்வு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் தொடர்பான தகவல்களும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது பட்டப்படிப்பு கற்கைநெறிகளைப் பூர்த்திசெய்த மருத்துவர்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் ஒரு மொழிக்கு மேற்பட்ட மொழிகளில் சிறப்புத் தேர்ச்சியுள்ள இலங்கை தாதிகள் சேவையின் உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட ஊக்குவிப்பு படிகள் தொடர்பான தகவல்களும் சேவையை கைவிட்டுச் செல்லும் கட்டளைகள் வழங்கப்பட்ட 95 | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகிறேன். | இத்தகவல்கள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 42 (அ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதி வேண்டிக் கொண்டுள்ள தகவல்களையும் ஏனைய சான்றுகளையும் வழங்காத அனைத்து தரப்பினர்களும் குற்றம் புரிந்தவர்களாகக் கருதி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மருத்துவர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 81.91 மில்லியனை அறவீடு செய்யும் செயல்முன்னேற்றம் தொடர்பான தகவல்களும் 257 மருத்துவர்களிடமிருந்து அரசாங்கத்தினால் அறவிட வேண்டியிருந்த பணம் தொடர்பான தகவல்களும் சேவையை கைவிட்டுச் செல்லும் கட்டளை வழங்கப்பட்டிருந்த குறைநிரப்பு மற்றும் உப மருத்துவ சேவைகளின் 13 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 2.47 மில்லியனை அறவீடு செய்வதற்குரிய தகவல்கள் மற்றும் இன்னும் 10 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய பணம் தொடர்பான தகவல்களும் கொவிட் 19 தொற்று நோயை கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளின் போது பெறுமதி சேர் வரிக் கொடுப்பனவு தொடர்பான தகவல்களும் சுகாதார அமைச்சின் கீழ் காணப்படுகின்ற அனைத்து வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு பயிற்சிகளுக்காக இணைத்துக்கொள்ளப்பட்ட பயிற்சி மற்றும் பயிற்சிக்கு பிற்பட்ட மருத்துவர்களுக்கு 2016 சனவரி 01 இலிருந்து 2022 மார்ச் 31 வரையான காலத்தில் செலுத்தப்பட்ட மாதாந்த படிகள் தொடர்பான தகவல்களும் 2020 சனவரி 01 இலிருந்து அமுல்ப்படுத்தப்பட்ட தனிப்பட்ட வருமான முற்பணங்கள் வரி (Personal Income Advance Tax) அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டள்ள உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட, மற்றும் உள்நாட்டு இறை வரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கவேண்டிய தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டதா என்பதனை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான தகவல்களும் பல்வேறு காரணங்கள் சம்பந்தமாக தகவல்களைக் கோரிய 32 கடிதங்களின் மூலம் கோரிய கணக்காய்வுக்குத் தேவையான தகவல்களும் பல்வேறு காரணங்கள் சம்பந்தமாக தகவல்கள் மற்றும் சுகாதார அபிவிருத்தி நிதியத்தினால் அமைச்சிற்குரிய வைத்தியசாலைகள்

மற்றும் 10 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 580.59 மில்லியன் தொகையான நிதியற்ற சொத்துக்கள் அமைச்சின் நிதிக்கூற்றுக்களுக்கு உள்ளடக்கப்பட்டமைக்கான சான்றுகளும் 2022 யூன் 15 ஆந் திகதி வரை சமர்ப்பிக்கப்படாமை அல்லது முழுமையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அத்துறைகளை முறையாக கணக்காய்வு செய்ய முடியாதிருந்தது.

1.6.4 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் செய்யப்பட வேண்டிய சான்றுபடுத்தல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை காலத்திற்கு காலம் மீளாய்வு செய்து அதற்கிணங்க முறைமையை வினைத்திறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்களைச் செய்து அதன் பிரதியை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. மேலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குத் தேவைப்படும் வகையில் நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அனைத்து கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் பதில் வழங்குதல் இடம்பெறுகின்றது என்பதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினால் சான்றுபடுத்த வேண்டிய போதிலும் 2022 யூன் 09 ஆந் திகதி வரை பதில் கிடைக்காத கணக்காய்வு ஐய வினாக்களின் மொத்த எண்ணிக்கை 65 ஆக இருந்ததுடன் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் பதில் அனுப்பப்படாத கணக்காய்வு ஐய வினாக்களின் எண்ணிக்கை 24 ஆகும். | கணக்காய்வு அவதானிப்புக்களுடன் இணங்குகிறேன். அமைச்சின் நிதிக்கட்டுப்பாட்டிற்காக வினைத்திறனான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையைத் தயாரித்து பேணுவதற்காக தற்பொழுது அமுல்ப்படுத்தப்படுகின்ற நிதிக்கட்டுப்பாட்டு முறைமையினை வினைத்திறனாக்குவதற்கான தேவையான மாற்றங்களை ஆராய்ந்து பார்த்து தேவையான மீளாய்வுகளைச் செய்துவதற்கும் உரிய மீளாய்வினை எழுத்துமூலம் வழங்குவதற்கும் பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் பிரதான நிதி உத்தியோகத்தர் 1/11/111 ஆகியோருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. 2021 ஏப்ரல் 09 ஆந் திகதி நடைபெற்ற அரசாங்க கணக்குகள் தொடர்பான குழுக் கூட்டம் நடைபெற்ற சந்தர்ப்பத்தில் பதில் வழங்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்களின் | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவிலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | எண்ணிக்கை 120 இனை மிகைத்திருந்த போதிலும் தற்பொழுது அந்த எண்ணிக்கையை 06 வரை குறைக்கக் கூடியதாக இருந்தது எனவும் மிகுதி கணக்காய்வு ஐய வினாக்களுக்கும் தாமதமின்றி பதில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |

2. நிதி மீளாய்வு

2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்குரிய 1997 ஆம் ஆண்டிலிருந்து தீர்த்துவைக்கப்படாத ரூபா 362,702 தொகையான கட்டுநிதி மீதி 2022 யூன் 15 ஆந் திகதி வரை தீர்த்துவைக்கப்படவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகிறேன்.<br>2021 ஆம் ஆண்டிற்கான கட்டுநிதி கணக்கினை தீர்த்துவைப்பதற்குத் தேவையான அங்கீகாரத்தினை திறைசேரிகள் செயற்பாட்டு திணைக்களத்திடம் வேண்டிக் கொள்ளப்பட்டது. | இக்கட்டுநிதியினை வரைவாக தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

2.2. செலவு முகாமைத்துவம்

நிதிப்பிரமாணம் 50 இல் காட்டப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் சரியான மற்றும் நடைமுறைச் சாத்தியமான மதிப்பீடு தயாரிக்கப்படவில்லை என கீழே காட்டப்பட்டுள்ள அவதானிப்புக்களுக்கு இணங்க உறுதிப்படுத்தப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 2021 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் மூலம் 03 மீண்டுவரும் செலவு விடயங்கள் மற்றும் 03 மூலதனச் செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட ரூபா 761.7 மில்லியன் நிதி ஏற்பாடு முழுவதும் நிதிப்பிரமாணம் 66 மற்றும் 69 இன் மூலம் ஏனைய செலவு | அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளவில்லை. ஆண்டு முழுவதும் கொவிட் 19 தொற்று நோய் நிலைமையின் காரணமாக செலவுப் போக்கு மாற்றமடைந்துள்ளது. அத்தியாவசியமான | நிதிப்பிரமாணம் 50 இல் காட்டப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் சரியன மற்றும் நடைமுறைச் சாத்தியமான மதிப்பீட்டினைத் தயாரித்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. | செலவுகளுக்காக மாத்திரம் செலவு செய்யுமாறும் மேலதிக நிதி ஏற்பாடு வழங்கப்படமாட்டாது எனவும் 2020 திசெம்பர் 23 ஆந் திகதிய 7/2020 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையின் மூலம் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க அத்தியாவசியமான செலவுகள் அமைச்சுக்கு வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டினை முகாமைத்துவம் செய்து கொள்வதற்காக சேமிப்பு ஏற்படும் என எதிர்பார்க்கின்ற செலவு வியடங்களின் நிதி ஏற்பாடு நிதிப் பிரமாணம் 66 இன் மூலம் மாற்றப்பட்டது. | |
| (ஆ) | 2021 ஆம் ஆண்டிற்கான பாதீட்டின் மூலம் 06 மீண்டுவரும் செலவு விடயங்கள் மற்றும் 19 மூலதன செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட முறையே ரூபா 25.9 மில்லியன் மற்றும் ரூபா 4,221.00 மில்லியனாக மொத்தமாக ரூபா 4,246.90 மில்லியன் நிதி ஏற்பாடு குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் முறையே ரூபா 163.42 மில்லியனால் மற்றும் ரூபா 6,955.24 மில்லியனால் 100 சதவீதத்திலிருந்து 1,000 சதவீதம் வரையான வீச்சில் அதிகரிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்கி கொள்ளப்படுகின்றது. 2021 ஆம் ஆண்டிற்கான வரைபு மதிப்பீடு பொதுத் தீறைசேரியினால் வழங்கப்படாததனால் இந்த அத்தியாவசியமான செலவு விடயங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி ஏற்பாடு போதுமானதாக இல்லை. பொதுத்திறைசேரியினால் மேலதிக நிதி ஏற்பாடு வழங்கப்படாததனால் நிதிப்பிரமாணம் 66 மாற்றங்களின் மூலம் நிதி ஏற்பாடு அதிகரிக்கப்பட்டது. | -மேற்படி- |
| (இ) | 11 மீண்டுவரும் செலவு விடயங்கள் மற்றும் 21 மூலதனச் செலவு விடயங்கள் உள்ளடங்கலாக 32 செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்ட மொத்தமாக ரூபா 12,299.90 மில்லியன் தொடக்க நிதி ஏற்பாட்டில் ரூபா 207.92 மில்லியன் ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டபட்டிருந்ததனால் மற்றும் ரூபா 1,357.00 மில்லியன் ஏனைய செலவு விடயங்களிலிருந்து | அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்கிறேன். இச்செலவு விடயங்களை நீக்கிக் கொள்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. ஏனைய செலவு விடயங்களின் நிதி ஏற்பாட்டில் எதிர்காலத்தில் சேமிப்பு ஏற்படாமைக்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | மாற்றிக்கொள்ளப்பட்டதன் பின்னர் சேமிப்பு ரூபா 13,448.98 மில்லியன் தேறிய நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) | 12 மூலதனச் செலவு விடயங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீட்டின் மூலம் வழங்கப்பட்ட ரூபா 2,927.00 மில்லியனான மேலதிக நிதி ஏற்பாடு முழுவதும் மற்றும் தொடக்க மதிப்பீட்டில் சில பகுதியும் சேமிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்கிறேன். | -மேற்படி- |
| (உ) | திறிபோச நிகழ்ச்சித்திட்டத்திற்காக வழங்கப்பட்டிருந்த நிதி ஏற்பாட்டில் ரூபா 1,076.25 மில்லியன் அல்லது 40 சதவீதத்தை ஏனைய செலவு விடயங்களுக்கு மாற்றியதன் பின்னர் ரூபா 392.81 மில்லியன் அல்லது 15 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளவில்லை. திரீபோச உற்பத்திக்கு தேவையான இறுங்குகளின் நியம தரம் தொடர்பாக உருவாகிய பிரச்சினையின் காரணமாக மூலப்பொருட்களைப் பெற்றுக்கொள்ள முடியாமையால் உற்பத்தி குறைவடைந்துள்ளதுடன் உலகம் முழுவதும் ஏற்பட்டுள்ள எதிர்பாராத நிலைமையினால் போசாக்கு நிகழ்ச்சித்திட்டத்தில் தடைகள் ஏற்பட்டது. | -மேற்படி- |

2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை மேற்கொள்ளல்
..........................................................................................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| ............................................... | | ............................ | ............................ |
| (அ) | நிதிப்பிரமாணம் 94(i) இல் காட்டப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு முரணாக நிதி ஏற்பாட்டினை மிகைத்து ரூபா 2,242.60 மில்லியன் பொறுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | அவதானிப்புக்களுடன் இணங்க வில்லை. அனைத்து நிறுவனங்களின் பொறுப்புக்களையும் கவனத்தில் கொண்டு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் உரிய ஆண்டின் யூன் 30 ஆந் திகதியில் காணப்பட்ட செலவுகளை கவனத்தில் கொண்டு பொதுத்திறைசேரியினால் | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | நிதி ஏற்பாடு வழங்கப்பட்டது. உரிய ஆண்டிற்கான வரைபு மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டு கட்டுநிதி வழங்கப்படுமாகவிருந்தால் வைத்தியசாலை முறைமையில் இவ்வளவு பொறுப்புக்கள் உருவாகுவதில்லை. சுற்றறிக்கையின் மூலம் உத்தியோகத்தர்களின் மேலதிக நேர வேலைப்படியினை அதிகரித்தல் போன்ற விடயங்களால் நிதி ஏற்பாடு போதியதாக இல்லாமை மற்றும் நவம்பர் திசெம்பர் மாதங்களில் உருவாகிய கட்டுநிதி தட்டுப்பாட்டினால் பொறுப்புக்கள் எதிர்காலத்தில் உருவாகியுள்ளது. ஏனைய மூலதன செலவு விடயங்களுக்காக வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டினை மிகைக்காத வகையில் பொறுப்புக்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | வருடாந்த பாதீட்டில் உள்ளடக்கப்படாத அல்லது புதிதாக உருவாக்கப்பட்ட செலவு விடயங்கள் அல்லாத 20 செலவு விடயங்களுக்காக ரூபா 54.94 மில்லியன் பொறுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்பட்டது. அதிக அளவிலான பொறுப்புக்களை அறிக்கையிடும் போது தாமதத்தினால் பிழையான செலவு விடயங்களில் பதியப்பட்டது. அடுத்துவரும் ஆண்டுகளில் இத்தவறினை முழுமையாக சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பொறுப்புக்களையும் கடப்பாடுகளையும் சரியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டிற்கான திறைசேரியினால் அங்கீகரித்த பொறுப்புக்கள் மீதி ரூபா 3,865.96 மில்லியனை மிகைத்து திறைசேரியின் அங்கீகாரமிஜல்லாது ரூபா 2,652.43 மில்லியன் பொறுப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்பட்டது. சுகாதார சேவையின் தொடக்க குறிக்கோளான ஆயுள் காப்புறுதிக்காக நடவடிக்கை எடுத்தல் மற்றும் ஒட்டுமொத்த பொறுப்புக்களை நிர்ணயிக்கப்பட்ட காலப்பகுதிக்குள் அறிவிக்கப்படாமையால் உருவாகியுள்ள குறைபாடுகள் எதிர்காலத்தில் சரிசெய்யப்படும். | திறைசேரியின் அங்கீகாரமின்றி பொறுப்புக்கள் மேற்கொள்ளப்படாதிருத்தல் வேண்டும். |

## 2.4 முற்பணங்கள் வழங்குதல் மற்றும் தீர்த்துவைத்தல்

.......................................................................................

### 2.4.1 குறித்த செயலுக்கான உபகட்டுநிதி

...................................................................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ........................................................ | .............................. | ............................. |
| (அ) | 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கையினல் திருத்திய நிதிப்பிரமாணம் 371(5) இன் பிரகாரம் செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்டு 10 நாட்களுக்குள் பெற்றுக்கொள்ளப்பட்ட குறித்த செயலுக்கான உபகட்டுநிதி தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் 663 சந்தர்ப்பங்களின் போது வழங்கப்பட்டிருந்த ரூபா 21.095 மில்லியன் மொத்த தொகையான குறித்த செயலுக்கான உபகட்டுநிதி குறித்த செயற்பாடு பூர்த்தி செய்யப்பட்டு 01 மாதத்திற்கும் 13 மாதங்களுக்கும் இடையேயான காலப்பகுதி தாமதித்து தீர்த்து வைக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்படுகின்றது. முற்பணங்கள் பெற்றுக்கொள்ளப்பட்ட செயற்பாடு பூர்த்தியடைந்து 10 நாட்களுக்குள் அந்த முற்பணங்கள் தீர்த்துவைக்கப்பட வேண்டுமென உரிய பிரிவிற்கு எழுத்துமூலம் தெரியப்படுத்தப்பட்டது. | உபகட்டுநிதிகள் நிர்ணயிக்கப்பட்ட திகதிக்குள் தீர்த்துவைக்கப்படுதல் வேண்டும். குறித்த செயலுக்கான உபகட்டுநிதியானது செயற்பாடு பூர்த்திசெய்யப்பட்ட உடன் தீர்த்துவைக்கப்படுதல் வேண்டும். தாமததித்தமைக்கான தண்டப்பணத்தை அறவீடு செய்யும் நடைமுறை அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 16 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட ரூபா 343,870 குறித்த செயலுக்கான உபகட்டுநிதியானது உரிய செயற்பாடுகளுக்காக ஈடுபடுத்தப்படாது 05 நாட்களிலிருந்து 206 நாட்கள் வரையான காலம் கையில் வைத்திருக்கப்பட்டு பின்னர் தீர்த்துவைக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்கிகொள்ளப்படுகின்றது. காணப்பட்ட கொரோனா நிலைமையின் அடிப்படையில் ஏற்கனவே திட்டமிட்டவாறு செயற்பாடுகளையும் நிகழ்ச்சித்திட்டங்களையும் நாளதுவரையாக நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்ததனால் இவ்வாறு முற்பணங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டு நீண்டுகாலம் வைத்திருந்தமை குறித்த பிரிவுகளில் இடம்பெற்றிருந்த போதிலும் அது தொடர்பான காரணம் எழுத்துமூலம் அந்த முற்பணங்களை தீர்த்துவைக்கும் சந்தர்ப்பத்தில் பெற்றுக்கொள்ளப்பட்டன. எவ்வாறாயினும் அவதானிப்புக்கள் தொடர்பாக ஒவ்வொரு பிரிவிற்கும் எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டது. | குறித்த செயலுக்கான உபகட்டு நிதியானது பூர்த்தி செய்யப்பட்ட உடன் தீர்த்துவைக்கப்படுதல் வேண்டும். தாமதத்திற்கான தண்டப்பணத்தை அறவீடு செய்யும் நடைமுறை அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டும். |
| (இ) | 142 சந்தர்ப்பங்களின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட குறித்த செயலுக்கான உப கட்டுநிதிகள் ரூபா 5.806 மில்லியனில் செயற்பாடுகள் பூர்த்திசெய்யப்பட்டதன் பின்னர் மிகுதியாக உள்ள ரூபா 1.135 மில்லியனை மீளத்தீர்த்து வைப்பதற்காக 10 நாட்களிலிருந்து 332 நாட்கள் வரையான காலம் தாமதமடைந்திருந்தது. | -மேற்படி- | -மேற்படி- |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது 02 சந்தர்ப்பங்களில் பல்வேறு நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்காக மாகாண சுகாதார பணிப்பாளருக்கு வழங்கப்பட்ட ரூபா 663,400 தொகை அந்நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்படாது 07 மாத கால தாமதத்தின் பின்னர் முழுப்பணமும் மீளச் செலுத்தப்பட்டிருந்தது. | காணப்பட்ட கொரோனா தொற்று நோய் நிலைமையினை கட்டுப்படுத்துவது சம்பந்தமாக இந்த முற்பணம் வழங்கப்பட்டது. | நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்தி முடிவடைந்ததன் பின்னர் பணம் விடுவிக்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | 2020 மார்ச் 12 ஆந் திகதி தொழுநோய் வைத்தியசாலையின் தனிமைப்படுத்தல் நிலையத்தை மேம்படுத்துவதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 3 மில்லியன் தொகையான மூலதன முற்பணங்களில் ரூபா 222,222 தொகை மற்றும் 2021 நவம்பர் 10 ஆந் திகதி காலி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு வழங்கப்பட்டிருந்த மூலதன முற்பணங்கள் ரூபா 30,000 தொகை 2022 மார்ச் 23 ஆந் திகதி வரை தீர்த்துவைக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகிறது. கொரோனா நோயாளிகளை தங்கவைத்து சிகிச்சை செய்யும் வைத்தியசாலை வாட்டுக்களை மறுசீரமைப்பு செய்வதற்காக வழங்கிய முற்பணம் என்பதனால் நிலையப் பரீட்சிப்பிற்காக செல்ல முடியாதிருந்ததனால் இந்த மீதி மிகுதியாகக் காணப்பட்டதுடன் தற்பொழுது கொரோனா தொற்று நோய் நிலைமை கட்டுப்படுத்தப்பட்டுள்ளதனால் முற்பணத்தை தீர்த்து வைக்குமாறு உரிய பிரிவிற்கு எழுத்துமூலம் தெரிவிக்கப்பட்டது. | இந்த முற்பணங்களை விரைவாக தீர்த்து வைத்தல் வேண்டும். |

2.5. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு முற்பணங்களை வழங்குதலும் தீர்த்துவைத்தலும்

.......................................................................................................................................................

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ...................................................... | ........................... | ............................ |
| (அ) | 2020 திசெம்பர் 30 ஆந் திகதிய 03/2020 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 03 ஆம் பந்தியின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு செலுத்தப்பட்ட விசேட முற்டபணங்கள் 2021 ஆம் ஆண்டின் போதே அறவிட்டு முடிவுறுத்தப்பட வேண்டிய போதிலும் அதன்பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 157 உத்தியோகத்தர்களிடமிருந்து 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் அறவிட வேண்டியள விசேட முற்பண மீதி ரூபா 167,850 ஆகும். | அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றது. உத்தியோகத்தர்கள் சேவையை கைவிட்டுச் செல்லல், வேலையிலிருந்து இடைநிறுத்தல், ஏனைய நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் செல்லுதல் ஆகிய காரணங்களால் காணப்படுகின்ற நிலுவைக் கடன் மீதியை அறவீடு செய்வதற்காக தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டளவில் நிலுவைக் கடன் மீதி தீர்த்து வைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2004 ஒக்தோபர் 11 ஆந் திகதிய 118 ஆம் இலக்க பாதீட்டு சுற்றறிக்கையிலுள்ள ஒழுங்குவிதிகள் மற்றும் | அவதானிப்புக்களுடன் இணங்குகிறேன். அமைச்சிற்குரிய வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு நிலுவைக் | சுற்றறிக்கை ஒழுங்குவிதிகளின் பிரகாரம் உத்தியோகத்தர் இடமாற்றம் பெற்றுச் |

| | | | |
|---|---|---|---|
| | தாபனக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 1:6 மற்றும் 1:7 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை அமைச்சு மற்றும் அதற்குரிய 54 நிறுவனங்களிலிருந்து இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட முடியாதிருந்த மொத்த கடன் மீதி ரூபா 77.07 மில்லியனாகும். அக் கடன் மீதிகளுக்கு மத்தியில் 59 சதவீதத்திற்குச் சமனான ரூபா 45.80 மில்லியன் தொகையான 788 கடன் மீதிகள் 05 ஆண்டுகளுக்கு மேற்கொள்ளப்பட்ட பழைய கடன் மீதிகளாகும். | கடன் மீதிகளை அறவீடு செய்வதற்காக தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதுடன் 2022 ஆம் ஆண்டளவில் நிலுவைக் கடன் மீதிகளை தீர்த்துவைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சென்று 03 மாதங்களுக்குள் கடன் மீதியினைத் தீர்த்து வைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதற்காக நடவடிக்கை எடுக்கும் பொறுப்பினை நிறைவேற்றத்தவறிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | ஒரே செலவுத் தலைப்பிற்குள் காணப்படுகின்ற நிறுவனங்களுக்கிடையே கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் மீதிகள் காணப்பட முடியாத போதிலும் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவீடு செய்ய வேண்டியிருந்த ரூபா 77.07 கடன் மீதியில் 20 சதவீதத்திற்குச் சமனான ரூபா 15.48 மில்லியன் கடன் மீதியானது அமைச்சிற்குரிய வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்களுக்கு இடமாற்றம் பெற்ற உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதியாகும். மேலும் உத்தியோகத்தர் இடமாற்றம் பெற்ற இடத்தை உறுதியாக இனங்காணமுடியாத ரூபா 6.53 மில்லியன் கடன் மீதியினையும் உள்ளடக்கி ரூபா 22.01 மில்லியன் கடன் மீதியானது இணக்கக் கூற்றை சமப்படுத்துவதற்காக பிழையாக உள்ளடக்கப்பட்ட மீதி என்ற சந்தேகத்தினை கணக்காய்வின் போது புறக்கணிக்க முடியாதுள்ளது. | அமைச்சிற்குரிய வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கிடையே நீண்டகாலம் அறவிடப்படாத கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் மீதிகளானது அனைத்து நிறுவனங்களுக்குள்ளும் காணப்பட்ட ஆவணங்களைப் பரீட்சித்து தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இந்நிலைமைக்கு காரணமான விடயங்களை இனங்கண்டு உரிய செம்மையாக்கல்களை விரைவாக செய்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | வேலையிலிருந்து இடைநிறுத்திவைப்பதற்கு உட்பட்ட 208 உத்தியோகத்தர்களிடமிருந்து 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 9.59 மில்லியனாக இருந்ததுடன் அதில் 72 சதவீதத்திற்குச் சமனான ரூபா 6.92 மில்லியன் கடன் மீதி 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழைய கடன் மீதியாகும். சேவையைக் கைவிட்டுச் சென்ற 735 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 19.56 மில்லியன் மொத்த கடன் மீதிக்கு மத்தியில் 380 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 9.86 மில்லியன் அல்லது 50 சதவீதமான கடன் மீதி 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் மீதியாகும். இம்மீதிகள் ஆண்டுதோறும் தொடர்ச்சியாக அதிகரித்துக் காணப்பட்ட போதிலும் கடனை அறவீடு செய்வது தொடர்பாக போதிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகிறேன். சட்டரீதியான ஒழுங்குவிதிகளின் மூலம் உரிய பிரிவுகள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து தகவலைப் பெற்று நீண்ட கால கடன் மீதிகளை தீர்த்துவைப்பதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டள்ளன. | தாபன விதிக் கோவையின் ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (உ) | ஓய்வுபெற்ற 283 உத்தியோகத்ரதர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதி ரூபா 16.44 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 11.47 மில்லியன் அல்லது 70 சதவீதம் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட பழைய கடன் மீதியாகும். மரணமடைந்த உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய கடன் மீதி சம்பந்தமாக தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.4 இலிருந்து 4.6 வரையான பிரிவுகளில் குறிப்பிட்ட ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடவேண்டிய கடன் | அவதானிப்புக்களுடன் இணங்குகிறேன். நீண்ட கால ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை குறைப்பதற்காக ஓய்வூதியத் திணைக்களத்திற்கு தெரியப்படுத்தி கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் அத்திணைக்களத்துடன் நேரடியாக தொடர்பு கொண்டு கடன் மீதிகளை தீர்த்துவைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மரணமடைந்த உத்தியோகத்தர்களிடமிருந்து குறிப்பிடதக்க அளவான மரணபணிக்கொடை இன்று வரை | -மேற்படி- |

| | |
|---|---|
| பணம் ரூபா 6.57 மில்லியனாக இருந்தது. இதில் 19 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 990,573 மொத்த தொகை அல்லது 15 சதவீத கடன் மீதி 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட கடன் மீதியாகும். | தீர்த்துவைக்கப்படவில்லை. எதிர் காலத்தில் நீண்ட கால கடன் மீதியை தீர்த்துவைப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |

## 2.6 வைப்பு மீதிகள்

..........................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| | ...................................................... | ............................ | ...................... |
| (அ) | 08 பொது வைப்புக் கணக்குகளில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட மீதிகளின் மொத்தம் ரூபா 1.610 மில்லியனாக இருந்ததுடன் 05 வைப்புக் கணக்குகளின் திறைசேரி வைப்புக் கணக்கின் மாதாந்த பொழிப்புக்கும் அமைச்சின் ஏடுகளை வைத்திருக்கும் பிரிவின் பதிவேட்டின் பிரகாரம் காணப்பட்ட மீதிக்குமிடையே ரூபா 631,001 வித்தியாசம் காணப்பட்ட போதிலும் வித்தியாசத்திற்கான காரணம் வெளிப்படுத்தப்படவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகிறேன். சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வித்தியாசத்திற்கு காரணமான விடயங்களை இனங்கண்டு தேவையான செம்மையாக்கல்கள் செய்யப்படுதல் வேண்டும். |
| (ஆ) | உலக வங்கி செயற்திட்டமான ஆரம்ப சுகாதார சேவை முறைமையை வலுப்படுத்தும் செயற்திட்டம் கட்டம் I இனால் 2020 திசெம்பர் மாதத்தின் போது மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக உரிய செலவு விடயங்களுக்கு வரவுவைத்து உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைப் பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 6.50 மில்லியன் தொகை 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் உரிய கொள்வனவுக்காக செலவு செய்யப்படாதும் திறைசேரியின் அங்கீகாரமின்றியும் பொதுவைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகிறேன். இது சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். | பொருட்களை வழங்குவதற்கு முன்னர் அதற்காக காசோலைகள் எழுதப்படாதிருத்தல் வேண்டும். திறைசேரியின் அங்கீகாரமின்றி பொதுவைப்புக் கணக்கில் பணத்தை வைக்காதிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | கல்முனை (வடக்கு) தளவைத்தியசாலையின் சுத்திகரிப்பு சேவையை பேணி வந்த ஒரு நிறுவனத்தினால் தமது ஊழியர்களுக்காக செலுத்த வேண்டிய பங்களிப்பு பணத்தை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கும் செலுத்தாமையின் காரணமாக 2020 ஆம் ஆண்டிலிருந்து 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அறவிடப்பட்டிருந்த ரூபா 6.32 மில்லியன் ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கும் அனுப்பிவைக்கப்படாது பொதுவைப்புக் கணக்கில் வைக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகிறேன். ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அறவிடப்பட்ட பணத்தை பெற்றுக் கொள்வதற்கு வேண்டிக் கொண்டவர்கள் முன்வரவில்லையாயின் 2022 மே மாதம் அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைத்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இது தொடர்பாக முறையான பரிசீலினை மேற்கொண்டு பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்குத் தவறிய ஒப்பந்தக்காரர்கள் சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் பணத்தை ஊழியர் சேமலாப நிதியத்திற்கும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்திற்கும் அனுப்பிவைத்தல் வேண்டும். |

2.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைகள்

.......................................................................................................................

அவதானிப்புக்கள்

...........................

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|---|
| | .......................... | ........................ | ........................... | ...................... |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவை ............................ | | | |
| (i) | V ஆவது அத்தியாயத்தின் 7.1 ஆம் பிரிவு மற்றும் அரசாங்க சேவை ஆணைக் குழுவின் செயல் நடவடிக்கை | பதவியை கைவிட்டுச் சென்றாதாகக் கருதப்படும் ஒரு உத்தியோகத்தருக்கு அதுபற்றி உடனடியாக பதிவுத் தபாலில் தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் நிறுவனத் தலைவரின் பொறுப்பாக இருந்த போதிலும் அமைச்சினால் | அவதானிப்புக்களுடன் இணங்குகிறேன். அங்கீகரிக்கப்பட்ட விடுமுறை முடிவடைந்ததன் பின்னர் கடமைக்கு சமூகமளிக்காத மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு சேவையை | தாபன விதிக் கோவையிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அது தொடர்பான பொறுப்புக்களை நிறைவேற்றாத உத்தியோகத்தர்கள் |

| | | | | |
|---|---|---|---|---|
| | விதியின் முதலாவது தொகுதியின் 172 ஆம் விதி | அங்கீகரிக்கப்பட்ட விடுமுறை முடிவடைந்ததன் பின்னர் கடமைக்கு சமூகமளிக்காத மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு சேவையை கைவிட்டுச் செல்லும் அறிவித்தல் வழங்குவதில் தாமதம் 17 ஆண்டுகள் வரையாகும். அவ்வாறே களுத்துறை போதனா வைத்திய சாலையில் சேவையில் ஈடுபட்டிருந்த ஒரு தாதி உத்தியோகத்தர் 2020 செப்தெம்பர் 04 ஆந் திகதியிலிருந்து சேவையை கைவிட்டுச் செல்லும் அறிவித்தலினை 173 நாட்களுக்குப் பினனர் வழங்கியிருந்தார். | கைவிட்டுச் சென்றதாகக் கருதி சேவையை விட்டுச் செல்லும் கட்டளை தற்பொழுது முறைப்படியாக வழங்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் இவ்வாறான தவறுகள் ஏற்படாமைக்கு கவனித்துக்கொள்ளப்படும். | சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | XIX ஆம் அத்தியாயத்தின் 5.8, 6.1 , 6.15 6:15 , 7.1 7:1 மற்றும் 7.2 ஆம் பிரிவுகள் | • 1971 இன் 07 ஆம் இலக்க அரசாங்கத்தின் இல்லங்கள் (உரித்தினை மீளப் பெற்றுக்கொள்ளல்) அதிகாரச் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுப்பதனைத் தவிர்த்து குத்தகை காலத்தின் இறுதியில் அல்லது வீட்டினை ஒதுக்கீடு செய்து தருகின்ற அதிகாரி நிர்ணயிக்கையில் விலகிச் செல்லாத 46 உத்தியோகத்தர்களை வீடுகளிலிருந்து நீக்குவதற்கும் தண்டனை வாடகையை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.<br><br>• குத்தகை காலம் 05 ஆண்டுகளை மிகைத்து மேலும் 05 ஆண்டுகளிலிருந்து 27 ஆண்டுகள் வரையான காலமாக 143 உத்தியோகத்தர்கள் அரசாங்க வீடுகளில் குடியிருக்கின்றமை அவதானிக்கப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்குகிறேன். அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள வைத்திய சாலைகள் மற்றும் நிறுவனங்களுக்குரிய அரசாங்க இல்லங்களை நிருவகிப்பது சம்பந்தமான தாபன விதிக்கோவையிலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு கவனித்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. இதற்குப் பின்னர் உரிய பட்டியல்களை குடியிருப்பதற்கு வருகை தரும் உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடுவதற்கு தேவையான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. கட்டணங்கள் நிறுவனங்களால் செலுத்தப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் அந்த நிறுவனங்களின் உத்தியோகத்தர்களிட | தாபன விதிக் கோவையிலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் அரசாங்கத்தினால் செலுத்தப்பட்ட பணத்தை பொறுப்புக் கூறக்கூடிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்தல் வேண்டும். நிர்ணயிக்கப்பட்ட காலத்தை மிகைத்து குடியிருக்கும் காலத்திற்காக தண்ட வாடகை அறவிடப்படுதல் வேண்டும். |

- உத்தியோகபூர்வ இல்லத்திற்கான நீர் கட்டணத்தை உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடாது அவை உரிய நிறுவனத்தினால் செலவு செய்திருந்த 13 சநதர்ப்பங்கள் காணப்பட்டன.

- அரசாங்க மதிப்பீட்டாளரினால் வழங்கப்பட்ட மதிப்பீட்டு வாடகையை 05 ஆண்டுகளின் பின்னர் மீண்டும் மதிப்பீடு செய்ய வேண்டிய போதிலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காத 15 நிறுவனங்கள் காணப்பட்டன.

- எழும்புருக்கி நோயை கட்டுப்படுத்துதல் மற்றும் இருதய நோய் தொடர்பான தேசிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு இணைத்துக்கொள்ளப்பட்டு சேவையில் ஈடுபட்டிருந்த இரண்டு உத்தியோகத்தர்களுக்கு உத்தியோகபூர்வ இல்லங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் 04 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

- அங்கொடை தேசிய தொற்று நோய் கல்லூரியின் பாட்டியலப்படுத்தப்பட்ட உத்தியோகபூர்வ இல்லம் ஒரு மருத்துவ உத்தியோகத்தருக்கு 1995 மே 12 ஆந் திகதியிலிருந்து 26 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக வழங்கப்பட்டிருந்த போதிலும் அது மீளப்பெற்றுக்கொள்ளப்பட்டி

மிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சில உத்தியோகபூர்வ இல்லங்கள் தற்பொழுது மதிப்பீடு செய்யப்பட்டு புதிய மதிப்பீட்டின் கீழ் வாடகை அறடவிடப்படுகின்ற து. மதிப்பீடு செய்யப்படாத உத்தியோகபூர்வ இல்லங்களை மதிப்பீடு செய்து கொள்வதற்கு தற்பொழுது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. வீட்டு வாடகைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. உத்தியோகபூர்வ இல்லங்களை மீளப்பொறுப்பேற்பதற்காக தற்பொழுது சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

| | | | | |
|---|---|---|---|---|
| | | ருக்கவில்லை.<br>• ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் பட்டியல்ப்படுத்தப்பட்ட நிருவாக உத்தியோகத்தர் உத்தியோகபூர்வ இல்லம் அமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளருக்கு 2008 மே 01 ஆந் திகதியிலிருந்து தற்காலிக அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 13 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் அதனை மீளப்பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.<br>• திகோணமலை மாவட்ட வைத்தியசாலையினால் 19 வதிவிட உத்தியோகத்தர்களிடமிருந்து வீட்டு வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | இலங்கை சனநாயக குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 170(2) | அமைச்சின் கீழ் காணப்படுகின்ற 05 நிறுவனங்களுக்கு 2020 ஆம் ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 18.72 மில்லியன் அன்பளிப்பு பணம் சம்பந்தமாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்குகிறேன். உரிய வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களினால் உரிய பொருட்கள் முறைப்படியாக பட்டியல்ப்படுத்தப்பட்டுள்ளதுடன் தகவல்கள் எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(இ)** | **அரசாங்க நிருவாக சுற்றறிக்கை**<br>................................... | | | |
| (i) | 1998 திசெம்பர் 30 ஆந் திகதிய 29/98 ஆம் இலக்க மற்றும் 2007 பெப்ரவரி 09 ஆந் திகதிய 03/2007 ஆம் | • ஏதாவது ஒரு சேவைக்குறிய ஆட்சேர்ப்புத் தகமையில் மாற்றங்கள் ஏற்படுகையில் 29/98 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம் மொழி ஊக்குவிப்பு படி செலுத்த வேண்டியது 02/2009 ஆம் இலக்க சுற்றறிக்கை | அவதானிப்புக்களுடன் இணங்குகிறேன். 03/2007 மற்றும் 02/2009 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையிலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் படிகளை அங்கீகரித்தல் மற்றும் | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் பிழையாக செலுத்தப்பட்ட பணத்தை பொறுப்புக் |

| | | | |
|---|---|---|---|
| இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை மற்றும் 2009 ஏப்ரல் 07 ஆந் திகதிய 02/2009 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை கடிதம் | கடிதத்தின் பிரகாரமாக இருந்த போதிலும் அதற்கு இணக்கமற்ற வகையில் 14 வைத்தியசாலைகளில் தாதிகள் சேவையின் 32 உத்தியோகத்தர்களுக்கு மொழி ஊக்குவிப்பு படி செலுத்தப்பட்டது. | கொடுப்பனவு செய்தல் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு தேவையான ஒழுங்குவிதிகள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. | கூறக்கூடிய தரப்பினர்களிட மிருந்து அறவீடு செய்தல் வேண்டும். |
| | • 03/2007 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04:03 ஆம் பந்தியின் பிரகாரம் மொழி ஊக்குவிப்பு படியினைச் செலுத்தும் போது 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை அரசாங்க மொழித் திணைக்களத்தினால் நடாத்தப்படுகின்ற மொழி சிறப்புத் தேர்ச்சி பரிசோதனையின் கிபார்சின் அடிப்படையில் மொழி ஊக்குவிப்பு படி செலுத்தப்பட வேண்டிய போதிலும் 08 நிறுவனங்கள் மற்றும் வைத்தியசாலைகளின் இலங்கை தாதிகள் சேவையின் 57 உத்தியோகத்தர்களுக்கு அதற்கு இணக்கமற்ற வகையில் ஊக்குவிப்புப்படி செலுத்தப்பட்டது. | | |
| | • 03/2007 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 04:07 ஆம் பந்திக்கு இணங்க சுற்றறிக்கை அமுல்ப்படுத்தப்படுகின்ற 2007 பெப்ரவரி 02 ஆந் திகதியிலிருந்து ஆங்கில மொழிக்கானதைத் தவிர்த்து ஏனைய மொழிக்காக மொழி சிறப்புத் திறன் ஊக்குவிப்பு படியினைச் செலுத்துதல் நிறுத்தப்பட்டிருந்த போதிலும் 03 வைத்தியசாலைகளின் இலங்கை தாதிகள் சேவையிலுள்ள 05 | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உத்தியோகத்தர்களுக்கு அதற்கு இணக்கமற்ற வகையில் மொழி ஊக்குவிப்பு படி செலுத்தப்பட்டது. | | |
| (ii) | 2009 ஏப்ரல் 16 ஆந் திகதிய 09/2009 ஆம் இலக்க மற்றும் 2017 ஏப்ரல் 19 ஆந் திகதிய 03/2017 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கை | • அனைத்து அரசாங்க நிறுவனங்களிலும் விரல் அடையாளங்களைப் பதிவு செய்யும் இயந்திரத்தினைப் பயன்படுத்தி அரசாங்க உத்தியோகத்தர்கள் அலுவலகத்திற்கு வருகை தருதல் மற்றும் வெளிச்செல்லலினை உறுதிப்படுத்துவதற்காக அறிக்கைகளை வைத்திருக்க வேண்டிய போதிலும் அமைச்சினை உள்ளடக்கி அதன் கீழுள்ள 85 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் விரல் அடையாளத்தை பதிவு செய்யும் இயந்திரத்திற்குப் பதிலாக நேரடி மேற்பார்வையின்றி வருகை மற்றும் வெளிச் செல்லல் பதிவேடு அல்லது நாளேடு பேணப்பட்டிருந்தன. | அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் விரல் அடையாளத்தை பதியும் இயந்திரங்களை பயன்படுத்த வேண்டும் என ஆலோசனைகள் வழங்கி உள்ளக சுற்றறிக்கைகளும் பொதுக் கடிதங்களும் வழங்கப்பட்டிருந்த போதிலும் காணப்படுகின்ற தொழில்சங்க எதிர்ப்புக்களின் காரணமாக இதுவரை அந்த நடவடிக்கையை மேற்கொள்ள முடியாதுள்ளது. சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நாளாந்த வருகை மற்றும் வெளிச் செல்லல் பதிவேட்டினை முறைப்படியாக பராமரிப்பதற்காக நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து நிறுவன தலைவர்களுக்கும் பிரிவுத் தலைவர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் பிழையாகச் செலுத்தப்பட்ட பணத்தை பொறுப்புக் கூறக்கூடிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்தல் வேண்டும். |
| | | • அமைச்சிலுள்ள பல்வேறு 91 பிரிவுகளின் 1783 உத்தியோகத்தர்களுக்காக 103 வருகை மற்றும் வெளிச்செல்லல் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தன எனவும் அதன் காரணமாக முறையான உள்ளகக் கட்டுப்பாடு பேணப்படவில்லை எனவும் பல்வேறு | | |

ஒழுங்கீனங்களுக்காக சந்தர்ப்பங்கள் வழங்கப்பட்டுள்ளன எனவும் பிழையான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு சம்பளங்கள், படிகள், விடுமுறை தினச் சம்பளம் மற்றும் மேலதிக நேர வேலைப்படிகள் செலுத்தப்படுகின்றது எனவும் அவதானிக்கப்பட்டது.

- அமைச்சில் சேவையில் ஈடுபட்டுள்ள மருத்துவ உத்தியோகத்தர்களை உள்ளடக்கி நிறைவேற்றுத்தரத்திலுள்ள 30 உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 30 உத்தியோகபூர்வ வாகனங்கள் 2021 யூலை மாதத்தின் போது மாத்திரம் அமைச்சு வளவிற்கு வருகை தந்த மற்றும் வெளிச்சென்ற நேரங்களுக்கும் வருகை தருதல் மற்றும் வெளிச் செல்லல் பதிவேட்டின் அல்லது நாளேட்டின் பிரகாரமான நேரங்களுக்குமிடையே உத்தியோகத்தருக்கு சாதகமளிக்கும் வகையிலான வித்தியாசங்கள் காணப்பட்டதுடன் உத்தியோகத்தர்களுக்கு சாதகமளிக்கின்ற நேரங்களையும் பயன்படுத்தி மேலதிக நேர வேலைப் படிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

- மேலும் உத்தியோகபூர்வ வாகனங்கள் அலுவலக வளவிற்கு வருகைதரும் மற்றும் வெளிச்செல்லும் நேரங்களின் பிரகாரம் வார இறுதி அல்லது பொது விடுமுறை தினங்களின் போது உரியவாறு ஒரு நாளைக்கு 08 மணித்தியாலங்கள் அல்லது

06 மணித்தியாலங்கள் பூரணப்படுத்தாது விடுமுறை தினச் சம்பளம் அல்லது மேலதிக நேர வேலைப்படிகள் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது.

- வருகை மற்றும் வெளிச் செல்லலினை பதிவு செய்யாதிருந்தும் மற்றும் வெளிக் கடமைகள் மேற்கொண்டது பற்றி வெளிச் செல்லும் பதிவேட்டில் இணங்க உறுதிப்படுத்தப்படாதிருந்தும் ஒரு சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தருக்கு 2021 யூலை மாதத்தில் 09 நாட்களுக்கு விடுமுறை தின சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.8 வரித் தேவைப்பாடுகளுடனான இணக்கமின்மைகள்

...................................................................................

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| ...................................................... | ............................ | ...................... |
| 2021 இன் 09 ஆம் இலக்க பெறுமதி சேர் வரி (திருத்திய) அதிகாரச் சட்டத்தின் 8(1) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சு செயலாளரின் வேண்டுதலுக்கான பதிலாக 2020 மே 20 ஆந் திகதியிலிருந்து அமுல்ப்படுத்தும் வகையில் கொவிட் 19 தொற்று நோயினை முன்னிட்டு சுகாதார சேவையினை வழங்குவதற்குத் தேவையான மருத்துவ சத்திர சிகிச்சை மற்றும் பல்மருத்துவ உபகரணங்கள் தொழில்நுட்ப உபகரணங்கள், துணைக்கருவிகள் மற்றும் அவற்றின் பகுதிகளை உள்ளடக்கிய இயந்திரங்களும் கருவிகளும், வைத்தியசாலை அல்லது மருத்துவ மனைப் பொருட்களும் மருந்துகளும், இரசாயனப் பொருட்கள் மற்றும் அவ்வாறான விடயங்கள் பெறுமதி சேர் வரியிலிருந்து விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் அது பற்றி அமைச்சின் கீழ் காணப்படுகின்ற நிறுவனங்கள், வைத்தியசாலைகள், மற்றும் செயற்திட்டங்களுக்கு | அவதானிப்புக்களுடன் இணங்குகிறேன். வழங்குனர்களினால் உரிய வரிப் பணம் மீண்டும் அரசாங்கத்திற்கு செலுத்தப்பட்டுள்ளதா என்பதனை உறுதிப்படுத்தி அது தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். எதில்காலத்தில் கொடுப்பனவை மேற்கொள்ளும் போது வரி சம்பந்தமாக உரிய அதிகாரச் சட்டம் மற்றும் திருத்தங்களின் பிரகாரம் கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | செலுத்தப்பட்டுள்ள பெறுமதி சேர் வரிப்பணத்தை உரிய வழங்குனரிடமிருந்து அல்லது பொறுப்புக் கூறக்கூடிய உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்படுதல் வேண்டும். |

தெரியப்படுத்தப்பட்டிருக்காததுடன் அது தொடர்பான பின் தொடர்நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியின் கீழ் அமுல்ப்படுத்தப்பட்டிருந்த 04 செயற்திட்டங்களின் மூலம் கொவிட் 19 தொற்று நோயை கட்டுப்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்ட மருத்துவ வழங்கலுக்காக ரூபா 130.57 மில்லியன் தொகையான பெறுமதி சேர் வரி 74 வழங்குனர்களுக்குச் செலுத்தப்பட்டிருந்தது.

**2.9 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

**..........................................................**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| **..........................................................** | **..............................** | **.......................** |
| (அ) அமைச்சசுக்கு இணைத்துக்கொள்ளப்பட்டுள்ள அமைச்சிற்கு உள்ளேயே அத்திகதியில் சேவையில் ஈடுபட்டிருந்த நிரந்தரமான பதவிப் பெயர் குறிப்பிடப்பட்ட நிறைவேற்று தரத்திலுள்ள 78 உத்தியோகத்தர்களுக்கு ஒரு விசேட படியினைச் செலுத்துவதற்காக 2016 யூலை 12 ஆந் திகதி அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அந்த அங்கீகாரத்தினை அடிப்படையாகக் கொண்டு அமைச்சிற்கு வெளியே வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டுள்ள நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கு இப்படியினை செலுத்த முடியாது என்ற போதிலும் அதற்கு மாற்றமாக நடவடிக்கை எடுத்து 2022 பெப்ரவரி 18 ஆந் திகதியளவில் | அவதானிப்புக்களுடன் இணங்குகிறேன். அங்கீகரித்த அமைச்சரவை விஞ்ஞாபனங்களால் உளட்ளடக்கப்படாத அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படுகின்ற ஏனைய நிறுவனங்கள் மற்றும் வைத்தியசாலைகளில் சேவையில் ஈடுபட்ட நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கும் உரிய படிகளை செலுத்துவது சம்பந்தமாக அமைச்சரவை அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்வதற்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கலாம். தற்பொழுது நாட்டில் காணப்படுகின்ற பொருளாதார பிரச்சினையை முன்னிட்டு படிகளை செலுத்துவது சம்பந்தமான | முறையான அங்கீகாரமின்றி மேற்கொண்ட கொடுப்பனவுக்காக அங்கீகாரத்தினை பெற்றுக்கொள்வதற்கு அல்லது பொறுப்புக் கூறக்கூடிய தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் சிபார்சு அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். |

கணக்காய்விற்காக தகவல்களைச் சமர்ப்பித்த 40 நிறுவனங்கள் மற்றும் வைத்தியசாலைகளில் சேவையில் ஈடுபட்ட நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கு 2016 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையான 04 ஆண்டுகளின் போது ரூபா 20.41 மில்லியன் விசேட படியாக செலுத்தப்பட்டிருந்தது. அமைச்சினால் பல்வேறு சேவைத் தொகுதிகளை தனித்தனியாக கவனத்தில் கொண்டு படிகளைச் செலுத்துவதற்கு தீர்மதானித்திருந்தமையின் காரணமாக படிகள் கிடைக்க வேண்டிய மற்றும் கிடைக்காதிருக்க வேண்டிய தொகுதிகளை இனங்காணாது படிகள் செலுத்தப்பட்டது எனவும் அமைச்சின் உத்தியோகத்தர்களுக்கு தற்பொழுது செலுத்தப்படுகின்ற அனைத்து படிகள் தொடர்பாகவும் தீவிர பகுப்பாய்வினை மேற்கொண்டு படிகளைச் செலுத்தும் புதிய ஒரு முறைமையினை 2017 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து அமுல்படுத்த வேண்டுமெனவும் தேசிய சம்பளங்கள் மற்றும் பதவியணியினர் ஆணைக்குழுவினால் 2016 யூன் 04 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதிலும் 2022 ஏப்ரல் 15 ஆந் திகதி வரை அதன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக மணித்தியாலத்திற்கு செலுத்தப்படும் இந்த விசேட படியினை புதிய சம்பள அளவுத்திட்டம் தொடர்பாக திருத்தம் செய்வதற்கும் ஒரு மாதத்திற்கு செலுத்தக்கூடிய ரூபா 10,000 உச்ச அளவு படி எல்லையினை நீக்கி ஒரு மாதத்திற்கு 80 மணித்தியாலம் வரையிலான மேலதிக நேர வேண்டுதல்களை நிதி அமைச்சிற்கு அல்லது அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க வேண்டாம் என ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதனால் அமைச்சரவை விஞ்ஞாபனத்தை இச்சந்தர்ப்பத்தில் சமர்ப்பிக்க முடியாதுள்ளது. 2016 யூலை 21 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் சம்பளத்தை அடிப்படையாகக் கொண்டு கொடுப்பனவு செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்டுள்ள கொடுப்பனவு தொகையினை 03/2016 ஆம் இலக்க சம்பள சுற்றறிக்கையின் புதிய சம்பளம் தொடர்பாக திருத்தம் செய்தல் மாத்திரம் இடம்பெற்றுள்ளது.

சேவையில் ஈடுபடக்கூடிய காலத்தை அதிகரிப்பதற்கும் அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அந்த அங்கீகாரத்தினை அடிப்படையாகக் கொண்டு படிகளைச் செலுத்தும் போது ஏற்கனவே காணப்பட்ட படிகளுக்கு நேரொத்த வகையில் உயர்ந்த படியயினைச் செலுத்த வேண்டியிருந்ததுடன் சில உத்தியோகத்தர் வழக்கமான கடமைக்கு மேலதிகமாக உச்ச அளவாக சேவையில் ஈடுபடுவதாக இருந்தால் அந்த உத்தியோகத்தருக்கு ஏற்கனவே பெற்றுக்கொண்ட படிக்கு நேரொத்ததாக 456 சதவீதத்திலிருந்து 942 சதவீதம் வரையான உயர்ந்த பெறுமதியுடன் படியைப் பெற்றுக்கொள்ளும் இயலுமை கிடைத்திருந்தது. மேலும் அமைச்சிற்கு வெளியே வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்டிருந்த நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கும் இப்படி அதிகரிப்பு செலுத்தப்பட்டுள்ளதுடன் 2022 பெப்ரவரி 18 ஆந் திகதி வரை கணக்காய்விற்காக தகவல்களை சமர்ப்பித்திருந்த 15 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களில் சேவையில் ஈடுபட்ட நிறைவேற்று உத்தியோகத்தர்களுக்கு 2021 ஆம் ஆண்டின் போது செலுத்தப்பட்ட விசேட படிகளின் மொத்தம் ரூபா 6.27 மில்லியனாகும்.

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | அமைச்சின் வாகன அணி தொடர்பாக மேற்கொண்ட பரீட்சிப்பு 2021 யூலை மாதத்திற்காக மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டதுடன் பரீட்சிப்பிற்காக அந்த மாதம் தொடர்பாக வேண்டிக் கொண்ட சில தகவல்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்படாததனாலும் சமர்ப்பித்த தகவல்கள் | உரிய குறைபாடுகளை சரிசெய்வதற்காக பாதுகாப்பு பிரிவிற்குத் தெரியப்படுத்தப்பட்டது. உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு தகமையுள்ள உத்தியோகத்தர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட வாகனங்களின் சாரதிகளது பயணச் | வாகன அணி தொடர்பான உள்ளகக் கபட்டுப்பாட்டு முறைமை வலுப்படுத்தப்படுதல் வேண்டும். சரியான தேவைப்பாடுகளை உள்ளடக்கிய அனைத்து விடயங்களையும் பரீட்சித்து அரசாங்கத்திற்கு ஆகக் குறைந்த செலவு ஏற்படும் வகையில் மேலதிக நேர |

| | | | |
|---|---|---|---|
| | பூரணமற்ற தகவல் என்பதனாலும் கணக்காய்வின் நோக்கொல்லையை மட்டுப்படுத்தப்பட வேண்டி ஏற்பட்டது. மேற்கொண்ட தெரிவுப் பரிசோதனை யின் பிரகாரம் வாகன அணி தொடர்பான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை பலவீனமான நிலையில் காணப்பட்டதுடன் அதன் காரணமாக பல்வேறு வகையான பிழையான கொடுப்பனவுகளுக்கு வாய்ப்புக் கிடைத்திருந்தது. ஒதுக்கீடு செய்யப்பட்ட 16 வாகங்களுக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட சாரதிகள் வேலை செய்த ஒவ்வொரு நாளிலும் முற்பகல் 6 மணியிலிருந்து பிற்பகல் 6 மணிவரை 24 மணித்தியாலங்களும் கடமை செய்துள்ளார்கள் என வாகனங்கள் ஒதுக்கப்பட்ட உத்தியோகத்தர்களால் சான்றுபடுத்தப்பட்டிருந்ததுடன் உரிய சாரதிகள் நியாயமற்ற வகையில் மேலதிக நேர வேலைப்படிகளைப் பெற்றிருந்தார்கள் என்பது அவதானிக்கப்பட்டது. | செலவுகளும் மேலதிக நேர வேலைப்படியும் உத்தியோகத்தர்களின் கடமை பயணங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்றது. மேலதிக நேர வேலைப்படியானது ஒவ்வொரு மாதத்திற்காக அங்கீகரிக்கப்பட்ட உச்ச எல்லையை மிகைத்துச் செல்லல் இடம் பெற்றிருக்கவில்லை. | வேலைப்படி அங்கீகரிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் VIII ஆம் அத்தியாயத்தின் 2 ஆம் பிரிவின் பிரகாரம் மேலதிக நேர வேலைப்படியினைப் பெற்றுக்கொள்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட வேலை அளவுகள் நிறைவேற்றப்பட்டுள்ளன எனவும் செயற்பாடற்று இருந்த காலத்திற்காக மேலதிக நேர வேலைப்படிகள் செலுத்துவதில்லை என்ற பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுதல் எனவும் கவனித்துப்பார்த்துக் கொள்ளுதல் வேண்டும். எவ்வாறாயினும் 2009 மார்ச் 27 ஆந் திகதிய 02/19/2009 ஆம் இலக்க அமைச்சு சுற்றறிக்கையினைப் பயன்படுத்தி கண்டி தேசிய | சுற்றறிக்கையின் பிரகாரம் 10 மணித்தியலங்கள் அல்ல 08 மணித்தியாலங்கள் சேர்த்துக் கொள்ளலாம் எனவும் மேலதிகமாக வழங்கப்பட்டுள்ள 02 மணித்தியாலங்கள் சம்பந்தமாக ஆராய்ந்து பார்த்து முழுமையான மணித்தியால எண்ணிக்கையினை கணித்து மிகையாக செலுத்தப்பட்டுள்ள பணத்தை அறவீடு செய்வதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | இதுசம்பந்தமாக முறையான பரீட்சிப்புக்கள் மேற்கொண்டு மேலதிக நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

வைத்தியசாலையில் சேவை நேரம் 06 மணித்தியாலத்தினை விட அதிகரிக்கின்ற 225 தாதி உத்தியோகத்தர்கள, 48 தாதி கண்காணிப்பாளர்கள், மற்றும் விசேட தரத்திலுள்ள 11 உத்தியோகத்தர்களால் 2020 திசெம்பர் 27 ஆந் திகதியிலிருந்து 2021 செப்தெம்பர் 25 ஆந் திகதி வரையான காலப்பகுதியின் போது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த விடுமுறை நாட்களுக்காக ஒரு நாளைக்கு 08 மணித்தியாளங்கள் வீதம் வேலை செய்த மணித்தியால எண்ணிக்கையினை கணிப்பீடு செய்வதன் மூலம் ஒரு விடுமுறை நாளுக்காக 02 மணித்தியாலங்கள் வீதம் அண்ணளவாக செயற்படாத 46,612 மணித்தியளாலங்களுக்காக மொத்தமாக ரூபா 15.09 மில்லியன் தொகையும், பொராதனை போதனா வைத்தியசாலையில் சேவை நேரம் 06 மணித்தியாலங்களை விட அதிகரிக்கும் விசேட தரத்திலுள்ள 04 தாதி உத்தியோகத்தர்கள் மற்றும் 64 தாதி உத்தியோகத்தர்களால் 2021 சனவரியிலிருந்து ஆகஸ்ட் மாதம் வரையான 08 மாதங்களின் போது பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த விடுமுறை நாட்களுக்காக ஒரு நாளுக்கு முறையே 10 மணித்தியாலம் வீதம் மற்றும் 08 மணித்தியால வீதம் வேலை செய்த படியினை கணிப்பதன் மூலம் ஒரு விடுமுறை நாளுக்காக 04 மணித்தியால வீதம் மற்றும் 02 மணித்தியால வீதம் அண்ணளவாக செயற்படாத 6,226 மணித்தியாலத்திற்காக மொத்தமாக ரூபா 1.95 மில்லியன் தொகையும் மேலதிக சேவைப்படியாக செலுத்தப்பட்டிருந்தது.

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | தாதிகள் பதவியணியினருக்காக மேலதிக சேவைப்படியினை | சுற்றறிக்கை விதிகளின் | ஒழுங்கு பிரகாரம் | -மேற்படி- |

வழங்கும் போது ஒவ்வொரு வாரமும் ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 07 மணியிலிருந்து அடுத்து வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 07 மணி வரையான ஒரு வார சேவைக்காலம் அடிப்டையாகக் கொள்ளப்பட்டது எவும் அதன் போது ஒரு வாரத்திற்கு 36 மணித்தியாளங்களை மிகைத்து சேவையாற்றுகின்ற ஒவ்வொரு மணித்தியாலத்திற்காகவும் மேலதிகக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும் வார ஓய்வு நாட்களில் 42 மணித்தியால காலப்பகுதி கடமையில் ஈடுபடவேண்டியிருப்பதனாலும் மேலே குறிப்பிட்ட 36 மணித்தியால கால எல்லையினை மிகைப்பதனாலும் அந்த எஞ்சியுள்ள 06 மணித்தியால காலத்திற்கு மேலதிக படியினைச் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. அந்த வார ஓய்வு நாளில் கடமையை மேற்கொள்வதற்காக விடுமுறை நாள் சம்பளமும் செலுத்தப்பட்டதனால் ஒரே காலத்திற்காக இரட்டை படிகள் செலுத்தப்பட்டுள்ளது என்பது அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க கண்டி தேசிய வைத்தியசாலையில் விசேட தரத்திலுள்ள 11 தாதி உத்தியோகத்தர்கள் 2020 திசெம்பர் 27 ஆந் திகதியிலிருந்து 2021 ஆகஸ்ட் 28 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் வார ஓய்வு நாட்களில் கடமையை நிறைவேற்றுவதற்காக விடுமுறை தின சம்பளமாக ரூபா 1.32 மில்லியன் தொகையும் மேலதிக சேவைப் படியாக ரூபா 331,800 தொகையும் மேலதிக மற்றும் பேராதனை போதனா வைத்தியசாலையில் 2020 திசெம்பர் 27 ஆந் திகதியிலிருந்து 2021 ஆகஸ்ட் 28 ஆந் திகதி வரையான

கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. சுற்றறிக்கையில் குறிப்பிட்ட ஒழுங்குவிதிகள் சம்பந்தமாக மீண்டும் ஆராய்ந்து பார்க்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| | காலப்பகுதியில் வார ஓய்வு நாட்களில் கடமைகளை நிறைவேற்றுவதற்காக விடுமுறை நாள் சம்பளமாக ரூபா 448,197 தொகையும் மேலதிக சேவை படியாக ரூபா 331,800 தொகையுமாக ஒரே கடமைக் காலத்திற்காக இரட்டை படிகள் செலுத்தப்பட்டன. | | |
| (உ) | கண்டி தேசிய வைத்தியசாலையில் விசேட தரத்திலுள்ள தாதி உத்தியோகத்தர்கள் காத்திருத்தல் சேவைக்காலத்தில் 12 மணித்தியாலங்கள் செயற்திறனாக கடமையில் ஈடுபட்டுள்ளதாக கையொப்பமிடப்பட்டுள்ளதுடன் செயற்திறனாக சேவையில் ஈடுபடுவதற்காக சேவை தேவைப்பாட்டின் அடிப்படையில் அழைக்கப்பட்டுள்ளமைக்கு சான்றுகள் இல்லாது வழக்கமான பழக்கமாக நாளாந்தம் காத்திருத்தல் காலப்பகுதியின் போது 12 மணித்தியாலங்கள் வாட்டு கடமை, அலுவலக கடமை அல்லது இரவு நேர மேற்பார்வை நடவடிக்கைகளுக்காக செயற்திறனாக சேவையில் ஈடுபட்டதாக பதிவு செய்து முழுமையான மேலதிக சேவை படி பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2020 திசெம்பர் 27 ஆந் திகதியிலிருந்து 2021 செப்தெம்பர் 25 ஆந் திகதி வரையான காலத்தில் ரூபா 589,340 தொகை மெலதிக சேவை படியாக மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே பேராதனிய போதனா வைத்தியசாலையில் விசேட தரத்திலுள்ள தாதி உத்தியோகத்தர்கள் காத்திருத்தல் சேவைக் காலத்தில் 06 மணித்தியாலங்கள் அளவிலான செயற்திறனாக கடமையில் | விசேட தரத்திலுள்ள தாதி உத்தியோகத்தர் களின் கடமை நேரம் முற்பகல் 7.00 இலிருந்து பிற்பகல் 5.00 மணி வரையாகும் அனைத்து விசேட தரத்திலுள்ள தாதி உத்தியோகத்தர்கள் பிற்பகல் 5.00 மணிக்கு சேவையை முடிவுறுத்தி வெளியே சென்றதன் பின்னர் முற்பகல் 5.00 இலிருந்து பிற்பகல் 7.00 மணி வரையான காலத்திற்காக ஒரு உத்தியோகத்தர் இல்லாததனால் மேற்பார்வை நடவடிக்கைகளுக்கு இரவு நேர காத்திருத்தல் சேவையில் ஈடுபடு வதற்கும் ஏற்பட்டிருந்தது. அவ்வாறே அந்த உத்தியோகத்தர்களுக்கு மு.ப 7.00 மணியின் பின்னர் வைத்தியசாலையின் உள்ளக வாட்டு மற்றும் அலகினை சுற்றிப் பார்த்தல் போன்ற அதிலுள்ள குறைபாடுகளை தேடிப்பார்த்து அதற்குரிய கடமைகளை மேற்கொள்ளும் போது இரவு நேரத்தில் சில மணித்தியாலங்கள் எடுப்பதனால் அந்த இரவு காத்திருத்தல் சேவைக்குரிய காலம் 06 மணித்தியாலங்கள் அளவான செயற்திறனான சேவையில் ஈடுபட வேண்டி ஏற்படுகின்றது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | ஈடுபட்டுள்ளதாக கையெழுத்திட்டுள்ளதுடன் செயற்திறனாக சேவையில் ஈடுபடுவதற்கான சேவைத் தேவைப்பாட்டின் அடிப்படையில் அழைக்கப்பட்டிருந்தார் என்பதற்கு சான்றுகள் இல்லாது வழமையான பழக்கமாக நாளாந்தம் காத்திருத்தல் காலப்பகுதியின் போது 06 மணித்தியாலங்கள் அளவான வாட்டு கடமை, அலுவலக கடமை அல்லது இரவு நேர மேற்பார்வை நடவடிக்கையாக செயற்திறனான சேவையில் ஈடுபட்டதாக பதியப்பட்டு மேலதிக சேவைப்படி முழுவதும் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2020 திசெம்பர் 27 இலிருந்து 2021 ஆகஸ்ட் 28 வரையான காலத்தில்ரூபா 240,950 மேலதிக சேவை படியாக மிகையாக செலுத்தப்பட்டிருந்தது. | இந்த மணித்தியால எண்ணிக்கைக்காக மேலதிக சேவைபடி செலுத்த வேண்டி ஏற்படுகின்றது. | |
| (ஊ) | பேராதனிய போதனா வைத்தியசாலையில் விசேட தரத்திலுள்ள தாதி உத்தியோகத்தர்கள் காத்திருத்தல் சேவையில் ஈடுபடுவதற்காக நிறுவன தலைவரின் அங்கீகாரத்துடன் முறைப்படியாக கடமை நேர பட்டியல் (Duty Roaster) தயாரிக்கப்படவில்லை. அவ்வாறே விசேட தரத்திலுள்ள தாதி உத்தியோகத்தர்களால் அரசாங்க விடுமுறை தினத்தில் சேவையில் ஈடுபட்டதாக கடமை நேர பட்டியல் முறைமை பின்பற்றப்பட்டிருக்கவில்லை. நிறுவனத் தலைவரின் அங்கீகாரமின்றி விசேட தரத்திலுள்ள அனைத்து தாதி உத்தியோகத்தர்களும் அரசாங்க விடுமுறை தினத்தில் கடமைக்காக சமூகமளித்திருந்த சந்தர்ப்பமாகும். 2020 திசெம்பர் 27 ஆந் திகதியிலிருந்து 2021 ஆகஸ்ட் வரையான காலப்பகுதியின் போது 20 அரசாங்க விடுமுறை நாட்கள் | அவதானிப்புக்களுடன் இணங்குகிறேன். தற்பொழுது கடமை நேர முறைமை தயாரித்து அங்கீகரிக்கப்பட்டு சேவையில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | கடமை நேர முறைமை அமுல்ப்படுத்தப்பட்டு செலவை குறைக்கச் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கடமையாற்றியதற்காக விடுமுறை தின சம்பளமாக ரூபா 239,052 செலுத்தப்பட்டிருந்ததுடன் கடமை நேர பட்டியல் முறைமை மூலம் அச்செலவை குறைக்கக் கூடியதாக இருந்த போதிலும் அது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (எ) | 2011 ஆம் ஆண்டிலிருந்து பேராதனை போதனா வைத்தியசாலையில் விசேட தரத்திலுள்ள ஒரு தாதி உத்தியோகத்தர் மாத்திரம் சேவையாற்றியிருந்ததுடன் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது இன்னும் இரண்டு உத்தியோகத்தர்கள் இணைத்துக்கொள்ளப்பட்டிருந்த னர். இந்த உத்தியோகத்தர்கள் 2018 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆகஸ்ட் வரையான காலத்தின் போது வழக்கமான கடமை நேரத்திற்குப் புறம்பாக நிறைவேற்றியிருந்த சேவை மணித்தயாலங்களின் எண்ணிக்கை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பகுப்பாய்வின் பிரகாரம் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை அதிகரித்ததன் அடிப்படையில் கடமை வேலை பகிர்வின் மூலம் மேலதிக சேவை மணித்தியாலங்களின் அளவு குறைவடைவதற்குப் பதிலாக மாதாந்தம் மேலதிக சேவையின் சராசரி மணித்தியால எண்ணிக்கை 344 மணித்தியாலங்களிலிருந்து 841 மணித்தியாலங்கள் வரை 144 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்குகிறேன். 2011 ஆம் ஆண்டிலிருந்து விசேட தரத்திலுள்ள ஒரு தாதி உத்தியோகத்தர் மாத்திரம் சேவையாற்றினார். தாதி கண்காணிப்பாளரால் ஏனைய உத்தியோகத்தர்களுக்குரி ய சேவைகள் நிறைவேற்றப்பட்டன. தற்பொழுது அவச்செயற்பாடுகள் இந்த விசேட தரத்திலுள்ள 04 உத்தியோகத்தர்களால் நிறைவேற்றப்பட்டன. | தேவைப்பாட்டினை உறுதியாக இனங்கண்டு உத்தியோகத்தர்களை மேலதிக சேவையில் ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (ஏ) | 2021 ஆம் ஆண்டின் போது பயிற்சி மருத்துவர்களுக்கு மாதாந்த பயிற்சி படியாக ரூபா 48,950 தொகையும் வாழ்க்கைச் செலவு படியாக ரூபா 7,800 தொகையும் மாத்திரம் செலுத்தக்கூடியதாக இருந்ததுடன் அமைச்சினால் மாகாண சபை வைத்தியசாலைகளுக்கு | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். தற்பொழுது அக்கொடுப்பனவை சரிசெய்து கொள்வதற்காக தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | இது சம்பந்தமாக முழுமையான பரீட்சிப்புக்கள் மேற்கொண்டு மிகையாகச் செலுத்தப்பட்டுள்ள பணத்தை பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கும் பொறுப்பான உத்தியோகத்தர் சம்பந்தமாக முறையான |

| | | | |
|---|---|---|---|
| | பயிற்சிக்காக இணைத்தக் கொள்ளப்பட்டிருந்த பயிற்சி மருத்துவர்களுக்கு மாகாண சபையினால் செலுத்திய அந்த படியானது அமைச்சினால் அந்த மாகாண சபைக்கு மீளளிப்புச் செய்யப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும் 20 மாகாண சபை வைத்தியசாலை மாதிரியில் 14 வைத்தியசாலைகளின் பயிற்சி மருத்துவர்களுக்கு மாதாந்த பயிற்சி படிக்கும் வாழ்க்கைச் செலவுப் படிக்கு மேலதிகமாக ரூபா 750 மாதாந்த படியும் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் 2019 ஏப்ரல் 22 ஆந் திகதிய 09/2019 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட ரூபா 2,500 மாதாந்த படி பயிற்சி மருத்துவர்களுக்கு செலுத்த முடியாத போதிலும் 11 மாகாண சபை வைத்தியசாலைகளின் பயிற்சி மருத்துவர்களுக்கு அந்த படியும் செலுத்தப்பட்டது. அதன் பிரகாரம் பயிற்சி மருத்துவர்களுக்கு சட்டரீதியாக தகமையற்ற படி ரூபா 8.47 மில்லியன் 2021 ஆம் ஆண்டின் போது மாத்திரம் உரிய மாகாண சபையினால் செலுத்தப்பட்டிருந்ததுடன் அப்பணம் அமைச்சினால் மாகாண சபைக்கு மீளளிப்புச் செய்யப்பட்டிருந்தது . | | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஐ) | பயிற்சி மருத்துவர்களின் ஒரு வருட பயிற்சிக் காலம் முடிவடைந்ததும் அவர்கள் மருத்துவர்களாக நியமிக்கப்பட்டு வைத்தியசாலைக்கு இணைத்துக் கொள்ளப்பட வேண்டிய போதிலும் அதற்குப்பதிலாக பயிற்சிக்குப் பிந்திய மருத்துவர்களாக நியமிக்கப்பட்டு மருத்துவ உத்தியோகத்தர்களுக்கு தகமையுள்ள சம்பளமும் ஏனைய அனைத்து படிகளும் படிகளாகச் செலுத்தப்பட்டிருந்தன. | அவதானிப்புக்களுடன் இணங்குகின்றேன். பயிற்சி மருத்துவர்களின் வருடாந்த பயிற்சிக் காலம் முடிவடைந்து அவர்களுக்கு மருத்துவர்களாக நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டிய போதிலும் நிர்ணயிக்கப்பட்டவாறு உரிய காலத்திற்குள் நியமனம் வழங்கப்படுதல் இடம்பெற்றிருக்காததனால் இவ்வாறு பயிற்சிக்குப் பிந்திய மருத்துவராக நியமிக்கப்பட்டு ஒரு | ஒரு ஆண்ட பயிற்சிக் காலம் முடிவடைந்தும் அவர்கள் மருத்துவர்களாக நியமிக்கப்பட்டு வைத்தியசாலைக்கு இணைத்துக்கொள்ள வேண்டும். மாகாண சபைகளிடமிருந்து மீள அறவிட வேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பயிற்சிக்குப் பிந்திய மருத்துவர்களாக இணைத்துக்கொள்ளப்பட்ட திகதியிலிருந்து அமுல்ப்படுத்தப்படும் வகையில் அவர்களுக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படுவதனால் பயிற்சிக்குப் பிந்திய மருத்துவர்களுக்காக அமைச்சினால் மாகாண சபைக்கு மீளளிப்புச் செய்யப்பட்ட படிகள் மீள அறவிடப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டின் போது அமைச்சினால் மாகாண சபைக்கு மீளளிப்புச் செய்யப்பட்ட ரூபா 525.87 மில்லியன் உரிய மாகாண சபைகளிடமிருந்து மீளப் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | மருத்துவருக்கு தகமையுள்ள சம்பளமும் ஏனைய படிகளையும் செலுத்துமாறு சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க உரிய கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | |
| (ஒ) | 2018 பெப்ரவரி 20 ஆந் திகதிய 03∵.2018 03/2018 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையிலுள்ள ஒழுங்குவிதிகளுக்கு இணங்கிய வகையில் வட கொழும்பு போதனா வைத்தியசாலையினால் 04 பதவிகளுக்குரிய 21 உத்தியோகத்தர்களுக்கு ரூபா 9.86 மில்லியன் படியாக மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது என்பது அமைச்சின் பிரதான உள்ளகக் கணக்காய்வாளரினால் அவதானிக்கப்பட்ட 2022 பெப்ரவரி 23 ஆந் திகதி செயலாளருக்கு தெரியப்படுத்தியிருந்த போதிலும் அப்பணம் 2022 யூன் 30 ஆந் திகதி வரை மீண்டும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்கி கொள்ளப்படுகின்றது. 21 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய பணத்தை மீளச் செலுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படம். | இது சம்பந்தமாக முழுமையான பரிசீலனைகள் மேற்கொண்டு மிகையாக செலுத்திய பணத்தை பொறுப்புக்கூறக்கூடிய தரப்பினர்களிடமிருந்து அறவிட வேண்டியதுடன் பொறுப்புக்கூறக்கூடிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஓ) | 2018 பெப்ரவரி 20 ஆந் திகதிய 03/2018 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் 3 (iii) ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு உத்தியோகத்தர் ஓய்வு பெற்ற திகதியில் சேவையாற்றிய பதவிக்கு உரியதனைவிட குறைந்த அளவுத் | உரிய 14 உத்தியோகத்தர்களுக்குச் செலுத்தப்பட்ட படிகள் சம்பந்தமான தகவல்களை ஆராய்ந்து பார்த்து அறவிடக்கூடிய பணத்தை அவர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

திட்டத்துடனான மற்றுமொரு பதவியில் மீண்டும் ஈடுபடுத்தப்படுகையில் அவருக்கு அல்லது அவர்களுக்கு அரசாங்க சேவையில் கடைசியாக கிடைத்த மாதாந்த சம்பளத்திற்கு அல்லது புதிய பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டத்திற்கு நேரொத்த சம்பள படிநிலை ஆகிய இரண்டில் குறைந்த தொகைக்கு சமனான மாதாந்த படி செலுத்த வேண்டிய போதிலும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கு இணங்க ஓய்வு பெற்றுச் சென்ற திகதியில் சேவையாற்றிய பதவியினை விட குறைந்த சம்பள அளவுத்திட்டத்துடனான ஏனைய பதவியில் மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 14 உத்தியோகத்தர்களுக்கு அவர்கள் ஓய்வுபெற்ற சந்தர்ப்பத்தில் செலுத்தப்பட்ட மாதாந்த சம்பளம் மாதாந்த படியாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.8 மோசடித் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2022 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை கொழும்பு தேசிய வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவின் பிரதிப்பணிப்பாளராக சேவையாற்றிய உத்தியோகத்தருக்கு 2019 நவம்பர் 03 ஆந் திகதியிலிருந்து சம்பளத்துடன் இரண்டு ஆண்டுகள் கல்வி விடுமுறை அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2020 நவம்பர் 02 ஆந் திகதி வரையான ஒரு ஆண்டு | இந்த உத்தியோகத்தரினால் பயிற்சிக் காலத்தின் போது பெற்றுக்கொள்ளப்பட்ட வாழ்க்கைச் செலவுப் படி அமைச்சுக்கு மீளத் தீர்த்துவைக்கப்பட்டது. உத்தியோகத்தர் சம்பந்தமான புலனாய்வின் சிபாரிசுகள் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் அமைச்சிற்கு தெரிவிக்காது உள்நாட்டில் தங்கியிருந்து உரிய படியினை பெற்றுக்கொள்ளல் | இது சம்பந்தமாக முழுமையான விசாரணையை மேற்கொண்டு சேவையில் ஈடுபடுத்தாத காலத்திற்காக செலுத்தப்பட்ட சம்பளங்கள் மற்றும் படிகளை பொறுப்புக் கூறக்கூடிய தரப்பினர்களிடமிருந்து அறவிட |

| | | | |
|---|---|---|---|
| | விடுமுறை மாத்திரம் பயன்படுத்தப்படுவதாக உத்தியோகத்தரினால் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. கணக்காய்விற்காகச் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் இந்த உத்தியோகத்தருக்கு அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஆண்டு வெளிநாட்டு பயிற்சிக் காலத்திற்காக சிங்கப்பூர் டொலர் 26,376 செலுத்தப்பட்டிருந்த போதிலும் இந்த ஆண்டு காலத்தில் 08 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் இலங்கையில் தங்கியிருந்து வெளிநாட்டு பயிற்சிப் படியினைப் பெற்றுக்கொண்டிருந்தார். இலங்கையில் தங்கியிருந்த காலத்தில் இணைய வழிப்படுத்திய பயிற்சியினைப் பெற்றுக்கொண்டதாக அமைச்சுக்கு தெரியப்படுத்தியனால் இக்காலத்திற்காக வெளிநாட்டு பயிற்சிப்படியினைப் பெற்றுக்கொள்வதனைப் போல மாதாந்த சம்பளத்தைப் பெற்றுக்கொள்வதும் சட்டரீதியற்றதாகும். | சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | வேண்டியதுடன் பொறுப்புக் கூறக் கூடிய உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | காசல் வீதியிலுள்ள மகளிர் வைத்தியசாலையினால் 2018 ஆகஸ்ட் மாதத்திலிருந்து 2019 சனவரி மாதம் வரையான காலப்பகுதிக்காக வைத்தியசாலை சுத்திகரிப்பு சேவையை பெற்றுக்கொள்வதற்காக கொடுப்பனவு செய்யும் போது சுத்திகரிப்பு ஊழியர்களின் மாதாந்த வருகை பதிவேடு மற்றும் சம்பள அறிக்கையினைப் பரீட்சிக்காது கொடுப்பனவு செய்யப்பட்டமையின் காரணமாக ரூபா 3.85 மில்லியன் தொகையும் 2018 யூலை 16 ஆந் திகதிய 2080/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் பிரகாரம் சுத்திகரிப்பு சேவையில் ஈடுபட்டுள்ளவர்களுக்காக அரசாங்கத்தின் மூலம் அதிகரித்திருந்த படிக் கொடுப்பனவு சம்பந்தமாக அமைச்சு பெறுகைக் குழுவினால் 2018 திசெம்பர் 17 ஆந் திகதி | அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. ரூபா 3,334,552 மற்றும் 4,437,350தொகைகள் அறவிடப்பட்டு 2020 மார்ச் மாதம் அரசாங்கத்தின் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டது. உண்மையாக இரவு சேவையை வழங்குகின்ற ஊழியர்களுக்காக ஒதுக்கப்பட்ட பணம் வழங்குனருக்கு செலுத்தப்பட்டுள்ளதனால் அந்த நிறுவனம் உரிய ஊழியர்களுக்கு அப்பணத்தை செலுத்தாமை சம்பந்தமாக தொழில் திணைக்களத்திற்கு தெரிவித்து அதற்கிணங்க நடவடிக்கை எடுத்தல் பொருத்தமானதாகும் | இது சம்பந்தமாக முழுமையான விசாரணைகளை மேற்கொண்டு மிகையாக செலுத்திய பணத்தை பொறுப்புக் கூறக்கூடிய தரப்பினர்களிடமிருந்து அறவிட வேண்டியதுடன் பிழையான கொடுப்பனவுகளை மேற்கொண்ட உத்தியோகத்தர்கள் கம்பந்தமாக முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

வழங்கப்பட்டிருந்த 04 நிபந்தனைகளுக்கு மாற்றமாக நிலுவைச் சம்பளத்தை செலுத்தியதன் காரணமாக ரூபா 3.35 மில்லியன் தொகையுமாக மொத்தமாக ரூபா 7.20 மில்லியன் வழங்குனருக்கு மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

.......................................

### 3.1 எதிர்பார்த்த பெறுபேறுகள் (Out Come) பெற்றுக்கொள்ளப்படாமை

...........................................................................................................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) சிறுநீரகத்தை சுத்திகரித்தல் மற்றும் சிறுநீரகத்தை இணைத்தல் தேசிய நிலையத்தினால் நிலையான சொத்துக்களை கணனி மயப்படுத்தி நாளதுவரையாகப் பேணுவதற்காக 2014 ஆம் ஆண்டின் போது ரூபா 250,000 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட மென்பொருட்களும் காசல் வீதியிலுள்ள மகளிர் வைத்தியசாலையினால் குறைந்த வினைத்திறன் சிகிச்சையில் நோயாளிகளைப் பரீட்சிப்பதற்காக ரூபா 1.8 மில்லியன் செலவு செய்து 2019 ஆம் ஆண்டின் போது ஸ்தாபிக்கப்பட்ட மென்பொருளும் 2022 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தேவையான பதவியணியினர் கிடைக்காமையின் காரணமாக சிறுநீரகத்தை சுத்திகரித்தல் மற்றும் சிறுநீரகத்தை பொருத்துதல் தேசிய நிலையத்தில் ஸ்தாபிக்கப்பட்ட மென்பொருளை நாளதுவரையாக பேண முடியாதுள்ளது. காசல் வீதியின் மகளிர் வைத்தியசாலையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள மென்பொருள் முறைமையிலுள்ள பலவீனங்கள் மற்றும் மனித வளங்களின் பற்றாக்குறை காரணமாக 2022 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை அமுல்ப்படுத்த முடியாதிருந்தது. | இந்த மென்பொருளை பயன்படுத்துவதற்கு அல்லது இது சம்பந்தமாக முறையான பரீட்சிப்புக்களை மேற்கொண்டு பொறுப்புக்கூறக்கூடிய தரப்பினர்கள் சம்பந்தமாக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) கணக்காய்விற்காகச் சமர்ப்பித்த தகவல்களின் பிரகாரம் திருகோணமலை பொது வைத்தியசாலை, சியம்பலாங்கமுவ மத்திய மருந்தகம், எல்பிடிய தளவைத்தியசாலை ஆகிய வைத்தியசாலைகளின் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 56.47 மில்லியன் தொகையான | அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. சியம்பலாங்கமுவ மத்திய மருந்தகத்தில் நிர்மாணிக்கப்பட்ட சிறுநீரக நோய் வைத்தியசாலைக் கட்டிடத்தில் பிரதேசத்தின் தேவைப்பாட்டின் பேரில் ஆரம்ப மருத்துவ சிகிச்சைப் பிரிவினை ஆரம்பிப்பதற்கு | இச்சொத்துக்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிர்மாணங்கள் முடிவடைந்திருந்த 07 செயற்திட்டங்கள் மற்றும் மொனறாகலை மாவட்ட பொது வைத்தியசாலையின் ஒப்பந்த பெறுமதி ரூபா 15.82 மில்லியனான ஒரு செயற்திட்டம் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டன. | அதனை எதிர்காலத்தில் மேம்படுத்துவதற்கும் வடமேல் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரினால் அது சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது. மொனறாகலை மாவட்ட பொது வைத்தியசாலை அமைந்துள்ள கட்டிடத்தின் காணியினது சட்டரீதியான உரிமையை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது. அதில் சில பிரிவுகள் பூரணப்படுத்தப்பட்டிருக்காததனால் நிரந்தமாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாதுள்ளது. எனினும் கொவிட் காலப்பகுதியின் போது தேவையான சந்தர்ப்பங்களில் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது. | |

**3.2 செயற்திட்டங்களை பூர்த்தி செய்யாது கைவிடல்**

**..........................................................................**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|
| **.....................................................** | **...........................** | **.....................** |
| (அ) களுத்துறை போதனா வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை கூடத்தில் உள்ளடங்கியிருந்த கண்வாட்டு கட்டிட நிர்மாணத்தின் I ஆம் கட்டத்தின் ரூபா 44.01 மில்லியன் தொகையான செய்த வேலைப் பெறுமதியுடன் 2016 திசெம்பர் 03 ஆந் திகதி வேலை முடிவடைந்திருந்ததுடன் அதன் II ஆம் கட்ட ஒப்பந்த பெறுமதி ரூபா 158.71 மில்லியன் தொகையுடன் 455 நாட்களுக்குள் வேலையை பூர்த்திசெய்யும் நிபந்தனையின் அடிப்படையில் 2017 யூன் 01 ஆந் திகதி ஒப்பந்தக்காரருக்கு வழங்கி 2017 யூலை 21 ஆந் திகதி வேலை ஆரம்பிக்கும் முற்பணமாக | அவதானிப்புக்களுடன் இணங்குகிறேன். கட்டிட நிர்மாணிப்புக்கள் கட்டம் I கட்டம் II இற்காக மொத்தப் பணம் ரூபா 79.77 மில்லியன் செலத்தப்பட்டுள்ளது. முற்பணங்கள் பிணைமுறியை காசாக்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நிர்மாணங்கள் பாதுகாப்பு நிதியத்திற்கு 2022 மார்ச் 31 ஆந் திகதிய கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டுள்து. நிர்மாணங்கள் பாதுகாப்பு நிதியத்தினால் வழங்கப்பட்டுள்ள பதிலுக்கு இணங்க சட்ட ஆலோசனை வேண்டப்பட்டுள்ளது. கடைசி | முற்பண பிணைமுறியை பணமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் கட்டிடங்களுக்காக இன்றுவரை செலவு செய்யப்பட்டுள்ள பணத்தை விளைவற்ற செலவாக மாற்றாமல் இருப்பதற்காக மேலதிக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

வரியுடன் ரூபா 34.29 மில்லியன் செலுத்தப்பட்டது. 2018 ஆகஸ்ட் 30 ஆந் திகதியிலிருந்து ஒப்பந்தக்காரர் வேலைத்தளத்தை கைவிட்டிருந்ததுடன் அதன் காரணமாக 2018 திசெம்பர் 13 ஆந் திகதி அமைச்சினால் ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டிருந்தது. (Terminate). 2018 ஆகஸ்ட் 30 ஆந் திகதியில் உள்ளவாறு நிறைவேற்றப்படாத முற்பணத் தொகை ரூபா 26.67 மில்லியனாக இருந்ததுடன் அதனை அறவீடு செய்வதற்காக ரூபா 29.82 மில்லியனான முற்பண பிணை முறியை பணமாக்ககுவதற்கு 2022 பெப்ரவரி 07 ஆந் திகதி வரை முடியாதிருந்தது. அமைச்சினால் ஒப்பந்தத்தை இரத்துச் செய்தமைக்கு எதிராக ஒப்பந்தக்காரர் மேல் மாகாண வணிக நீதி மன்றத்தில் ஒரு வழக்கினைத் தொடுத்திருந்ததுடன் 2019 நவம்பர் 05 ஆந் திகதி சட்டமா அதிபர் திணைக்களத்தினால் பெறுகைச் சட்டங்கள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்க புதிய ஒப்பந்தக்காரர்களுடன் மிகுதி நிர்மாணங்களை பூர்த்தி செய்யும் இயலுமை காணப்படுகின்றது என தெரிவிக்கப்பட்டிருந்தது. எனினும் 2022 பெப்ரவரி 07 ஆந் திகதி வரை சட்டமா அதிபர் திணைக்களத்தின் சிபாரிசின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு முடியாதிருந்ததுடன் ஒப்பந்தக்காரருடன் அளவீட்டினைப் பெற்று இறுதி விலைப்பட்டியலைத் தயாரிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. கட்டம் I இன் கீழ் ரூபா 44.01 மில்லியனான நிர்மாணங்கள் மற்றும் கட்டம் II இன் கீழான ரூபா 21.29 மில்லியனான நிர்மாணங்களுடனான வேலைகள் கைவிடப்பட்டதன் காரணமாக கட்டிடத்தின் இரண்டாம் மற்றும் மூன்றாம் மாடிகளின் கொங்கிரீட் தூண்கள் மற்றும் தளங்களுக்கு பயன்படுத்தப்பட்ட இரும்புக் கம்பிகள் துருப்பிடித்து அழிவடைந்ததுடன் மழை நீர் விலைப் பட்டியலுக்காக ஒப்பந்த நிறுவனத்தினால் விலைப்பட்டியல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. புதிய நிர்மாணங்களுக்கான 2104 செலவு விடயத்தின் கீழ் கொடுப்பனவு செய்வதற்காக நிதி ஏற்பாடு இல்லாததன் காரணமாக 2001 செலவுத் தலைப்பின் கீழ் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளதுடன் செலவுகளை நிதியற்ற சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்வதற்கும் நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| | கசிதல் மற்றும் பல்வேறு உயிரினங்கள் உள்வருதல் ஆகிய காரணங்களால் கட்டிடம் அழிவடைந்து காணப்பட்டது. 2016 திசெம்பர் 03 ஆந் திகதி வேலை முடிவுறுத்தப்பட்டிருந்த தளமாடியை திருத்தங்கள் செய்ததன் பின்னர் பயன்படுத்தக்கூடியதாக இருந்த போதிலும் 2022 பெப்ரவரி 07 ஆந் திகதி வரை அது பற்றி கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.<br>பிழையான செலவு விடயங்களின் கீழ் இந்த நிர்மாணங்கள் தொடர்பான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்ததனால் செயற்திட்டத்திற்காக செலவு செய்யப்பட்ட ரூபா 91.36 மில்லியன் அமைச்சின் நிதி கூற்றுக்களில் நிதியற்ற சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 27,207.72 மில்லியனான அமைச்சின் நிதி ஏற்பாடு வழங்கப்படும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்ட 31 செயற்திட்டங்களுக்காக 2020 திசெம்பர் 31 வரை ரூபா 4,283.87 மில்லியன் செலவு செய்யப்பட்டதன் பின்னர் பூர்த்திசெய்யப்படாது கைவிடப்பட்டன. இவற்றில் 04 செயற்திட்டங்களுக்காக செலவு செய்யப்பட்ட செலவுகள் தொடர்பான தகவல்கள் உரிய வைத்தியசாலைகளிடம் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றது.<br>இலங்கை பல் மருத்துவ (போதனா) வைத்தியசாலையின் II ஆம் கட்டம் சம்பந்தமாக தேசிய பெறுகைகள் திணைக்களத்தினால் சிபார்சு செய்த பெறுமதிக்குள் மதிப்பீட்டினைத் தயாரிக்குமாறு பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்திற்கு தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் இதுவரை மதிப்பீடு சமர்ப்பிக்கப்படவில்லை.<br>ரிஜ்வே சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் Little heart கட்டிடம் இலங்கை கடற்படையினால் நிர்மாணிக்கப்படுகின்றது.<br>பதுளை பொது வைத்தியசாலை கட்டிடத்திற்காக போதிய நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யாததன் காரணமாக பௌதீக செயல்முன்னேற்றம் 51 சதவீதமாகும். ஹொரண | இன்று வரை செலவு செய்யப்பட்டுள்ள பணம் ஒரு விளைவற்ற செலவாக மாறாமல் இருப்பதற்காக இச்செயற்திட்டம் சம்பந்தமான அனைத்து பொறுப்புக் கூறக்கூடிய தரப்பினர்களும் கூட்டாகச் செயற்பட்டு செயற்திட்ட நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தள வைத்தியசாலைக் கட்டிடமானது காணப்படுகின்ற மதிப்பீட்டிற்குள் வேலையை முடிவுறுத்துவதற்கு முடியாதுள்ளது என ஒப்பந்த நிறுவனத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளதனால் திட்டத்தை மாற்றுவதற்காக திருத்திய மதிப்பீடு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தேவையான அங்கீகாரத்தினைப் பெற்ற பின்னர் வேலை ஆரம்பிக்கப்படுவதுடன் மிகுதி செயற்திட்டம் சம்பந்தமான அனைத்து தகவல்களும் எதிர்காலத்தில் சமர்ப்பிக்கப்படும். | |
| (இ) | அம்பாந்தோட்டை மாவட்ட வைத்தியசாலையினால் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் போது ஒப்பந்தக்காரர்களுடன் உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த முழு ஒப்பந்த பெறுமதி ரூபா 7.40 மில்லியன் தொகையான 02 நிர்மாணங்களின் வேலைகள் ஒப்பந்தக்காரரினால் இடைநடுவில் விடப்பட்டிருந்ததுடன் 2021 யூலை மாதமளவில் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்ட ரூபா 1.5 மில்லியன் விளைவற்றசெலவாக மாறியிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றது. உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் உருவாகிய பொருளாதார பிரச்சினையின் காரணமாக ஆரம்பிக்கப்படாத செயற்திட்டங்களை கைவிடுமாறு வழங்கிய அறிவுறுத்தல்களின் பிரகாரம் தாதிகள் கல்லூரியின் விரிவுரை மண்டபத்தின் நிர்மாணம் ஆரம்பிக்கப்படாது கைவிடப்பட்டது. தாதிகளின் ஓய்வு விடுதிக்காக சமயலறையை நிர்மாணித்தல் 2020 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டதுடன் நிர்ணயிக்கப்பட்டவாறு இச்செயற்திட்டத்தினை முடிவுறுத்தவில்லை. ஒப்பந்தக்காரரால் சமர்ப்பித்த விலைப்பட்டியல்கள் நிர்ணயிக்கப்பட்டவாறு தீர்த்துவைப்பதற்கு முடியாமை இதற்கு பிரதான காரணமாகும். | -மேற்படி- |

### 3.3 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதில் தாமதங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| அமைச்சினால் அமுல்ப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்ட ரூபா 610.93 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயமான 03 நிர்மாண செயற்திட்டங்களின் வேலைகள் 2020 திசெம்பர் 31 ஆந் திகதி வரையும் ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன் அமைசின் கீழுள்ள 08 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களின் ரூபா 3,080.33 மதிப்பீட்டுக் கிரயமான 09 செயற்திட்டங்கள் 01 ஆண்டிலிருந்து 15 ஆண்டுகள் வரையான காலமாக அமுல்ப்படுத்தும் தாமதம் காணப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றது. சில நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கொவிட் 19 தொற்று நோய் நிலைமை, போதியளவு நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்யப்படாமை, நிதி மூலங்களில் காணப்பட்ட பலவீனம் என்பவற்றின் காரணமாக பல நிர்மாணங்கள் தாமதமடைந்துள்ளன. | இச்செயற்திட்டங்கள் சம்பந்தப்பட்ட அனைத்து பொறுப்புக்கூறக்கூடிய தரப்பினர்களும் கூட்டாகச் செயற்பட்டு செயற்திட்ட நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு முறைப்படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.4 பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் செயல்முன்னேற்றம் அடைந்து கொள்ளப்படாத செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் போதியளவு நிதி ஏற்பாடு விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் ரூபா 5,511.23 மில்லியன் மதிப்பீட்டு கிரயமான 05 செயற்திட்டங்களின் நிர்மாணங்கள் தொடர்பாக போதியளவு செயல்முன்னேற்றம் அடைந்து கொள்ளப்பட்டிருக்காததுடன் அதுவரை செலவு செய்யப்பட்ட மொத்த பணம் ரூபா 932.74 மில்லியன் மாத்திரமாகும். | அவதானிபர்புக்களுடன் இணங்கப்படுகின்றது. கொவிட் 19 தொற்று நோய் நிலைமை நிதி மூலங்களில் காணப்பட்ட பலவீனம் மற்றும் ஏனைய பல்வேறு காரணங்களின் அடிப்படையில் இந்நிலைமை உருவாகியிருந்தது. | இச்செயற்திட்டங்கள் சம்பந்தமாக அனைத்து பொறுப்புக்கூறக்கூடிய தரப்பினர்களும் கூட்டாகச் செயற்பட்டு செயற்திட்ட நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு முறையாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.5 வெளிநாட்டு உதவிச் செயற்திட்டங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| Enras Nonus செயற்திட்டத்தின் மூலம் ஹம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலை நிர்மாணிக்கப்பட்டு | அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றது. புதிய வைத்தியசாலையை | கழிவுப் பொருட்களை வெளியேற்றுவதற்காக முறையான நடைமுறை |

2019 திசெம்பர் மாதத்தின் போது செயற்பாட்டு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தன. வைத்தியாசாலையின் இரசாயன கழிவுப் பொருட்களை அப்புறப்படுத்துவதற்காக முறையான நடைமுறை ஸ்தாபிக்கப்பட்டிருக்காததுடன் வைத்தியசாலையின் ஆய்வுகூடம், இரத்த வங்கி சவக்கூடம், லொன்டரி ஆகிய இடங்களிலிருந்து வெளியேற்றப்படும் உக்கிப்போகும் மற்றும் உக்கிப் போகாத இரசாயன கழிவுப் பொருட்களை சுத்தம் செய்யாது முறையற்றவகையில் வைத்தியசாலைக்கு அருகாமையிலுள்ள பள்ளத்தாக்கான இடத்தில் வெளியேற்றப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது அவ்வாறே கழிவு நீர் முறைமை மூலம் வெளியேறும் நீர் கால்வாய்க்குள் விடுவிக்கப்படுவதும் அவதானிக்கப்பட்டதுடன் அந்த நீர் சுற்றாடலுக்கு விடுவிக்கப்படுவதற்கு பொருத்தமான மட்டத்தில் காணப்படுகின்றது என்பதற்காக ஆய்வுகூட பரீட்சிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. வைத்தியசாலை ஆய்வுகூடத்திற்கு வழங்கப்பட்டிருந்த பெறுமதி வெளிப்படுத்தப்படாத 13 உபகரணங்களும் இயந்திரங்களும் ஆய்வுகூடத்தின் செயல்முறைக்கு இணக்கமற்றது என்பதனால் நீண்டகாலமாக பயன்படுத்தாது விளைவற்றுக் காணப்படுவதனால் அந்த உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் ஸ்தாபிப்பதற்கும் செலவு செய்யப்பட்ட பணம் சிக்கனமற்ற செலவாக இருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. ஒரு தனியார் கம்பனியினால் வைத்தியசாலையில் தீ பாதுகாப்பு முறைமை ஸ்தாபிக்கப்பட்டு 2017 நவம்பர் 01 ஆந் திகதி வைத்தியசாலைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அந்த முறைமையின் உத்தரவாத காலம் 2018 நவம்பர் 01 ஆந் திகதி முடிவடைந்திருந்தது. எவ்வாறாயினும் புதிய வைத்தியசாலையின் செயற்பாட்டு நடவடிக்கை 2019 திசெம்பர் மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்ததனால் தீபாதுகாப்பு முறைமையை பயன்படுத்துவதற்கு முன்னர் அதன் உத்தரவாத காலம் காலாவதியாகியிருந்தது. 2020 யூலை நிர்மாணிக்கும் போது இரசாயன பொருட்களை வெளியேற்றுவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக மக்கள் இல்லாத இடத்திற்கு இந்த நீரை வெளியேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கழிவு நீர் முறைமையின் மூலம் வெளியேற்றப்படுகின்ற நீரினை சுற்றாடலுக்கு விடுவிப்பது பொருத்தமான மட்டத்தில் காணப்படுகின்றது என்பதனை ஆய்வுகூட பரிசோதனையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆய்வுகூடத்தின் செயன்முறைக்கு இணக்கமற்ற உபகரணங்கள் உரிய செயற்திட்டத்தினால் கொள்வனவு செய்யப்பட்டள்ளன. தீ பாதுகாப்பு முறைமையிலுள்ள குறைபாடுகள் திருத்தம் செய்யப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கை செய்யப்பட்ட கொடுப்பனவுகளை கைவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. புதிய ஒப்பந்தக்காரரை தெரிவு வெசய்வதற்காக கேள்வி மனுக்கள் கோரப்பட்டுள்ளன. ஸ்தாபிக்கப்படுதல் வேண்டும். இது சம்பந்தமாக முறையான பரிசீலினை மேற்கொண்டு பொறுப்புக் கூறக்கூடிய தரப்பினர்கள் சம்பந்தமாக மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும்.

17 ஆந் திகதியிலிருந்து 2021 யூலை 18 ஆந் திகதி வரையான ஒரு ஆண்டு காலத்திற்கு தீ பாதுகாப்பு முறைமையின் சேவை மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக உரிய நிறுவனத்துடன் ஒரு ஆண்டின் போது 03 தடவைகள் சேவை செய்யும் நிபந்தனைக்கு உட்பட்டு ரூபா 332,500 தொகைக்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதிலும் உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2021 ஏப்ரல் 05 ஆந் திகதி வரை ஒரு சேவை மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2021 மே 05 ஆந் திகதி வரை வைத்தியசாலையின் 09 பொருத்துதல் முறைமைக்காக வழங்குனர்களுடன் வருடாந்த சேவை மற்றும் பராமரிப்பு உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக சில முறைமைகளில் பிழைகள் ஏற்பட்டிருப்பதன் காரணமாக அவற்றினை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு முடியாது விளைவற்றுக் காணப்பட்டது.

**3.6 உள்நாட்டு நிதிகளிலிருந்து அமுல்ப்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
| --- | --- | --- |
| ஹொரன தள வைத்தியசாலையின் ஆறு மாடிகள் கொண்ட சத்திரசிகிச்சை கட்டிடத்தினை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக இலங்கை அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் 2015 செப்தெம்பர் 16 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த ரூபா 1,333.04 மில்லியன் தொடக்க மதிப்பீட்டினை அடிப்படையாகக் கொண்டு வீடமைப்பு மற்றும் நிர்மாணத் துறை அமைச்சின் நிரந்தர தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு வடிவமைத்து நிர்மாணிக்கும் | நிரந்தர தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபார்சினைப் பெற்றுக்கொண்டதன் பின்னர் உரிய செயற்பாடுகள் சம்பந்தமாக அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்த உடன்படிக்கையினை மேற்கொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டது. அதுவரை அளவீட்டுப் பத்திரம், திட்ட வரைபடம், வழக்கமான ஒப்பந்த நிபந்தனை, ஒப்பந்தத்தை வழங்குதல் மற்றும் பொறுப்பேற்றல் கடிதம் என்பன நியதிச் சட்ட ஆவணங்களாக | இச்செயற்திட்டங்களுடன் சம்பந்தப்பட்ட அனைத்து பொறுப்புக்கூறக்கூடிய தரப்பினர்களும் கூட்டாகச் செயற்பட்டு செயற்திட்டங்களின் நடவடிக்கைகளை முடிவுறுத்துவதற்கு முறையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

அடிப்படையில் ரூபா 1,333.04 மில்லியன் வரியுடனான ஒப்பந்த பெறுமதிக்கு 24 மாதங்களுக்குள் வேலையை பூர்த்திசெய்யும் நிபந்தனைக்கு உட்பட்டு 2017 நவம்பர் 27 ஆந் திகதி இலங்கை அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு அந்த ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. ஒப்பந்தத்தை வழங்கும் கடிதத்தின் பிரகாரம் 14 நாட்களுக்குள் வேலை ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் நிர்மாணக் காணியில் காணப்பட்ட சிக்கலின் காரணமாக வேலையை ஆரம்பிப்பதற்கான இயலுமை காணப்படவில்லை என தெரிந்துகொண்டே அது பற்றி கவனிக்காது 2017 திசெம்பர் 15 ஆந் திகதி வேலை ஆரம்பிக்கும் முற்பணமாக வரியுடன் ரூபா 221.14 மில்லியன் ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்ததுடன் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 8:9:1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் முறையான ஒப்பந்த உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. வேலை ஆரம்பிக்கும் முற்பணம் செலுத்திய திகதியிலிருந்து 06 மாதங்களுக்குப் பின்னர் வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த ஒப்பந்தத்திற்காக 2019 ஆம் ஆண்டின் போது ரூபா 19,065 மில்லியன் நிதி ஏற்பாடு ஒதுக்கீடு செய்ததன் பின்னர் 2022 அம் ஆண்டுவரை நிதி ஏற்பாட்டினை ஒதுக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. நிர்மாணங்களில் திருப்திகரமான செயல்முன்னேற்றம் பேணப்படாததன் காரணமாக வேலை ஆரம்பிக்கும் முற்பணத்தில் ரூபா 4.82 மில்லியனை மாத்திரம் நிறைவேற்றுவதற்கு முடியுமாக ருந்ததுடன் 2022 சனவரி 25 ஆந் திகதி வரையும் வேலை பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என ஒப்பந்தம் வழங்கும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. 2020, 2021 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளுக்கான நிதி ஏற்பாடு வேண்டிக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் நிதி ஏற்பாடு வழங்கப்படவில்லை. இச்செயற்திட்டத்தின் முதலாவது மற்றும் இரண்டாவது விலைப்பட்டியல்களின் மூலம் ரூபா 4,817,451 தொகையினை உள்ளடக்குற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மூன்றாவது மற்றும் நான்காவது விலைப்பட்டியல்கள் அங்கீகரித்த மதிப்பீட்டிற்கு இணங்க சமர்ப்பிக்கப்பட்டிருக்காததனால் அந்த விலைப்பட்டியல்களை மீண்டும் அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் திருத்திய மதிப்பீட்டினை சமர்ப்பித்து தாமதமான நிர்மாண செயல் முன்னேற்றத்தினை பேணியதன் காரணமாக இச்செயற்திட்டத்தின் நிர்மாண நடவடிக்கைகள் தாமதமடைந்துள்ளது.

## 3.7 பெறுகைகள்

..............................

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) களுத்துறை போதனா வைத்தியசாலையின் ஆய்வு கூடத்திற்காக வாயு சீராக்கி முறைமையும் மருத்துவ வாயு முறைமையையும் வழங்கி பொருத்துவதற்கான ஒப்பந்தம் 63 நாட்களுக்குள் வேலையை பூர்த்திசெய்யும் அடிப்படையில் ரூபா 5.11 மில்லியனை ஒப்பந்த பெறுமதியுடன் 2020 செப்தெம்பர் 16 ஆந் திகதி ஒரு ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டது. | | |
| **(i)** ஒப்பந்தம் 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கை அதிகாரச் சட்டத்தின் 6(i) (அ) உபபிரிவின் பிரகாரம் பொது ஒப்பந்த பதிவாளரிடம் பதிவுசெய்யப்பட்டிருக்காததுடன் கேள்வி வழங்கியதன் பின்னர் 60 நாட்களுக்குள் ஒப்பந்த உடன்படிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்கிக்கொள்ளப்படுகின்றது. தற்பொழுது பொது ஒப்பந்த உடன்படிக்கை அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | பொது ஒப்பந்த உடன்படிக்கை அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| **(ii)** ரூபா 3.02 மில்லியன் கிரயமான 04 வேலை விடயங்கள் தொடர்பான விலைப்பகுப்பாய்வுகள் மற்றும் அந்த 04 வேலை விடயங்கள் தொடர்பான தொழில்நுட்ப பொருள் விபரக் குறிப்பினை உறுதிப்படுத்துவதற்காக ஒப்பீட்டு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாததனால் அந்த 04 வேலை விடயங்கள் தொடர்பாக மதிப்பீடு செய்யப்பட்ட அலகு விலை தொடர்பான அல்லது நிர்மாணங்களின் சரியான தன்மை தொடர்பாக உறுதிப்படுத்த முடியாதிருந்தது. அந்த 04 வேலை விடயங்களின் கீழ் தொழில்நுட்ப பொருள் விபரக் குறிப்பிற்கு இணங்க பொருத்துவதற்கு இணங்கிக் கொண்ட வகைகளை விட வேறு வகையான துணைக் கருவிகள் வைத்தியசாலையின் இணக்கப்பாடின்றி அல்லது அங்கீகாரமின்றி வழங்கி பொருத்தப்பட்டிருந்தன. அவை தொடர்பாக கொடுப்பனவு | அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. இந்த நிர்மாணங்கள் சம்பந்தமாக தொழில்நுட்ப ஆலோசனை சேவையை வழங்குகின்ற பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்தால் பொருத்தப்பட்டுள்ள உபகரணங்கள் சம்பந்தமாக சிபார்சுகள் வழங்கப்பட்டுள்ளன. பிரதானமாக நோயாளிகளின் சத்திர சிகிச்சை சேவைகளை பேணும் தேவைப்பாட்டினை கருத்தில் கொண்டு உரிய கேள்வி ஆவணங்கள் மற்றும் காணப்படுகின்ற சட்டரீதியான ஒழுங்கு விதிகளின் பிரகாரம் வைத்தியசாலை | இது சம்பந்தமாக முறையான விசாரணைகளை மேற்கொண்டு மேலதிக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செய்வதற்கு முன்னர் இது சம்பந்தமாக வைத்தியசாலை அதிகாரிகளால் அமைச்சிடமிருந்து ஆலோசனைகள் வேண்டப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக ஆழமாக பரீட்சித்து நிரந்தரமான ஆலோசனை வழங்கப்படாது 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வைத்தியசாலை பிராந்திய குழுவிற்கு பிரச்சினையை அனுப்பி தீர்மானத்தை எடுக்குமாறு தெரிவிக்கப்பட்டது. | பெறுகைக் குழுவினால் இது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்பட வேண்டும். பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்திற்கு செலுத்துவதற்கு உள்ள ஆலோசனைக் கட்டண கணக்காய்வு ஐய வினா சம்பந்தமான இறுதித் தீர்மானம் கிடைக்கும் வரை கைவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | களுத்துறை போதனா வைத்தியசாலையின் என்ஜியோகிராம் (Angiogram) அறையை ஆய்வுகூடமாக புதுப்பிக்கும் ஒப்பந்தமானது 63 நாட்களுக்குள் வேலையை பூர்த்தி செய்யும் அடிப்படையில் ரூபா 7,897,480 ஒப்பந்த பெறுமதியுடன் 2020 ஆகஸ்ட் 24 ஆந் திகதி ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டது. | | |
| (i) | ஒப்பந்தக்காரர் 1987 இன் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்த உடன்படிக்கை அதிகாரச் சட்டத்தின் 6(i) (அ) உபபிரிவின் பிரகாரம் பொது ஒப்பந்த பதிவாளரிடம் பதிவுசெய்திருக்கவில்லை. அவ்வாறே கேள்வியை வழங்கியதன் பின்னர் 60 நாட்களுக்குள் ஒப்பந்த உடன்படிக்கை பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்கிக்கொள்ளப்படுகின்றது. தற்பொழுது ஒப்பந்தங்களைப் பதிவு செய்தலானது இந்த வைத்தியசாலையினால் பொது ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் மேற்கொள்ளப்படுகின்றது. | அதிகாரச் சட்டத்திலுள்ள ஒழுங்குவிதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2017 மே 25 ஆந் திகதி பூர்த்திசெய்யப்பட்ட சிகிச்சை கட்டிடத்தின் நான்காவது மாடியில் ரூபா 2.21 மில்லியன் செலவு செய்து பொருத்தப்பட்டிருந்த ஈயம் தகடுகளுடனான 02 கதவுகள் மற்றும் 02 யன்னல்கள் கழற்றி அகற்றப்பட்டு வைத்தியசாலை நிலத்திலிருந்து வெளியே எடுத்துச் செல்வதற்காக பொறியியலாளர் மதிப்பீட்டின் மறைப் பெறுமதியாக ரூபா 400,000 உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பான விலைப்பகுப்பாய்வு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே அந்த கதவுகளையும் யன்னல்களையும் கழற்றி அகற்றுவதற்கான மதிப்பீடு | அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. வழக்கமாக புதிய கட்டிடத்தினை நிர்மாணிக்கும் போது பழைய கட்டிடத்திலிருந்து கழற்றி அகற்றப்பட்ட பகுதிகள் உடைந்த பொருட்களாக கருதப்படுகின்றன. கழற்றி அகற்றும் போது இடம்பெறக்கூடிய சேதங்கள் தொடர்பாக கருத்தில் கொண்டு நிதிப் பெறுமதியை தீர்மானித்தல் வேண்டும். ஒப்பந்தக்காரரிடம் ரூபா 400,000 பிடித்து வைத்துக்கொண்டு | இது சம்பந்தமாக முறையான விசாரணைகளை மேற்கொண்டு மேலதிக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தயாரிக்கப்பட்டது எந்த கொள்கையின் மூலம் என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. இந்த வேலை விடயங்களுக்காக மறைப்பெறுமதி ரூபா 400,000 கிரய மதிப்பீட்டிற்கு உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் கேள்வி ஆவணங்களில் அந்த விலை மறைப்பெறுமதி என்பதற்கு அல்லது அப்பணத்தை செய்த வேலைக்காக கொடுப்பனவு செய்யும் போது கழித்துக்கொள்வதற்கு என்ற தகவல் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | மிகுதிப்பணத்தை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக அமைச்சின் தீர்மானம் கிடைக்கும் வரை பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்திற்கு ஆலோசனைக் கட்டணம் செலுத்துதல் கைவிடப்பட்டுள்ளது. | |
| (iii) | 2020 திசெம்பர் 23 ஆந் திகதியளவில் ரூபா 8.67 மில்லியனனான செய்த வேலைப் பெறுமதியுடன் வேலை முடிவுறுத்தப்பட்டதன் அடிப்படையில் 2021 மே 30 ஆந் திகதி அதில் ரூபா 4 மில்லியன் தொகையான பகுதிக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் இறுதி விலைப்பட்டியலை தீர்த்துவைத்தல் சம்பந்தமாக உருவாகிய சிக்கலுடனான நிலைமை தொடர்பாக ஆலோசனையைப் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக உரிய கவனத்துடன் நடவடிக்கை எடுத்து சரியான ஆலோசனை வழங்கப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக அமைச்சின் நிருவாக உத்தியோகத்தரினால் (கட்டிடங்கள்) ஒப்பந்தக்காரருக்கு ரூபா 5,000 செலுத்தி ஈயம் தட்டுனான 02 கதவுகளையும் 02 யன்னல்களையும் ஒப்பந்தக்காரர் எடுத்துச் செல்வதற்கு சிபார்சு செய்யப்பட்டிருந்தது. இதற்கிணங்க உத்தியோகத்தர் வேண்டுமென்றே அல்லது கவனயீனத்தின் காரணமாக 2017 ஆம் ஆண்டின் போது பொருத்தப்பட்டிருந்த போதிலும் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாத ரூபா 2,214,000 கிரயமான 02 கதவுகளையும் 02 யன்னல்களையும் கழற்றி எடுத்துச் செல்வதற்கு ரூபா 5,000 ஒப்பந்தக்காரருக்கு செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்தின் மற்றும் அமைச்சின் பொறியியல் பிரிவின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பிரச்சினைக்குரிய விடயத்தினை கேள்வி மதிப்பீட்டு நடைமுறையின் போது கவனம் செலுத்தி தீர்மானம் எடுக்க வேண்டியிருந்தது. கேள்விகளை வழங்கியதன் பின்னர் ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைகளின் அடிப்படையில் கொடுப்பனவு செய்யாமைக்கு இயலுமை இல்லை. இது சம்பந்தமாக களுத்துறை போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைக்கு பணிப்பாளர் (கட்டிடங்கள்) பொறியியலாளரின் சிபார்சுகளைப் பெற்று பிரதி பணிப்பாளர் நாயகத்தின் (வழங்கல்கள்) அங்கீகாரத்தின் அடிப்படையில் நிருவாக உத்தியோகத்தரினால் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (iv) | கிரய மதிப்பீட்டில் உள்ளடக்கப்பட்ட ரூபா 1,350,000 தொகையான இரண்டு வேலை விடயங்கள் தொடர்பான விலைப்பகுப்பாய்வு கணக்காய்விற்கச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்படுகின்றது. | இரண்டு விடயங்கள் தொடர்பான விலைப்பகுப்பாய்வு கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். |
| (இ) | மருத்துவ வழங்கல் பிரிவினால் கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலைக்கு போதியளவான N95 முகக்கவசங்கள் வழங்கப்பட்டிருந்த போதிலும் வைத்தியசாலை உத்தியோகத்தரினால் 2020 ஆம் ஆண்டின் போது இரண்டு சந்தர்ப்பங்களில் அவசர தேவைப்பாடாகக் கருதி சந்தை விலை ஒப்பீட்டு முறைமையை பின்பற்றி ரூபா 2,214,000 முழுப் பணமும் செலவு செய்து ஒன்று ரூபா 2,050 வீதம் N95 வகையான 1,080 முகக் கவசங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. முதலாவது சந்தர்ப்பத்தில் கட்டளையிடப்பட்ட 80 முகக் கவசங்கள் 05 மாதங்களுக்கு அண்மித்த காலதாமதத்தில் வழங்கப்பட்டிருந்தமை தொடர்பாக கவனம் செலுத்தாது தேவைப்பாடின்றி இரண்டாவது சந்தர்ப்பத்தின் போது 1,000 N95 முகக் கவசங்கள் அந்த வழங்குனரிடமிருந்தே கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. முதலாவது பெறுகைக்காக கிடைத்திருந்த 04 கேள்வி மனுக்களில் ஒரு கேள்வி மனு போலியானது என்பது உறுதிப்படுத்தப்பட்டமை, இரண்டாவது சந்தர்ப்பத்தில் 06 நிறுவனங்களிடமிருந்து பெக்ஸ் மூலம் விலை மனுக்கள் கோரப்பட்டது என குறிப்பு இடப்பட்டிருந்த போதிலும் அது பற்றி உறுதிப்படுத்துவதற்காக அது பற்றிய சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமை, 02 கேள்வி மனுதாரர்கள் வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை பாவனைப் பொருட்களுக்காக பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களாக இல்லாமை, இன்னுமொரு கேள்வி மனுதாரர் முகக் கவச வழங்குனராக இல்லாமை ஆகிய விடயங்களின் காரணமாக முதலாவது மற்றும் இரண்டாவது பெறுகைகளின் போது வெளிப்படைத் தன்மையை பாதுகாப்பதற்கு வைத்தியசாலை தவறியிருந்தது. 2007 மருந்துகள் மற்றும் மருத்துவ துணைக் கருவிகள் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 6.6.2 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் அவசர பெறுகைகளின் போது அரசாங்க நிறுவனங்களை தொடர்புகொள்ள வேண்டிய போதிலும் அரசாங்க | அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. மருத்துவ வழங்கல் பிரிவினால் வழங்கப்பட்டிருந்த N95 முகக் கவசங்களைப் பயன்படுத்துதல் ஆய்வு கூட ஊழியர்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலானது எனக் குறிப்பிட்டு நுண் அங்கிகள் நிபுணத்துவ மருத்துவரின் வேண்டுதலின் பிரகாரம் இக்கொள்வனவுகள் இடம்பெற்றன. முதலாவது 80 முகக் கவசங்கள் வழங்கும் காலப்பகுதியில் கொவிட் தொற்று நோய் நிலைமை தீவிரமடைந்ததனால் கட்டளைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதனால் வழங்கல் தாமதமடைந்திருந்தது. Imedra Health Care (Pvt) Ltd நிறுவனத்தின் முகவரிடம் தொலைபேசி மூலம் விசாரித்து விலை மனுக்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. அரசாங்க மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திடம் அச்சந்தர்ப்பத்தில் இருப்புக்கள் இல்லாததனால் பிராந்திய ரீதியாக விலை மனுக்கள் கோரப்பட்டு கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இவ்வாறான பிராந்திய ரீதியாக கொள்வனவு செய்யும் இயலுமையினை முடியுமான அளவு கொண்டு மருந்து வழங்கல் பிரிவின் | இது சம்பந்தமாக முறையான விசாரணைகள் மேற்கொண்டு மேலதிக நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்திடம் விலை விசதரணைகள் மேற்கொள்ளாமையால் அச்சந்தர்ப்பத்தில் N 95 முகக் கவசங்கள் ரூபா 475 வீதம் கொள்வனவு செய்யும் இயலுமை இழக்கப்பட்டிருந்ததுடன் அதன் காரணமாக ஒரு முகக் கவசத்திற்காக ரூபா 1,575 வீதம் 1080 முகக் கவசங்களுக்காக ரூபா 1,701,000 மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தது. | ஆலோசனை மற்றும் அங்கீகாரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஈ) | 2021 ஆம் ஆண்டின் போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் நோய்க்குறி ஆய்வு சார்ந்த ஆய்வு கூடத்திற்காக (Path Lab) தேசிய போட்டி விலை மனுக்கோரல் முறைமையை பின்பற்றி 03 Fully Automated Biochmistry analyzer உபகரணங்கள் ரூபா 22.2 மில்லியன் தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்டு அவற்றில் இரண்டு உபகரணங்களுக்காக ரூபா 15 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.2, 4.2.3, 2.12, 6.3.6 மற்றும் 2.14.1 ஆம் வழிகாட்டிகளுக்கு இணங்க பெறுகை நடவடிக்கைகள் இடம்பெற்றிருக்கவில்லை. இந்த ஆய்வு கூடத்தில் 7,871 சராசரி நாளாந்த பரிசோதனை தேவைப்பாட்டினை மிகைத்து ஆகக் குறைந்தது 12,000 நாளாந்த பரிசோதனைகளை மேற்கொள்ளக் கூடிய 03 புதிய உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 02 உபகரணங்கள் குறைவாகப் பயன்படுத்தப்பட்டும் 01 உபகரணம் பயன்படுத்தப்படாதும் காணப்பட்டன. இந்த உபகரணங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப பொருள் விபரக் குறிப்புக்களைப் பயன்படுத்துவதற்கு பதிலாக உயிரியல் மருத்துவ பொறியல் சேவைப் பிரிவின் அங்கீகாரமில்லாதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப பொருள் விபரக் குறிப்புக்குள் அடங்கியுள்ள 05 தீர்மானமிக்க வரையறைகள் (Critical Criteria) உள்ளடக்கப்படாத புதிய பொருள் விபரக் குறிப்பு தொகுதியினைப் பயன்படுத்தி பெறுகைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. பெறுகைக் குழுவினால் சிபார்சு செய்யப்பட்டிருந்த வழங்குனரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட 02 உபகரணங்களில் உள்ளடங்கியிருந்த 03 தீர்மானமிக்க வரையறைகளின் தேவைப்பாடானது பொருள் விபரக்குறிப்பிற்கு மாற்றமானவைகளாகும். ஏற்றுக்கொள்ளப்பட்ட பொருள் விபரக்குறிப்புக்களின் பிரகாரம் அலகுகள் | அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஒழுங்குவிதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. நாளாந்த பரீட்சிப்புக்கள் 7000-8000 இற்கும் இடைப்பட்ட அளவில் 08 Biochemistry Analyzer களினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அவற்றில் 06 உபகரணங்கள் 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பழமையானவையாகும். அதற்கிணங்க அடுத்துவரும் ஆண்டுகளின் தேவைப்பாடுகளையும் கருத்தில் கொண்டு இத்தேவைப்பாடு இனங்காணப்பட்டுள்ளது. பொருள் விபரக் குறிப்பானது வைத்தியசாலையின் தேவைப்பாட்டிற்கு இணங்க பொருத்தமான வகையில் தயாரிக்கப்பட்டது. தொடக்க கேள்வி மனுக்களை மதிப்பீடு செய்யும் போது உரிய கேள்வி மனுதாரர்கள் தேவையான ஆவணங்களை பூர்த்தி செய்திருக்காததனால் விபரமான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இயந்திரங்களை ஸ்தாபிக்கையில் OEM சான்றிதழ் பரீட்சிக்கப்படுகின்றது. | இது தொடர்பாக முறையான பரீட்சிப்புக்களை மேற்கொண்டு மேலதிக நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

திறந்த முறைமையானதாக இருக்க வேண்டியதுடன் எந்தவொரு நியயாயமான தரமுள்ள சேதனப் பொருட்களினைப் பயன்படுத்தி சரியான பரிசோதனை பெறுபேறுகளை பெற்றுக்கொள்ளலாம். அந்த தீர்மானம்மிக்கதான பொருள் விபரக் குறிப்பிற்கு மாற்றமாக இப்பெறுகைக்காக தொழில்நுட்ப பொருள் விபரக் குறிப்பு தயாரிக்கப்பட்டிருந்ததனால் கேள்வி மனுதாரரின் தற்றுணிபின் பிரகாரம் திறந்த முறைமைக்கு பதிலாக மூடப்பட்ட முறைமையுடனான 02 உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தன. அதன் காரணமாக உபகரணங்களினால் மேற்கொள்ளப்பட்ட பரீட்சிப்புக்களுக்காக தேவைப்படுகின்ற சேதனப் பொருட்களின் (reagent) இலகுத்தன்மை மற்றும் விலைகள் சம்பந்தமாக மதிப்பீட்டினை மேற்கொள்ளாது இந்த 03 உபகரணங்களையும் கொள்வனவு செய்தல் இடம்பெற்றதனால் வழங்குனரின் தற்றுணிபின் பிரகாரம் தீர்மானம் செய்வதற்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருந்தது. 02 உபகரணங்களின் கிரயம் ரூபா 48.69 மில்லியனை விட குறைந்த பணமாகிய் ரூபா 15 மில்லியனுக்கு 02 உபகரணங்களை வழங்கி சேதனப் பொருட்களின் விலையினை வழங்குனரின் தற்றுணிபின் பேரில் தீர்மானிப்பதற்கு வாய்ப்புக்கள் வழங்கப்பட்டிருந்தது என வழங்குனரினால் இந்த வகையான உபகரணங்களுக்காக பயன்படுத்தப்படுகின்ற சேதனப் பொருட்கள், பயன்பாட்டுப் பொருள், மற்றும் மதிப்பாய்வு (Reagent, consumable, Calibrator) என்பவற்றிற்காக 2019 செப்தெம்பர் 17 ஆந் திகதி சமர்ப்பித்திருந்த அலகு விலைகள் மற்றும் 2020 செப்தெம்பர் 29 ஆந் திகதி சமர்ப்பித்திருந்த அலகு விலைகளை கவனத்திற்கு எடுத்துக்கொண்ட போது 87 சேதனப் பொருட்கள் வகைக்காக ரூபா 2,558 இலிருந்து ரூபா 52,025 வரையும் 9 வகையான பாவனைப் பொருட்களுக்காக ரூபா 1,821 இலிருந்து ரூபா 4,335 வரையும் மற்றும் 19 வகையான மதிப்பாராய்வுகளுக்காக ரூபா 3,468 இலிருந்து ரூபா 10,838 வரையும் ஆக விலை அதிகரித்திருந்தமையினூடாக உறுதிப்படுத்தப்பட்டது. உற்பத்தி மூலங்கள் மற்றும் உற்பத்தி திகதியை உறுதிப்படுத்துகின்ற சான்றிதழ் (Original Equipment Manufacture (OEM) and the date of Manufacture Certificate) பெற்றுக்கொண்டிருக்க வேண்டியது தீர்மானமிக்க வரையறையாக (Ceitical

இதற்கு முன்னர் பரீட்சிப்புக்கள் செய்யப்படுவதில்லை. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் சேதனப் பொருட்களை (Reagents) விட இயந்திரங்கள் சம்பந்தமாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது 5 ஆண்டுகள் செல்லும் வரை எதிர்தாக்கலை வழங்குவதற்கு நிறுவனத்தினால் இணங்கிக்கொள்ளப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இயந்திரங்களைப் போல உரிய சேதனப் பொருட்கள் (Reagents) தொடர்பாக கவனம் செலுத்தி மதிப்பீட்டினை மேற்கொள்ளுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. இயந்திரங்கள் இணைக்கப்படாது சேதனப் பொருட்கள் ஈடுபடுத்துவதன் மூலம் இயந்திரத்தின் Tubing முறைமை Cuvettes மற்றும் Volume dispensers களின் ஆயுட்காலம் குறுகியதாக இருக்கலாம் இதன் காரணமாக பரீட்சிப்புக்களின் தரத்திலும் சிக்கல்கள் ஏற்படாம் மதிப்பீடுகளைப் பரீட்சிப்பதற்காக தேவையான சேதனப் பொருட்கள் வழங்குனரினால் வழங்குதல் வழக்கம் போல இடம்பெறுகின்றது. இந்த வழங்கல் சம்பந்தமாகவும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இவ்விடயங்களை கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்படும். உரிய கேள்வி மனுதாரரினால் பொருள் விபரம் இலக்கம்

Criteria ) இருந்த போதிலும் கொள்வனவு செய்யப்பட்ட 02 உபகரணங்கள் சம்பந்தமாக அச்சான்றிதழ்கள் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்காததனால் அந்த 02 உபகரணங்களும் Brand New தரத்திலுள்ள உபகரணங்களா என்பதனை கணக்காய்வின் போது உறுதிப்படுத்த முடியாதிருந்தது. ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழில்நுட்ப பொருள் விபரக் குறிப்பின் பிரகாரம் மதிப்பீட்டப் பரிசோதனைக் (Evalution Test) காக தேவைப்படுகின்ற எதிர்தாக்கல் மற்றும் ஏனைய பாவனைப் பொருட்கள் (Startup Kit) வழங்கப்பட வேண்டிய போதிலும் வைத்தியசாலையினால் தயாரிக்கப்பட்ட பொருள் விபரக் குறிப்புக்களில் அந்த பொருள் விபரங்கள் குறிப்பிடப்பட்டிருக்காததனால் மதிப்பீட்டுப் பரிசோதனைக்காக போதியளவான வகையில் எதிர்தாக்கல், மதிப்பாராய்வு என்பன வழங்குனரினால் வழங்கப்பட்டிருக்கவில்லை. தேவைப்பாட்டினை பொருள் விபரக் குறிப்பிற்கான பதிலாக கேள்வி ஆவணங்களில் "Limited Channels Will be Opened On Customer request" என்பதாக காட்டப்பட்டிருந்தும் அது பிழையாக "15 Channelscan be Opened on request" என்பதாக கேள்வி மதிப்பீடுட்டு ஆவணங்களில் குறிப்பிட்டு கேள்வி மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டிருந்தது. வழங்கப்பட்ட 02 உபகரணங்களில் திறக்கக்கூடியதான பரீட்சிப்பு வகை அல்லது Channels அளவு எவ்வளவு என்பது 2022 சனவரி 31 ஆந் திகதி வரையும் இனங்காணப்படவில்லை. பெறுகை நடவடிக்கைகளுக்காக 03 ஆண்டுகளை விட அதிக காலம் எடுத்திருந்த போதிலும் 02 உபகரணங்களை ஸ்தாபிப்பதற்காக பொருத்தமான இடம் மற்றும் அதற்குத் தேவையான களிர்காப்பு வசதிகள் மற்றும் தேவையான மின்வலு இயலளவினை பெற்றுக்கொள்ளல் பூரணப்படுத்தப்பட்டிருக்காததனால் ரூபா 15 மில்லியன் கிரயமான 02 உபகரணங்களய் 2022 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை நோயாளி சிகிச்சை நடவடிக்கைகளுக்காக முழுமையாகப் பயன்படுத்தப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. மிகுதியான உபகரணங்களை கொள்வனவு செய்யும் கட்டளைகள் நிபந்தனைகளுக்கு மாற்றமாக 23 வாரங்களுக்கு மேற்பட்ட தாமதத்தில் வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2022 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை அதன் மதிப்பீட்டு பரிசோதனை

15 இனை வழங்கலாம் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. திறக்கப்பட வேண்டிய பரீட்சிப்பு வகையினை இனங்கண்டு சமர்ப்பிக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளது. வைத்தியசாலைக்காக நிரந்தர மருத்துவ பொறியியலாளர் இல்லாததனால் இடம்பெறுகின்ற நடைமுறை சிக்கல்களினால் நோய் ஆய்வுப் பிரிவிற்குப் பொறுப்பான நிபுணரினால் பொறுப்பேற்பக்கப்பட்டுள்ளது. அதன் போது அவரின் கையொப்பம் இடப்பட்டிருந்தும் சில தவறுகளினால் திகதியை குறிப்பிடுவதற்கு அந்த உத்தியோகத்தருக்கு முடியாதிருந்தது. இவ்வாறான அதிக நுட்பம் வாய்ந்த விலை கூடிய இயந்திரங்கள் ஸ்தாபிக்கப்பட்டது என்பதனை முறையான நடைமுறைகளினூடாக தெரிவிக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| | மேற்கொள்ளப்பட்டு நோயாளிகளை பரீட்சிக்கும் நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ரூபா 720,000 தொகையான செயலாற்றல் பிணை முறியும் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | | |
| (உ) | 2021 ஆம் ஆண்டின் போது கொழும்பு தேசிய வைத்தியசாலையில் கதிரியக்க தொற்றுநோய்க்காப்பு ஆய்வுகூடத்திற்காக (Radio Immunoassay Lab) தேசிய போட்டி கேள்வி மனு கோரும் முறைமையை பின்பற்றி ரூபா 4.5 மில்லியன் செலவு செய்து Fully Automated Hormone Analyzer (Architect 2000SR i2000SR ) உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.12, 4.2.2, 6.3.6 மற்றும் 5.4.10 ஆம் வழிகாட்டிகள் மற்றும் பெறுகை வழிகாட்டிக் கையோட்டின் 2.14.1 மற்றும் 4.2.3 ஆம் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த உபகரணங்கள் தொடர்பாக தயாரிக்கப்பட்ட தொழில்நுட்ப பொருள் விபரக்குறிப்பிற்காக உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த உபகரணங்களின் மூலம் மேற்கொள்ளக்கூடிய 61 வகையான பரீட்சிப்புக்களின் தேவைப்பாடு இனங்காணப்பட்டிருந்த போதிலும் அத்தேவைப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கான எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த 61 வகையான பரீட்சிப்புக்களில் 21 வகையான பரீட்சிப்புக்களும் காணப்பட்ட பழைய Hormone Analyzer உபகரணங்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளக்கூடியதாக இருந்த போதிலும் கடந்த 03 ஆண்டு காலத்துள் அந்த 21 வகையான பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த புதிய உபகரணங்கள் 2021 யூலை 07 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்டு 2022 சனவரி 31 ஆந் திகதி வரையான 08 மாத காலத்தில் 22 வகையான பரீட்சிப்புக்கள் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது எனவும் அவற்றில் 21 பரீட்சிப்புக்கள் பழைய இயந்திரங்களின் மூலம் மேற்கொள்ளக்கூடிய பரீட்சிப்பு வகைகள் எனவும் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே தயாரிக்கப்பட்ட தொழில்நுட்ப | அடுத்துவரும் பெறுகைகளின் போது அரசாங்கத்தின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் தேவைப்பாட்டினை பூரணப்படுத்துமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. வைத்தியசாலையில் அடுத்துவரும் 10 ஆண்டுகளுக்காக எதிர்கால தேவைப்பாட்டினை எதிர்பார்த்து 61 பரீட்சிப்புக்களுடன் பொருள் விபரக் குறிப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. Fully Automated Hormone Analyzr Analyzer இயந்திரத்தின் பகுப்பாய்வுக் காலம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதனால் தொற்று நோய் காப்பில் இருந்த பரீட்சிப்புக்களில் 21 பரீட்சிப்புக்களை மேற்கொள்ள முடியாதிருந்தது. ஆய்வுகூடமானது கொழும்பு தேசிய வைத்தியசாலைக்கு மாத்திரம் பல வைத்தியசாலைகளுக்கான 12 வகையான பரீட்சிப்புக்களை மேற்கொள்கின்றது. வைத்தியசாலைகளுக்குத் தேவையான இயலளவைக் கொண்ட மாத்திரம் பல உபகரணங்கள் தொடர்பான பொருள் விபரக்குறிப்பானது உயிரியல் மருத்துவ பொறியியல் சேவைப்பிரிவின் இணைய தளத்தில் வெளிப்படுத்தப்படாததனால் | இது சம்பந்தமாக முறையான விசாரணைகள் மேற்கொண்டு மேலதிக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

பொருள் விபரக் குறிப்புக்களுக்கு The Unit Shall be an Open system and shall produce accurate accurate test result using any reasonably good quality reagent என பொருள் விபரக் குறிப்பு உள்ளடக்கி இருக்காமையின் காரணமாக உபகரணங்களுக்கு தேவையான சேதனப் பொருள் (Reagents) போட்டி விலை மனுக்களின் கீழ் பெற்றுக்கொள்வதற்கு இருந்த வாய்ப்புக்களும் The ability to Provide a back up backup system on temporary basis etc. என்ற பொருள் விபரக் குறிப்பு உள்ளடக்கப்பட்டிருக்காமையின் காரணமாக உபகரணத்தில் இடம்பெறுகின்ற செயற்படாதிருத்தல்கள் மற்றும் உடைதல்களை நல்ல நிலைக்கு மாற்றும் வரை மாதிரிகளின் பரீட்சிப்பு சேவையை தொடர்ச்சியாக பேணுவதற்கு உள்ள இயலுமையும் பொருட்களை விடுவிக்கும் சான்றிதழின் பிரகாரம் இந்த உபகரணத்தின் கிரயம் ரூபா 21.67 மில்லியனாக இருந்த போதிலும் ரூபா 4.5 மில்லியன் ஆகிய குறைந்த விலைக்கு வழங்குனரினால் வழங்கப்பட்டிருந்தது. எனினும் உபகரணங்களின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பரீட்சிப்பிற்காக தேவையான சேதனப் பொருட்களின் (reagents) சுலபத்தன்மை மற்றும் விலைகள் சம்பந்தமாக மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக உபகரணங்களை குறைந்த விலைக்கு வழங்கி சேதனப் பொருட்களின் விலை வழங்குனர்களின் தற்றுணிபின் பேரில் தீர்மானிப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. ஆய்வுகூட தொழில்நுட்ப பதவியணியினருக்கு (Laboratory Technical Staff) உபகரணங்களை செயற்படுத்துதல் சம்பந்தமாக துறை ரீதியான பயிற்சியினை (Onsite Training) உபகரணங்களை ஸ்தாபித்தல் சம்பந்தமாக மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியாளர்களுக்கு (Medical Laboratery Technologist) போதியளவு பயிற்சிகளும் கட்டணங்களை அறவீடு செய்யாது வழங்கப்பட வேண்டிய அத்தேவைப்பாடு பூரணப்படுத்தப்பட்டதனை உறுதிப்படுத்துவது தொடர்பாக எழுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே தேவைப்பாடானது பொருள் விபரக் குறிப்பின் பிரகாரம் கேள்வி மனுதாரரினால் உபகரணங்கள் ஸ்தாபிக்கப்பட்டு ஒரு ஆண்டிற்குள் உபகரணங்களை

அப்போதைய தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவினபல் அந்த உபகரணங்களுக்கு பொருந்துகின்ற வகையில் பொருள் விபரக்குறிப்பு தயாரிக்கப்பட்டது. මෙවැනි Hormone Analyzer இவ்வாறான Open System பயன்படுத்த முடியாது மேலும் இடம்பெறுகின்ற உடைதல்கள் சம்பந்தமான பொறுப்பு சான்றிதழ் மற்றும் சேவை பராமரிப்பிற்காக உடன்படிக்கை செய்து கொள்வதற்கான விடயங்களை உள்ளடக்கி பொருள் விபரக் குறிப்பு தயாரிக்கப்பட்டது. சுங்கத்திலிருந்து பொருட்களை விடுவித்த பணத்துக்கு அல்லது சமர்ப்பித்துள்ள கேள்வி மனுக்காக தொழில்நுட்ப மதிப்பீடு இடம்பெறுகின்றது. இயந்திரங்களை கொள்வனவு செய்த வழங்குனரிடமிருந்து சேதனப் பொருட்களை கொள்வனவு செய்வதற்கு ஏற்படுகின்றது. தேசிய முகவர் நிறுவனத்தினால் ஆய்வுகூடத்தின் மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளருக்கு (MLT) இயந்திர செயற்பாடுகள் தொடர்பாக சில பயிற்சிகள் வழங்கப்பட்டன. அவர் சரியாக பரிசோதனைகளை மேற்கொள்கின்றார். COVID 19 தொற்று நோயின் காரணமாக மேலே கூறப்பட்ட வெளிநாட்டுப் பயிற்சியினை ஒழுங்குபடுத்துவதற்கு முடியாதிருந்தது. எதிர்காலத்தில் பயிற்சிகளை ஒழுங்குபடுத்துமாறு உள்நாட்டு முகவருக்கு

| | | | |
|---|---|---|---|
| | பயன்படுத்துவதிலிருந்தும், மற்றும் அதிலிருந்து உருவாகின்ற சிக்கல்களை தீர்த்துவைப்பது சம்பந்தமான விபரமான வெளிநாட்டு பயிற்சியினை (Coprhensive Comprehensive training in overseas training center on applications and trouble shooting) மருத்துவ ஆய்வுகூட தெலாழில்நுட்பவியளாலருக்கு கட்டணம் அறவிடப்படாது வழங்கப்பட வேண்டிய போதிலும் இந்த உபகரணம் ஸ்தாபிக்கப்பட்டு 8 மாதங்களை அண்மித்த காலம் கடந்திருந்தும் இன்றுவரை அவ்வாறான பயிற்சியை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டடிருக்கவில்லை. | தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | |
| (ஊ) | கொழும்பு தேசிய வைத்தியசாலையின் நோய்க்குறி ஆய்வு ஆய்வுகூடத்திற்காக (Path Lab) தேசிய போட்டி விலை மனுக்கோரல் முறைமையினைப் பின்பற்றி Fully Automated Immunoassay Analyzer உபகரணம் 2021 ஆகஸ்ட் 13 ஆந் திகதி ரூபா 5 மில்லியனுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2.12, மற்றும் 4.2.2 ஆம் வழிகாட்டிகள் மற்றும் பெறுகை செயற்பாட்டுக் கோவையின் 2.14.1, 4.2.3 , 5.3.11 மற்றும் 6.3.6 ஆம் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க பெறுகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இந்த உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக தயாரிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களுக்கு இணங்க 63 வகையான பரிசோதனைத் தேவைப்பாடுகள் தீர்மானமிக்கதான வரையறைகளாக (Critical Criteria) குறிப்பிடப்பட்டிருந்தும் அத்தேவைப்பாட்டினை இனங்காண்பது சம்பந்தமான எழுத்து மூல சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. அவ்வாறே இந்த உபகரணங்கள் 2021 ஆகஸ்ட் 16 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 மார்ச் 31 ஆந் திகதி வரையிலான 07 மாத காலப்பகுதியின் போது Troponin I பரீட்சிப்பு மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் அத்தீர்மானமானது ஆய்கூடத்தில் காணப்பட்ட Nano Chack Check (POCT) உபகரணத்தின் மூலமும், காப்பு கதிர் வீச்சு அய்வுகூடத்தில் காணப்பட்ட ADVIA Centaur... XP Centaur XP ஆகிய உபகரணம் மற்றும் புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட Fully Automated Hormone Analyzer உபகரணத்தின் மூலமும் | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. Nano Check (POCT) Analyzer களில் பல குறைபாடுகள் உள்ளதனால் அதிக எதிர்விளைவுள்ள Troponin I பரிசோதனைகளை மேற்கொள்வதற்காக இரவு ஆய்வுகூடங்களில் நோய்த் தடுப்பு பகுப்பாய்வுகள் ஸ்தாபிக்கப்பட்டது. பல பரிசோதனைகளை மேற்கொள்வதற்கு பகல் ஆய்வுகூடம் முழுமையான தன்னியக்க பகுப்பாய்வினை (Fully Automated Analyzer) பயன்படுத்துகின்றது. வைத்தியசாலைக்கு தேவைப்படுகின்ற இயலளவினைக் கொண்ட உபகரணங்களுக்குரிய பொருள் விபரக் குறிப்பு உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவின் இணைய தளத்தில் வெளியிடப்படாதிருந்ததனால் அப்போதைய தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் அந்த | இது சம்பந்தமாக முறையான விசாரணைகளை மேற்கொண்டு மேலதிக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

மேற்கொள்ளக்கூடியதாக இருந்தது. அதற்கிணங்க இந்த உபகரண தேவைப்பாடின்றி கொள்வனவு செய்யப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. அவ்வாறே இந்த உபகரணங்கள் தொடர்பாக அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப பொருள் விபரக் குறிப்புக்கள் உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவினால் தயாரிக்கப்பட்டிருக்காததனால் வைத்தியசாலை அதிகாரிகளால் தொழில்நுட்ப பொருள் விபரக் குறிப்பு தயாரிக்கப்பட்டிருந்த அந்த பொருள் விபரக் குறிப்பு தயாரிக்கப்பட்டிருந்த அந்த பொருள் விபரக் குறிப்பிற்காக உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளபர்பட்டிருக்கவில்லை. தயாரிக்கப்பட்ட தொழில்நுட்ப பொருள் விபரக் குறிப்பிற்கு The Unit Shall be an open System and Shall Produce Assurant accurate test result using any reasonably good guality quality reagent என்ற பொருள் விபரக் குறிப்பு உள்ளடக்கப்படாமையின் காரணமாக உபகரணத்திற்குத் தேவையான பரிசோதனைப் பொருட்களின் (reagents) போட்டி விலையின் கீழ் பெற்றுக்கொள்வதற்கு இருந்த வாய்ப்பும் The ability to provide abackup a backup system on temporary basic etc என்ற பொருள் விபரக் குறிப்பில் உள்ளடக்கப்பட்டிருந்ததன் காரணமாக உபகரணத்தில் இடம்பெறுகின்ற செயற்படாதிருக்கின்றமை மற்றும் பழுதடைதல்களின் போது அவற்றை நல்ல நிலைக்கு மாற்றும் வரை சேவைகளை தொடர்ச்சியாக பேணுவதற்கு உள்ள இயலுமையும் இழக்கப்பட்டிருந்தது. மேலும் இலங்கை சுங்கத்திடமிருந்து பொருட்களை விடுவிக்கும் சான்றிதழின் பிரகாரம் இந்த உபகரணங்களின் கிரயம் ரூபா 13.79 மில்லியனாக இருந்த போதிலும் ரூபா 5 மில்லியன் ஆகிய குறைந்த விலைக்கு வழங்குனரினால் வழங்கப்பட்டிருந்த போதிலும் உபகரணங்களால் மேற்கொள்ளப்படுகின்ற பரீட்சிப்பிற்காக தேவைப்படுகின்ற பரிசோதனைப் பொருட்களின் (reagents) சுலபத்தன்மை விலைகள் சம்பந்தமான தொற்று நோய் மதிப்பீடு செய்யப்பட்டமையின் காரணமாக உபகரணங்களை குறைந்த விலைக்கு வழங்கி பரிசோதனைப் பொருள்களின் விலையை வழங்குனரின் தற்றுணிபின் பேரில் தீர்மானிப்பதற்கு உபகரணங்களுக்கு பொருந்தும் வகையிலான பொருள் விபரக் குறிப்பு தயாரிக்கப்பட்டுள்ளது.

Fully Automated Immunossay Immunoassay Analyzer களுக்கான பொருள் விபரக் குறிப்பு வைத்தியசாலையின் தேவைப்பாட்டிற்கு இணங்க பொருத்தமான வகையில் தயாரித்தல் இடம்பெறுகின்றது. இவ்வாறான Hormone Analyzer இயந்திரங்களுக்காக Open System பயன்படுத்த முடியாது . இடம்பெறுகின்ற பழுதுகள் சம்பந்தமான உத்தரவாதத்துடன் மற்றும் சேவை பராமரிப்பிற்காக உடன்படிக்கை செய்வதற்கான விடயங்களை உள்ளடக்கி பொருள் விபரக் குறிப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. சுங்கத்திலிருந்து பொருட்கள் விடுவிக்கப்பட்ட பணத்திற்கு அல்லாது உரிய கேள்வி மனுதாரரினால் சம்பர்ப்பிக்கப்பட்ட கேள்வி மனுவினைப் பயன்படுத்தி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் மதிப்பீடு செய்யப்படுகின்றது. வைத்தியசாலைக்காக நிரந்தர உயிரியல் மருத்துவ பொறியியலாளர் இல்லாததனால் உருவாகியுள்ள நடைமுறை சிக்கலின் அடிப்படையில் நோயியல் பிரிவிற்கு பொறுப்பான விசேட நிபுணத்துவ வைத்தியரினால் உபகரணங்கள் பொறுப்பேற்க்கப்பட்டுள்ளது . எதிர்காலத்தில் இவ்வாறான மேற்பார்வை

| | | | |
|---|---|---|---|
| | இடமளிக்கப்பட்டிருந்தது. வழங்குனரினால் இந்த வகையான உபகரணங்களுக்காக பயன்படுத்துகின்ற பரிசோதனைப் பொருள் முறைமைப்படுத்திய பரிசோதனைப் பொருள், பாவனைப் பொருள் என்பவற்றிற்காக 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 ஆம் ஆண்டின் போது 21 சதவீதத்திலிருந்து 51 சதவீதம் வரை விலையை அதிகரித்தமையின் மூலம் அது பற்றி உறுதிப்படுத்தப்பட்டது. | செய்யப்பட வேண்டிய இயந்திரங்களை பெறுப்பேற்பதற்காக பொருத்தமான நடைமுறையினைத் தயாரிக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டது. இவ்வாறான அதிக தொழில்நுட்பம் வாய்ந்த மற்றும் அதிக விலையுள்ள இயந்திரங்கள் ஸ்தாபிக்கப்பட்டது என்பதற்கு முறையான நடைமுறைகளினூடாக தெரிவிக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளன. தேவைப்பாட்டு பொருள் விபரக் குறிப்புக்களுக்கு இணங்க வழங்குனரினால் புதிய அச்சிடல் இயந்திரம் வழங்கப்பட்ட போதிலும் புதிய ஒரு கணனி வழங்கப்படவில்லை. மீளப் பெற்றுக்கொள்ளும் அடிப்படையில் பயன்படுத்திய ஒரு கணனி வழங்கப்பட்டுள்ளது. உடன்படிக்கையின் பிரகாரம் ஒரு புதிய கணனியை வெகுவிரைவில் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | |
| (எ) | 2021 சனவரியிலிருந்து 2022 சனவரி வரையான ஒரு ஆண்டு காலப்பகுதியின் போது களுத்துறை போதனா வைத்தியசாலையில் நோயாளிகளுக்கும் கனிஸ்ட ஊழியர்களுக்கும் சமைத்த உணவினை வழங்குவதற்குத் தேவையான உணவுப் பொருட்கள் இரண்டு வழங்குனர்களினால் வழங்கப்பட்டன. 2020/2021 மற்றும் 2021/2022 ஆகிய ஆண்டுகளுக்காக உணவு, பழங்கள் மற்றும் ஏனைய பொருள் வகைகள் முறையே 111 மற்றும் 148 இன் மாதாந்த தேவைப்பாடு இனங்காணப்பட்டிருந்த போதிலும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டிற்கான முதல் 04 மாதங்களில் உணவுப் பொருட்களை வழங்குதல் | உரிய அனைத்து தகவல்களும் தயாரிக்கப்பட்டு வருகின்றது. பின்னர் சமர்ப்பிக்கப்படும். அடுத்து வரும் ஆண்டிற்காக மதிப்பீட்டினைத் தயாரிக்கும் போது தேவையற்ற உணவுப் பொருட்களை நீக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். நாட்டில் நிலவும் அதிக அளவிலான பணவீக்க நிலைமையின் காரணமாக அடிக்கடி உலர் உணவுப் | உரிய அனைத்து தகவல்களும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் இது சம்பந்தமான முறையான பரிசீலனைகளை மேற்கொண்டு மேலதிக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

சம்பந்தமான தகவல்களின் பிரகாரம் கட்டளையிடப்பட்ட அளவு மாதாந்த தேவைப்பாட்டில் 75 சதவீதத்தினை மிகைத்த விடயங்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்த அளவானவை எனவும் 04 மாதங்களுக்குள் கட்டளையிடப்படாத விடயங்களின் எண்ணிக்கை மொத்த விடயங்களின் எண்ணிக்கையில் 45 சதவீதம் அளவானவை எனவும் அவ்வாறு கட்டளையிடப்படாத விடயங்களுக்கான 04 மாதங்களுக்கான ஒப்பந்தப் பெறுமதி ரூபா 1,978,640 எனவும் அவதானிக்கப்பட்டது. அவ்வாறே முதல் 04 மாதங்களில் உள்ளபடியாக வழங்கிய பொருட்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட மாதாந்த தேவைப்பாட்டின் பெறுமதியில் 47 சதவீதம் அளவானதாகும். அதற்கிணங்க எதுவித நடைமுறை சாத்தியமான நடைமுறையுமின்றி மாதாந்த பொருள் தேவைப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது எனவும் அதன் மூலம் பெறுகை நடைமுறை சிக்கலான நிலைக்கு மாற்றம் பெற்று போட்டித்தன்மை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது எனவும் இந்த நிலைமை தொடர்பான புரிந்துணர்வினைப் பெற்றுள்ள சில ஒப்பந்தக்காரர்கள் வைத்தியசாலையினால் கட்டளையிடப்படாத மற்றும் குறைவாக கட்டளையிடப்பட்ட பொருட்களுக்காக குறைந்த விலையும் மிகையாக கட்டளையிடுகின்ற பொருட்களுக்காக அதிக விலையும் சமர்ப்பித்து ஒப்பந்தத்தை பெற்றுக்கொண்டுள்ளதாகவும் ஒப்பந்தக்காரரினால் ஒப்பீட்டு ரீதியாக குறைந்த அலகு விலை சமர்ப்பித்திருந்த பொருட்களை கட்டளையிடுவதிலிருந்து வைத்தியசாலை அதிகாரிகள் தவிர்க்கப்பட்டிருந்தார்கள் எனவும் தேவையற்ற விடயங்களை அகற்றி நடைமுறைச் சாத்தியமான மதிப்பீட்டினைத் தயாரிப்பதன் மூலம் இப்பெறுகைகளை பிராந்திய பெறுகை குழுவிற்கு ஒப்படைத்து தாமதத்தை குறைத்துக் கொள்ளக் கூடியதாக இருந்தது என்பது அவதானிக்கப்பட்டது. ஊழியர் உணவு வீணாகுவதனைத் தவிர்ப்பதற்காக ஏதாவது உணவின் அளவைக் குறைக்கும் நடைமுறை தயாரிக்கப்படாமையால் கணக்காய்வு செய்யப்பட்ட 2022 சனவரி 10 ஆந் திகதியிலிருந்து 2022 சனவரி 21 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் சமைத்த உணவு அதிக அளவில் மிகுதியாகக் காணப்பட்டது எனவும் சில நாட்களில் 34 கிலோ கிராம்களை மிகைத்து சமைத்த சோறுமிகுதியாகக் காணப்பட்டது எணவும் அவதானிக்கப்பட்டது. கணக்காய்வு

பொருட்கள் வழங்கப்படவில்லை. அது தொடர்பாக அமைச்சிடமிருந்து முறையான ஆலோசனை கிடைக்காத நிலைமையில் நோயாளிகளின் போசாக்கினைப் பேணுவதற்காக பதிலீடுகளை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதிக பணவீக்கம் மற்றும் உணவுத் தட்டுப்பாட்டின் காரணமாக முட்டை, கோழி இறைச்சி, கருவாடு என்பவற்றிற்குப் பதிலாக மீன் வழங்கப்பட்டள்ளன. சுகாதார அமைச்சிடமிருந்து முறைப்படியாக அறிவுறுத்தல்கள் கிடைத்திருக்குமாகவிருந்தால் அதன் படியாக நடவடிக்கை எடுக்கக்கூடியதாக இருக்கும். அடிக்கடி ஊழியர்களின் எண்ணிக்கையை மேற்பார்வை செய்து கட்டளையிடும் அளவினை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

| | | | |
|---|---|---|---|
| | ஆரம்பிக்கப்பட்ட 2022 சனவரி 10 ஆந் திகதி காலை, பகல் மற்றும் இரவு ஊழியர் உணவுக்கு கட்டளையிட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 300, 280 மற்றும் 85 ஆக இருந்த போதிலும் 2022 சனவரி 20 ஆந் திகதியளவில் அந்த ஊழியர்களின் எண்ணிக்கையை முறையே 110, 225 மற்றும் 65 வரை குறைக்க கூடியதாக இருந்தது. அதற்கிணங்க வைத்தியசாலை அதிகாரிகள் ஊழியர் உணவு வழங்கும் நடைமுறையை முறையான மேற்பார்வைக்கு உட்படுத்துவார்களாக இருந்தால் ஊழியர் உணவுக்காக செலவு செய்யப்படும் வருடாந்த செலவுகளை 40 சதவீதம் அளவில் குறைக்க கூடிய இயலுமை காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (ஏ) | களுத்துறை போதனா வைத்தியசாலையினால் 2021/2022 ஆம் ஆண்டிற்காக வைத்தியசாலையை சுத்திகரிக்கும் சேவை ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | | |
| (i) | பெறுகை நிபந்தனைகளின் பிரகாரம் ஒப்பந்தக்காரரினால் வழங்குவதற்கு இணங்கிக் கொள்ளப்பட்ட சுத்திகரிக்கும் இரசாயனப் பொருட்களுக்காக ஆய்வுகூட பரிசோதனை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் அதற்குப் பதிலாக ஆய்வுகூட பரிசோதனை அறிக்கையாக ஏற்றுக்கொள்ள முடியாத பொருள் பாதுகாப்பு தரவுப் பத்திரம் (Material Safety Data Sheets-MSDS) சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. எனினும் கேள்வியை மதிப்பீடு செய்யும் போது அது தொடர்பாக கவனம் செலுத்தாததுடன் அந்த தரவு பத்திரத்தின் அடிப்படையில் சிபார்சுகள் வழங்கப்பட்டிருந்தன. | கேள்வியை வழங்குதல் சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்படுகின்ற து. ஒப்பந்தக்காரரினால் வழங்க வேண்டிய சுத்திகரிப்பு பொருட்களின் சந்தைப் பெயர் அல்லது அவற்றின் தரம் தொடர்பாக கேள்வி ஆவணங்களின் பிரகாரம் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. | இது தொடர்பாக முறையான பரீட்சிப்புக்களை மேற்கொண்டு மேலதிக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | ஒப்பந்தக்காரரினால் வழங்குவதற்கு இணங்கிக் கொள்ளப்பட்ட இரசாயனப் பொருட்கள் தொடர்பான உற்பத்தி நிறுவனம் அல்லது உற்பத்திப் பெயர் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் கேள்வி நிபந்தனைகள் தொடர்பாகவும் வைத்தியசாலையின் உரிய அதிகாரிகளுக்கு தெரியப்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதிலிருந்து உச்ச அளவு | ஒப்பந்தக்காரருடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட முன்னைய இணக்கப்பாடுகள் அமைச்சினால் வைத்தியசாலைகளுக்கு தெரியப்படுத்தியிருக்கவில் லை. இரசாயனப் பொருட்களின் நியம தரம் அல்லது பண்புகள் தொடர்பாக இந்த வைத்தியசாலையினால் | -மேற்படி- |

பயன்பாட்டினைப் பெற்று ஒப்பந்தக்காரர் தமது தற்றுணிபின் பேரில் இணங்கிக் கொண்ட உற்பத்திப் பெயருக்குப் பதிலாக நியம தரத்தினை உறுதிப்படுத்தும் ஆய்வுகூட அறிக்கையினை சமர்ப்பிக்காது ஏனைய உற்பத்திப் பெயருடனான இரசாயனப் பொருட்களை ஆண்டு முழுவதும் வழங்கியிருந்தார். நிர்ணயிக்கப்பட்ட நியம தரத்தினைக் கொண்ட இரசாயனப் பொருட்களுக்காக இணங்கிக் கொண்ட அலகு விலையினை அடிப்படையாகக் கொண்டு வழங்கப்பட்டிருந்த இரசாயனப் பொருட்களுக்காக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

பரீட்சிப்புக்கள் செய்ய முடியாது. இரசாயனப் பொருட்கள் சம்பந்தமாக நுண் உயிரினங்கள் அங்கிகள் விஞ்ஞானம் தொடர்பான விசேட மருத்துவ உத்தியோகத்தரினால் அல்லது சுகாதார கட்டுப்பாட்டு பிரிவின் மூலம் எந்த முறைப்பாடும் செய்யப்பட்டிருக்கவில்லை. தீவிர நோய் கட்டுப்பாட்டுப் பிரிவின் மூலம் அடிக்கடி இப்பொருள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. எதுவித சிக்கலான தன்மையும் உருவாகியிருக்கவில்லை.

(iii) 2020/2021 ஆம் ஆண்டின் போது அந்த உற்பத்திப் பெயருடன் இரசாயனப் பொருட்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகூட பரிசோதனையின் போது இலங்கை நியமம் 687-1985 இற்கு இணக்கமற்ற சுத்திகரிக்கும் இரசாயனப் பொருட்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டது.

(iv) அவ்வாறே 2021/2022 ஆண்டிற்காக ஒப்பந்தக்காரரினால் சுத்திகரிப்பு இரசாயனப் பொருட்களுக்காக 60 சதவீத கழிவினை வழங்குவதற்கு இணங்கிக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அக்கழிவுடன் நிர்ணயிக்கப்பட்ட நியமத்தில் இரசாயனப் பொருட்களை வழங்குதல் இடம்பெறமுடியாது எனவும் அவை தரம் குறைந்த மற்றும் நியமதரமற்ற சுத்திகரிக்கும் இரசாயனப் பொருட்களை வழங்கும் குறிக்கோளில் இக்கழிவினை வழங்கியுள்ளார் எனவும் தெரிவித்து கேள்வித் தீர்மானத்திற்கு எதிராக மேன்முறையீடு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததன் காரணமாக நிர்ணயிக்கப்பட்ட தரத்திலான இரசாயனப் பொருட்களை வழங்குவதான சத்தியப்பிரமாணத்தின்

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையில் இந்த கேள்விதாரருக்கு கேள்வியினை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டது. கடந்த ஆண்டின் அனுபவம் தொடர்பாக மீளாய்வாண்டின் போதேனும் கவனம் செலுத்தியிருக்காமை உத்தியோகத்தர்களின் கவனயீனம் அல்லது வேண்டுமென்ற செயற்பாடு என்பது அவதானிக்கப்பட்டதுடன் ஒப்பந்தக்காரருக்கு நலனளிக்கும் வகையிலும் அரசாங்கத்திற்கு பாதகமான வகையிலும் ஒப்பந்தக்காரருக்கு கொடுப்பனவுகள் செய்யப்பட்டிருந்தன. | | |
| (v) | உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் இலங்கை நியமத்திற்கு (SLS Standards) இணங்கியுள்ளது என கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனத்தினால் (ITI) சான்றுபடுத்தப்பட்ட பொருள் சேர்மானம் மற்றும் அளவு பொதியில் முறைப்படியாக குறிப்பிடப்பட்ட மற்றும் திறக்கப்படாதிருந்த பொதிகளில் இரசாயனப் பொருட்கள் வழங்கப்பட வேண்டிய போதிலும் வழங்கப்பட்ட இரசாயனப் பொருட்கள் அத்தேவைப்பாடுகளுக்கு இணக்கமின்றிக் காணப்பட்டன. எனவே அவை நிராகரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அதற்குப் பதிலாக வழங்கப்பட்டிருந்த இரசாயப் பொருட்களுக்காக 2021 மார்ச் மாதத்திலிருந்து யூன் மாதம் வரையான 04 மாதங்களுக்காக மாத்திரம் ரூபா 369,670 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 2021 யூலை மாதத்திலிருந்து செப்தெம்பர் மாதம் வரையான 03 மாதங்களுக்காக ரூபா 194,400 தொகையினை செலுத்துவதற்கு ஆயத்தம் செய்யப்பட்டிருந்தது. | கேள்வி நிபந்தனை அல்லது கேள்விதாரருடனான முன்னைய இணக்கப்பாடுகள் அமைச்சினால் வைத்தியசாலைக்கு வழங்கப்படவில்லை. தீவிர நோய் கட்டப்பாட்டு பிரிவின் மூலம் பரீட்சிக்கும் போது அறிக்கைகளில் தவறுகள் இருக்கவில்லை. நுண் உயிரிணங்கள் விஞ்ஞானம் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் முறைப்பாடு செய்திருக்கவில்லை. மேற்கூறிய விடயங்களின் காரணமாக அளவு பரீட்சிக்கப்பட்டு பெறுப்பேற்க்கப்பட்டது. | -மேற்படி- |
| (vi) | இப்பெறுகைக்காக கிரய மதிப்பீடு தயாரிக்கப்படாமையின் காரணமாக இரசாயனப் பொருட்கள் மற்றும் உபகரணங்களுக்காக சமர்ப்பிக்கப்பட்ட விலை மனுக்களானது சந்தை விலைகளுக்கு இணங்க நியாயமானதாக இருக்க வேண்டும் என்ற வரையறையின் பிரகாரம் கேள்விகள் மதிப்பீடு செய்யப்பட்டது | பெறுகைகள், கிரய மதிப்பீடு தயாரித்தல், அங்கீகரித்தல் என்பன சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்படுவதனால் விலைமனுக்கள் தொடர்பாக வைத்தியசாலை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | எவ்வாறு என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. | | |
| (vii) | உடன்படிக்கை நிபந்தனைகளின் பிரகாரம் மாதாந்தம் விலைப்பட்டியல்களை தீர்த்துவைப்பதற்கு முன்னர் ஒப்பந்தக்காரரினால் சுத்திகரிப்பு செய்யும் சம்பளங்களை சான்றுபடுத்தும் சம்பள பதிவேட்டின் சான்றுபடுத்திய பிரதியை வைத்தியசாலை தலைவருக்கு சமர்ப்பிக்க வேண்டிய போதிலும் அவ்வாறு சான்றுபடுத்திய மற்றும் உள்ளபடியாக செலுத்திய சம்பளத்தை உறுதிப்படுத்தும் சம்பள பதிவேடு பெற்றுக்கொள்ளப்படாது 2021 மார்ச் மாதத்திலிருந்து யூன் மாதம் வரையான 04 மாதங்களுக்கு மாத்திரம் ரூபா 20.10 மில்லியன் சம்பளமும் மேலதிகப்படியுமாக செலுத்தப்பட்டிருந்ததுடன் 2021 யூலை மாதத்திலிருந்து செப்தெம்பர் மாதம் வரையான 03 மாதங்களுக்காக ரூபா 15.07 மில்லியன் செலுத்துவதற்கு ஆயத்தம் செய்யப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றது. 2022 சனவரி பெப்ரவரி மற்றும் மார்ச் மாத சம்பளப் பத்திரங்கள் கையொப்பமிட்டு ஒப்படைக்கப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் விலைப்பட்டியல்களுக்கு பணம் செலுத்தும் போது முன்னைய மாத சம்பள பத்திரம் சமர்ப்பிக்கப்படும் வரை உரிய கொடுப்பனவுகளை மேற்கொள்ளாமல் இருப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (viii) | இரசாயனப் பொருட்கள் மற்றும் மாதாந்தம் அல்லது வருடாந்தம் வழங்கப்பட வேண்டிய உபகரண இருப்புக்கள் வைத்தியசாலையினால் பொறுப்பேற்றல் வாட்டுகளுக்கும் பிரிவுகளுக்கும் வழங்குதல் என்பன முறையற்ற வகையில் இடம்பெற்றிருந்ததுடன் இருப்பு பதிவேடுகள் நாளதுவரையாகப் பேணப்படாதிருந்ததனால் இந்நடைமுறைகள் சம்பந்தமாக அமுல்ப்படுத்தப்பட்ட உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டது. அதன் காரணமாக 2022 சனவரி 12 ஆந் திகதியில் உள்ளவாறு பிரதான களஞ்சியத்தினுள் 21 பிலாஸ்டிக் பெட்டியில் டயில் கிளீனர் கிளாஸ் கிளீனர், எச்.சீ.எல் (HCL) ஆகிய சுத்திகரிப்பு செய்யும் 630 லீற்றர் இரசாயன திரவங்கள் மற்றும் 11 பொலிசெக் பொதிகளில் பிலீசிங் பவுடர் (Bleaching Powder) மற்றும் 275 கிலோகிராம் பாத்திரம் கழுவும் தூள்கள் (Dish Wash) என்பன காலாவதியாகியிருத்தல் அல்லது | அவதானிப்புக்களுடன் இணங்கிக்கொள்ளப்படுகின்றது. தற்பொழுது இரசாயனப் பொருட்களும் உபகரணங்களும் பிரதான களஞ்சியத்தினால் பொறுப்பேற்க்கப்பட்டு பகிர்ந்தளிக்கப்படுகின்றது. | -மேற்படி- |

காலாவதியாகும் திகதி இல்லாமையின் காரணமாக பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ள முடியாதிருந்தது. அவ்வாறே ஒப்பந்தக்காரரினால் வியாபாரக் குறியிடப்பட்ட (branded) உபகரணங்களை வழங்குவதற்கு இணங்கிக்கொண்டிருந்தும் வழங்குனரினால் வழங்கப்பட்ட எந்த உபகரணமும் வியாபாரக் குறியிடப்பட்ட உபகரணமாக இல்லாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே சுத்திகரிப்பு செய்யும் உபகரண இருப்பு வைத்தியசாலையின் கட்டுப்பாட்டிற்கு அப்பால் வழங்குனரின் பொறுப்பில் காணப்பட்டதனால் கேள்வி ஆவணங்களில் காட்டப்பட்டவாறு மாதாந்தம் இணங்கிக் கொண்ட அளவு வழங்கப்படுகின்றது என்பது உறுதிப்படுத்தப்படவில்லை.

(ஐ) களுத்துறை போதனா வைத்தியசாலை மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களுக்காக 2021 ஆம் ஆண்டின் போது பாதுகாப்பு சேவை ஒரு தனியார் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| (i) | வைத்தியசாலை உத்தியோகத்தர்களுக்கு சமர்ப்பித்திருந்த பாதுகாப்பு ஊழியர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லலினை உறுதிப்படுத்துகின்ற பதிவேட்டில் இரவுச் சேவை வேளைக்காக உள்ளபடியாக சேவையில் ஈடுபட்ட பாதுகாப்பு ஊழியர்களின் பெயரும் கையொப்பமும் உள்ளடக்குவதற்குப் பதிலாக உரிய திகதிகளில் இரவு சேவை வேளைகளில் சேவையில் ஈடுபடாத பாதுகாப்பு ஊழியர்களின் பெயரும் கையொப்பமும் பிழையாக உள்ளடக்கப்பட்டிருந்தது. ஒப்பந்த காலப்பகுதி முழுவதும் அவ்வாறு செய்யப்பட்டிருந்த போதிலும் அது பற்றி உரிய உத்தியோகத்தர்களின் மேற்பார்வைக்கு உட்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 35 பாதுகாப்பு பதவியிணர் பகல் மற்றும் இரவாக தங்கியிருக்கும் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் பாதுகாப்பு சேவையின் | அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றது. பாதுகாப்பு சேவையின் மூலம் நிருவாகத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்ற பதிவேடுகளுக்கு மேலதிகமாக இன்னும் இரண்டு பதிவேடுகள் மோசடியளாக பேணப்பட்டிருந்தன. அப்பதிவேடுகளின் பிரகாரம் பட்டியல்களைப் பரீட்சிக்கும் போது ரூபா 486,330 பணம் மற்றும் ரூபா 273,480 பணம் தண்டப்பணமாக 2022 சனவரி மற்றும் பெப்ரவரி மாத பட்டியல்களிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது பற்றி சுகாதார அமைச்சுக்கு தெரிவிக்கப்பட்டது. 2021 நவம்பர் மாதத்திலிருந்து | இது சம்பந்தமாக முறையான பரீட்சிப்புக்களை மேற்கொண்டு மேலதிக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆரம்பத்திலேயே சமர்ப்பிக்கப்பட்டிருந்த பெயர் பதிவேட்டிற்கு புறம்பான நபரை பாதுகாப்பு சேவையில் ஈடுபடுத்துவதாக இருந்தால் அது பற்றி வைத்தியசாலை தலைவருக்கு தெரியப்படுத்த வேண்டிய போதிலும் கம்பனியால் 2021 ஏப்ரல் 21 ஆந் திகதி மற்றும் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வைத்தியசாலைக்கு சமர்ப்பித்திருந்த பெயர்ப் பதிவேட்டிற்குப் புற3ம்பான பாதுகாப்பு சேவை ஊழியர்கள் வைத்தியசாலை தலைவருக்கு தெரியப்படுத்தாது ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இந்த விடயத்தின் காரணமாக வைத்தியசாலை பாதுகாப்பு சம்பந்தமாக உருவாகும் எந்த சிக்கலின் போதும் பொறுப்புக்களை ஒப்படைக்கும் ஆபத்து காணப்படுவதுடன் பிழையான பெயர்களையும் கையொப்பத்தையும் பதிந்து வைத்தியசாலையில் சம்பளம் பெறுகின்ற நபர்கள் அக்காலப்பகுதியில் வெளிசமூகத்தில் ஒழுங்கீனங்கள் மேற்கொள்வார்களாக இருந்தால் வைத்தியசாலை அதிகாரிகளால் அதற்காக சட்டரீதியான பாதுகாப்பினை வழங்கும் ஆபத்து காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. | பட்டியல்களுக்கு செலுத்துவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | |
| (ii) | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் எந்தவொரு பாதுகாப்பு சேவை மேற்பார்வையாளரும் அல்லது ஒழுங்குபடுத்துனரும் ஒரே தடவையில் தொடர்ச்சியாக 12 மணித்தியாலங்களுக்கு மேல் சேவையில் ஈடுபடாதிருக்க வேண்டியதுடன் அதற்காக எதுவித கொடுப்பனவும் செய்யாதிருக்க வேண்டிய போதிலும் பாதுகாப்பு சேவையிலுள்ள 32 நபர்கள் 12 மணித்தியாலங்களை மிகைத்து 24 மணித்தியாலங்களிலிருந்து 180 மணித்தியாலங்கள் வரையான காலப்பகுதி விரிவடையும் வகையில் தொடர்ச்சியாக சேவையில் ஈடுபட்டிருந்தமை பற்றி 2021 ஒக்தோபரிலிருந்து திசெம்பர் வரையான 03 மாதங்களுக்கான மாதிரியை பரீட்சித்த போது அவதானிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக மீளாய்வாண்டின் போது பாதுகாப்பு ஊழியர்கள் சேவையில் | அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றது. பாதுகாப்பு சேவையினை வழங்கும் நிறுவனத்தினால் வைத்தியசாலைக்குச் சமர்ப்பித்த பதிவேட்டின் பிரகாரம் 12 மணித்தியாலங்களை மிகைத்த பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடவில்லை. பிழையாக நாளதுவரையாக்கப்பட்ட பதவேடுகளின் பிரகாரம் அவ்வாறு ஈடுபடுத்தப்பட்டிருந்ததனால் வெளிப்படுத்தப்பட்ட பணத்தை தண்டப்பணமாக அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | ஈடுபடாத பகல் மற்றும் இரவு 377 சேவை வேளைகளுக்காக ரூபா 486,330 பணம் மிகையாக கம்பனிக்கு செலுத்தப்பட்டது. மேலும் ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் குறைவாக வழங்கப்பட்ட ஒரு ஊழியருக்காக ஒரு நாள் சம்பளத்திற்கு சமனான தண்டப்பணமும் அறிவிடப்பட வேண்டிய போதிலும் 2021 மே மாதத்திலிருந்து 2021 ஒக்தோபர் வரையான 06 மாதங்களின் போது குறைவாக வழங்கப்பட்ட ஊழியர்களின் 212 வேலை வேளைக்காக ரூபா 273,480 தண்டப்பணமாக அறவீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஒ) | கண்டி தேசிய வைத்தியசாலையின் கட்டிட பராமரிப்பு சேவைகளில் அதிக அளவானவை ஒரு பராமரிப்பு ஒப்பந்தக்காரருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. | | |
| (i) | அமைச்சு செயலாளரால் 2020 பெப்ரவரி 28 ஆந் திகதி வழங்கப்பட்ட நிதிக் கட்டுப்பாடு தொடர்பான அதிகாரத்தை ஒப்படைக்கும் கடிதத்திற்கு இணங்க அவசர பராமரிப்பு செயற்பாடுகள் ஒரே ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்படாது பதிவுசெய்த ஒப்பந்தக்காரர்களின் பதிவேட்டின் தொடர் ஒழுங்கின் படி ஒப்படைத்தல் இடம்பெற வேண்டிய போதிலும் அந்த நியதிக்கு முரணாக 2020 ஆம் ஆண்டின் போது கண்டி தேசிய வைத்தியசாவைலக்குள் நிறைவேற்றப்பட்டிருந்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 70.76 மில்லியனான 295 வேலைப் பத்திரங்களில் ரூபா 35.88 மில்லியன் மதிப்பீட்டுக் கிரயமான 201 வேலைப் பத்திரங்கள் அல்லது 68 சதவீதமானவை ஒரு பராமரிப்பு ஒப்பந்தக்காரருக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றது. சுகாதார அமைச்சு செயலாளரின் நிதி அதிகார ஒப்படைப்பு சுற்றறிக்கையின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டிலிருந்து இடம்பெறுகின்றது. | அமைச்சினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு சிபாரிசு மற்றும் பெறுகைக் குழு தீர்மானத்தின் பிரகாரம் வைத்தியசாலை காணியில் வாட்டுக்கள் மற்றும் பிரிவுகளின் வதிவிட பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக தெரிவு செய்யப்பட்டிருந்த இந்த ஒப்பந்த நிறுவனத்திற்கு மாத்திரம் வைத்தியசாலை காணியில் | அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றது. கண்டி தேசிய வைத்தியசாலையின் கட்டிடத்தை மீண்டும் வைத்தியசாலைக்கு வழங்குமாறு உரிய நிறுவனத்திற்கு எழுத்து மூலம் தெரிவிக்கப்பட்டது. | அரசாங்கத்திற்குச் சொந்தமான சொத்துக்களை தவறாக பயன்படுத்துவதற்கு இடமளிக்காதிருத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வேலைத்தளத்தினை ஸ்தாபிப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | | |
| (iii) | 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் நிதி அதிகாரத்தை ஒப்படைக்கும் கடிதத்தின் பிரகாரம் அவசர பராமரிப்பாக இனங்காணப்பட்ட நீர்க்கசிவு மலசல கூடங்களின் குழிகள் நிரம்பி வழிதல், அல்லது உடைந்திருத்தல், மின்கசிவுகள் அதிகளவில் பாதிப்படைந்திருந்த கூரைகளும் கட்டிடங்களும் ஆகிய செயற்பாடுகள் மாத்திரம் ரூபா 300,000 எல்லைக்குள் பதிவுசெய்த ஒப்பந்தக்காரர்களினூடாக நிறைவேற்றப்பட வேண்டிய போதிலும் 2019 மற்றும் 2020 ஆம் ஆண்டுகளின் போது அவ்வாறான அவசரமற்ற மற்றும் வைத்தியசாலை பராமரிப்பு பிரிவின் மூலம் நிறைவேற்றக்கூடியதாகவிருந்த 79 பராமரிப்பு செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக 2021 சனவரி மற்றும் 2021 மார்ச் மாதங்களின் போது ரூபா 940,569 ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்கிக்கொள்ளப்படுகின்றது. 2021 சனவரி மற்றும் மார்ச் மாதங்களின் போது வைத்தியசாலை உள்ளக பராமரிப்பு பிரிவு தோற்றுவிக்கப்பட்டிருக்காத நிலையில் நோயாளிகளின் சத்திர சிகிச்சை சேவைகளைப் பேணுவதற்குத் தேவையான 79 அத்தியாவசிய பராமரிப்பு நடவடிக்கைகள் ரூபா 940,569 செலவு செய்து பதிவு செய்த ஒப்பந்தக்காரர்களினால் நிறைவேற்றப்பட்டிருந்த போதிலும் 2021 நவம்பர் மாதத்தின் போது வைத்தியசாலை உள்ளக பராமரிப்பு பிரிவு தோற்றுவிக்கப்பட்டதோடு இவ்வாறான செயற்பாடுகளை பதிவு செய்த ஒப்பந்தக்காரர்களின் மூலம் நிறைவேற்ற வேண்டாம் என உரிய பிரிவுகளுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | வைத்தியசாலை பராமரிப்பு பிரிவின் மூலம் நிறைவேற்றக்கூடிய செயற்பாடுகள் ஒப்பந்தக்காரர்களுக்கு வழங்கப்படாதிருத்தல் வேண்டும். |
| (ஒ) | த சொயிசா மகளிர் வைத்தியசாலையில் சிசுக்களின் இறந்த உடல்கள், குறைப்பிரசவ பாகங்கள், மற்றும் உயிரற்ற உடல் உறுப்புக்களை அகற்றி குழியில் போடுவதற்காக 2019 திசெம்பர் மாதத்திலிருந்து 2021 ஒக்தோபர் மாதம் வரையான காலப்பகுதிக்காக ரூபா 2.24 மில்லியன் ஒப்பந்தக்காரருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. வெளியேற்றும் அலகின் தொடக்க கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்காமை, ஒப்பந்தக்காரரின் தராசினை பயன்படுத்துவதற்கு வாய்ப்பளிக்கப்பட்டிருந்தமை, அத்தராசு நாளதுவரையாக எண்வரிசைக் கிரமமாக்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்படாமை, நீரினை அகற்றி தொப்பூழ்க் கொடியை நிறைபார்க்கும் நடைமுறை அறிமுகப்படுத்தப்படாமை, வெளியேற்றுவதற்காக அதிக நிறை அளவுகளை ஈடுபடுத்துவதற்கு | ஒட்டுமொத்தமாக எடுத்துக்கொள்கையில் Covid 19 தொற்றுநோய் நிலைமையினை முன்னிட்டு இது தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்கு முடியாததனால் சில பலவீனங்கள் இடம்பெற்றுள்ளது. தற்பொழுது அப்பலவீனங்களைத் தவிர்த்துக் கொள்வதற்கான பரிகாரம் ஈடுபடுத்தப்பட்டுள்ளது. இக்கழிவுப் பொருட்களை மரப்பெட்டிகளில் போட்டு அகற்றுவதற்காக பெறுகைக் குழு தீர்மானித்துள்ளது. | இது சம்பந்தமாக முறையான விசாரணைகளை மேற்கொண்டு மேலதிக நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |

இடமளிக்கப்பட்டமை சட்டரீதியாக இந்த வெளியேற்றுதல் இடம்டபெறுதல் உறுதிப்படுத்தப்படாமை ஆகிய விடயங்களின் காரணமாக உயிரற்ற உடல் உறுப்புக்களை வெளியேற்றுவது சம்பந்தமான வைத்தியசாலையின் உள்ளகக் கட்டுப்பாடு மற்றும் மேற்பார்வை பலவீனமான நிலையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. 01 கிலோகிராம் தொப்பூழ்க் காடி, சிசுக்களின் இறந்த உடல் , 01 கிலோகிராம் குறைப்பிரசவ பாகம், 01 கிலோகிராம் உடல் உறுப்பு என்பவற்றை வெளியேற்றுவதற்கான கிரய மதிப்பீடு தயாரிக்கப்படாமையின் காரணமாக எதுவித ஒப்பீடுமின்றி 2020 ஆம் ஆண்டிற்கான அலகு விலையுடன் ஒப்பீடு செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டின் போது அப்பொருள்களின் ஒரு அலகிற்காக 521 சதவீதத்திலிருந்து 6371 சதவீதம் வரையான பாதகமான விலை முரண்களுடன் ஒப்பந்தக்காரரால் சமர்ப்பிக்கப்பட்ட அலகு விலையினை அடிப்படையாகக் கொண்டு வைத்தியசாலையினால் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன் காரணமாக 2020 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டில் உயிரற்ற உடல் உறுப்புக்களை வெளியேற்றும் செலவு 8070 சதவீதத்தினாலும் குறைப்பிரசவ உறுப்புக்களை வெளியேற்றும் செலவு 696 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது. 2021 திசெம்பர் 21 இலிருந்து 2022 சனவரி 25 ஆந் திகதி வரையான காலப்பகுதியின் போது வைத்தியசாலைக்குள் இடம்பெற்றிருந்த 553 பிள்ளை பேறுகளிலிருந்து அகற்றப்பட்டிருந்த தொப்பூழ்க் கொடிகளின் நிறை 550 கிலோகிராம்களுடன் பொதி மூடிவைக்கப்பட்டிருந்த குளிர் காப்பகத்தின் பலவீனமான செயற்பாட்டின் காரணமாக அப்பொதிக்குள் நீர் சேர்ந்திருந்தமை 2022 சனவரி 26 ஆந் திகதி மேற்கொண்ட பௌதீக கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க நீருடன் தொப்பூழ்க் கொடி ஒன்றின் சராசரி நிறை 995 கிராம்களாகும். அவ்வாறே 2022 பெப்ரவரி 02 மற்றும் 03 ஆந் திகதியிகளில் மேற்கொண்ட 19 பிள்ளை பேறுகளின் போது அப்புறப்படுத்தப்பட்ட தொப்பூழ்க் கொடிகளின் நிறை 10,700 கிராம்களாக இருந்ததனால் தொப்பூழ்க்கொடி ஒன்றின் சராசரி நிறை 563 கிராம்களாகும். இணைய தளத்தின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களின் பிரகாரம் பிள்ளை பேரின் போது அப்புறப்படுத்தப்படுகின்ற தொப்பூழ்க் கொடியின் நிறையின் வீச்சு 500

அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. மரப் பெட்டிகளில் தொப்பூழ்க் கொடி பாகங்களை அப்புறப்படுத்தும் போது சவச்சாலைகளிலிருந்து தொப்பூழ்க் கொடி பொதிகள் எவ்வளவு அகற்றப்பட்டிருந்தது. அதில் அடங்கியுள்ள மொத்த தொப்பூழ்க் கொடிகளின் அளவு அதற்கிணங்க மொத்த நிறை கணிப்பீடு செய்து இதற்கு முன்னர் ஒரு கிலோ கிராமினை அகற்றுவதற்கு செலவாகிய பணமும் புதிய முறைமைக்கான பணத்தையும் ஒப்பீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. சேவை உடன்படிக்கைக்காக நிதி ஏற்பாடு உறுதிப்படுத்தப்பட்ட உடன் சேவை உடன்படிக்கையில் கையொப்பமிடுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கு இடையில் சிறிய திருத்த வேலைகள் மின்சார சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கொவிட் 19 சிக்கலான சூழ்நிலையின் அடிப்படையில் பிள்னைகளின் இறந்த உடல்களையும் தொப்பூழ்க்கொடி பாகங்களையும் அகற்றும் போது நோய் பரவுதல் சம்பந்தமாகக் காணப்பட்ட தட்டுப்பாடுகளின் அடிப்படையில் மேற்பார்வை குறைவடைந்திருந்தது. எதிர்காலத்தில் இறந்த உடல் காப்பகத்திலிருந்து நீக்கப்பட்ட தொப்பூழ்க் கொடி பாகங்கள், குறைப்பிரவச பாகங்கள், உடல் உறுப்புக்கள் ,சிசுக்களின் இறந்த உடல்கள் என்பவற்றை

| | |
|---|---|
| கிராமிலிருந்து 800 கிராம் வரை விரிவடைந்திருந்தும் அது குளிர்காப்பில் களஞ்சியப்படுத்தப்படுவதனால் சேருகின்ற நீருடன் தொப்பூழ்க் கொடியின் நிறை 01 கிலோகிராம் எனவும் அவதானிக்கப்பட்டது. அந்த வரையறைகளின் அடிப்படையில் கணிப்பீடு செய்கையில் 2019 நவம்பர் 29 ஆந் திகதியிலிருந்து 2021 ஒக்தொபர் 26 அந் திகதி வரையான 01 ஆண்டு 11 மாத காலப்பகுதியின்போது 29,616 கிலோகிராம் தொப்பூழ்க் கொடிகளுக்காக ரூபா 1.02 மில்லியன் ஒப்பந்தக்காரருக்கு மிகையாகச் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | உரிய சவச்சாலைகளுக்கு ஒப்படைக்கும் போது மேற்பார்வை செய்வதற்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தரிடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |

## 3.8 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | சீன அரசாங்கத்தின் உதவியின் கீழ் 2015 ஆம் ஆண்டின் போது களுத்துறை போதனா வைத்தியசாலையின் இரத்த வங்கிக்கு வழங்கி பொருத்தப்பட்டிருந்த டீசல் மின்பிறப்பாக்கி இயந்திரம் 2019 ஆம் ஆண்டிலிருந்து செயற்பாடற்றுக் காணப்பட்டிருந்த போதிலும் திருத்தம் செய்து பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றது. செயற்படாது காணப்பட்ட இந்த இயந்திரத்திற்குரிய உத்தரவாத சான்றிதழ் அல்லது சேவை உடன்படிக்கை வைத்தியசாலைக்கு முறைப்படியாக வழங்கப்படவில்லை. உரிய முகவர் நிறுவனம் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது தேவையான உதிரிப்பாகங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முடியாததனால் இலங்கை மின்சார சபையினால் இயந்திரங்களை திருத்தம் செய்தல் நிராகரிக்கப்பட்டது. | இந்த மின்பிறப்பாக்கி இயந்திரத்தினை பாவனைக்கு எடுத்துக்கொள்வதற்கு அல்லது அவ்வாறு செய்யமுடியாது போனால் ஏனைய பொருத்தமான நடவடிக்கைகள் எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கொழும்பு தேசிய வைத்தியசாலையின் நோய்க் குறியியல் ஆய்வுகூடத்தில் 21 வகையான இரத்தப்பரிசோதனைகளை மேற்கொள்ளக்கூடிய Kone 60 தன்னிச்சையாக செயற்படும் இரசாயன பகுப்பாய்வு உபகரணம் (Automated Chemistry Analyzer) 2021 யூலை 13 ஆந் திகதி உருவாகியிருந்த மின்சாரக் | அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றது. இயந்திரத்தில் ஏற்பட்டிருந்த கோளாறுகளின் காரணமாக இயந்திரம் தீப்பிடித்துள்ளது. பொறி அறையிலிருந்து மின்சார அலகிற்கு நீர் கசிவு ஏற்பட்டிருந்தது. இந்த இயந்திரம் 10 ஆண்டுகளுக்கு மேல் பழமையானதாகும். புதிய இயந்திரத்தை ஸ்தாபிக்கும் வரை அந்த | இந்த உபகரணத்தை திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கசிவின் காரணமாக செயற்படாதிருந்த போதிலும் 2022 ஏப்ரல் 30 ஆந் திகதி வரை அதனை நல்ல நிலைக்கு கொண்டுவருவதற்கு முடியாதிருந்ததனால் அந்த உபகரணம் 08 மாதங்களுக்கு மேற்பட்ட காலமாக விளைவற்றுக் காணப்பட்டது. | இயந்திரம் பயன்படுத்தப்பட்டது. இதுதொடர்பாக கவனம் செலுத்தி Automated Biochemistry Analyzer இயந்திரத்தை முடியுமான அளவு விரைவாக நல்ல நிலைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (இ) | வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு கடன் உதவியின் கீழ் அமைச்சினால் அமுல்ப்படுத்தப்பட்ட அரசாங்க வைத்தியசாலைகளில் சிகிச்சை கழிவுப் பொருள் முகாமைத்துவ செயற்திட்டத்தின் மூலம் குருனாகல் போதனா வைத்தியசாலைக்கு 2018 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்ட அமெரிக்க ஐக்கிய குடியரசு டொலர் 701,336 கிரயமான மெடாமயிசர் இயந்திரம் வைத்தியசாலைக்கு முறைப்படியாக ஒப்படைக்கப்பட்டிருக்காததனால் எழுத்துமூலம் தெரிவிக்காது உரிய வழங்குனரினால் இயந்திரத்தின் பகுதி கழற்றி வைத்தியசாலையளிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது. வைத்தியசாலையில் ஸ்தாபிக்கப்பட்ட இயந்திரத்தின் பகுதி இவ்வாறு எழுத்துமூல அங்கீகாரமின்றியும் எழுத்துமூலம் தெரிவிக்காதும் கழற்றி எடுத்துச் செல்வதற்கு இடமளித்ததன் அடிப்படையில் சொத்துக்களின் பாதுகாப்பு சம்பந்தமான உள்ளகக் கட்டப்பாட்டு முறைமை பலவீனமான மட்டத்தில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. மெடா மயிசர் இயந்திரம் வைத்தியசாலை வளவில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் செயற்படுத்துதல் திருத்தம் செய்தல் என்பவைகளை உள்ளடக்கிய அது தொடர்பான அனைத்து செயற்பாடுகளும் இயந்திரத்தை வழங்கிய கம்பனியினாலேயே நிறைவேற்றப்பட்டது. அச்செயற்பாடுகளுக்காக வைத்தியசாலையினால் எந்த வகையிலும் பணம் செலுத்துதல் இடம்பெறவில்லை. இந்த இயந்திரத்துடன் அறையின் கதவுகளுக்குரிய திறப்புக்களானது அந்த இயந்திரத்தினை செயற்படுத்தும் அந்த நிறுவனத்தின் உத்தியோகத்தரிடமே காணப்படுகின்றது. இந்த இயந்திரம் செயற்படுகின்ற காலத்தின் போதும் அதன் செயற்பாட்டு தன்மை மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டது. இந்த இயந்திரம் நிரந்தரமாக செயற்படாததன் காரணமாக ஒரு மாதத்தில் அதிக காலம் அது செயற்படவில்லை. இந்த அனைத்து விடயங்களையும் கருத்தில் கொண்டு 2020 யூன் மாதத்தின் போது இவ்வாறான ஒரு இயந்திரத்தின் தேவைப்பாடு காணப்படுகின்ற மற்றுமொரு வைத்தியசாலைக்கு அதனை வழங்குவதற்கான நடவடிக்கையை நிறைவேற்றுமாறு சுகாதார அமைச்சுக்கு | இது சம்பந்தமாக முறையான பரீசிலினை மேற்கொண்டு மேலதிக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | தெரிவிக்கப்பட்டது. | |
| (ஈ) | 2020 சனவரியிலிருந்து 2021 பெப்ரவரி மாதம் வரையான ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் உடன்படிக்கை செய்யப்படாது ஒரு வழங்குனரினால் ஹம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலையில் பிரதான உணவகம் நடாத்தப்பட்டிருந்ததுடன் அதற்காக வைத்தியசாலையினால் அறவிடப்பட வேண்டிய வாடகை, நீர் கட்டணம், மின்சார கட்டணம், மற்றும் தாமதக் கட்டணம் மொத்தமாக ரூபா 1,608,537 தொகை 2021 யூலை 06 ஆந் திகதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றது. உரிய பணத்தை அறவீடு செய்வதற்காக மேலதிக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு சட்டப் பிரிவிற்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |
| (உ) | ஹம்பாந்தோட்டை புதிய வைத்தியசாலையினை நிர்மாணிக்கும் போது அனைத்து பிரிவுகளுக்கும் வாட்டுக்களுக்கும் மற்றும் வைத்தியசாலைகளுக்கும் அழைப்பு அறைகள் மற்றும் மருத்துவர் அறைகள் (On Call room/Doctors room) நிர்மாணிக்கப்பட்டிருந்தன. அவ்வாறு அறைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் மருத்துவ உத்தியோகத்தர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட 24 வீடுகளில் 21 வீடுகளும் அழைப்பு அறைகளாக (On call room) பயன்படுத்துகின்றமை அவதானிக்கப்பட்டது. அதற்கிணங்க உத்தியோகபூர்வ இல்லங்கள் ஏனைய செயற்பாடுகளுக்காக பயன்படுத்துவதன் காரணமாக உரிய இல்லங்களிலிருந்து 2020 சனவரி மாதத்திலிருந்து 2022 மே மாதம் வரையான 17 மாதங்களுக்காக அறவிட வேண்டிய ரூபா 1,428,000 மொத்த தொகையான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. சுகாதார சேவைகள் பணியிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரத்தின் கீழ் இந்த ஒதுக்கீடுகள் செய்யப்பட்டன. | -மேற்படி- |

**3.9 நட்டங்களும் சேதங்களும்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நட்டங்கள் மற்றும் சேதங்கள் ரூபா 86.24 மில்லியனாக இருந்ததுடன் ஆண்டிற்குள் அறவிடப்பட்ட மற்றும் ஏடுகளிலிருந்து பதிவழிக்கப்பட்ட பெறுமதி முறையே ரூபா 2.39 மில்லியன் மற்றும் ரூபா 709,894 மாத்திரமாகும். ஆண்டிற்குள் அறவீடு செய்தல் மற்றும் ஏடுகளிலிருந்து பதிவழித்தல்களின் பெறுமதி மொத்த நட்டத்தின் சதவீதமாக எடுத்துக்கொள்கையில் முறையே 2.77 சதவீதம் மற்றும் 0.82 சதவீதம் ஆகிய குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்கிக்கொள்ளப்படுகின்றது. பல சம்பவங்கள் பழமையானதாகும். இது தொடர்பாக உரிய சான்றுகளை வெளிப்படுத்தி மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும். | இந்த நட்டத்தை விரைவாக அறவீடு செய்வதற்கு அல்லது முறைப்படியாக பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) 25 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்கள் காலப்பகுதியினை குறிப்பிடாத பதிவழிக்கப்படாத நட்டங்கள் மற்றும் சேதங்கள் ரூபா 56.15 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா 10.30 மில்லியன் 07 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் அறவீடு செய்வதற்கு அல்லது பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாத நட்டங்கள் மற்றும் சேதங்கள் ரூபா 26.98 மில்லியனில் ரூபா 22.46 மில்லியன் 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாகவும் நிதிக்கூற்றுக்களில் முன் கொண்டுவரப்பட்டுக் காணப்பட்டன. | அவதானிப்புக்களுடன் இணங்கிக்கொள்ளப்படுகின்றது. காலங்கடந்த சம்பவங்கள் என்பதால் சான்றுகளை வழங்குவதில் சிக்கல்கள் காணப்பட்டது. எதிர்காலத்தில் நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். | -மேற்படி- |

**3.10 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | சிபாரிசுகள் |
|---|---|---|
| (அ) களுத்துறை போதனா வைத்தியசாலையில் 2019 மே மாதம் சிகிச்சை கழிவுப் பொருட்கள் 34,289 கிலோ | அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றது. மருத்துவ கழிவுப் பொருட்களை எடுத்துச் | இது சம்பந்தமாக முறையான பரிசீலனைகளை மேற்கொண்டு |

| | | | |
|---|---|---|---|
| | கிராம் மருத்துவ கழிவுப் பொருட்கள் மற்றும் 2,727 கிலோகிராம் கூரான ஊசி கழிவுப் பொருட்களை அகற்றுவதற்காக ரூபா 4,384,545 தொகை ஒரு தனியார் கம்பனிக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2022 சனவரி 11 ஆந் திகதி மேற்கொண்ட கணக்காய்வு பரீட்சிப்பின் போது அக்கழிவுப் பொருள் இருப்பு வைத்தியசாலை காணியிலிருந்து அகற்றப்படாது 02 கொள்கலன்களுக்குள் களஞ்சியபர்படுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. | செல்லும் நிறுவனம் தனது மீள்சுழற்சி முறைமையை வேறு இடத்தில் ஸ்தாபிப்பதன் காரணமாக வைத்தியசாலைக்குள்ளேயே களஞ்சியப்படுத்தியுள்ளது. அக்கொள்கலன்கள் பாதுகாப்பாக சீல் வைக்கப்பட்டுள்ளது. மருத்துவ கழிவுப் பொருட்களை உள்ளடக்கிய கொல்கலன்கள் தற்பொழுது அகற்றப்பட்டுள்ளது. இரசாயனப் பொருட்களை உள்ளடக்கிய கொள்கலன்களை அகற்றும் வரை கொடுப்பனவு நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. | மேலதிக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | அமைச்சு தாபன கட்டமைப்பின் பிரகாரம் மேலதிக செயலாளருக்கு (பொறியியல் சேவைகள்) எதுவித பிரிவோ அல்லது தனிப்பட்டவர்களின் மேற்பார்வையோ ஒப்படைக்கப்படாதிருந்ததுடன் அப்பதவியின் கீழான அதிகாரம் கீழ் நோக்கி பாய்ச்சல்படுதல் அல்லது அமைச்சு செயலாளருக்கு மேல் நோக்கி அனுப்பப்படுவதில்லை. நிர்மாணங்கள் சம்பந்தமான கோவைகள் மேலதிக செயலாளரினூடாக (பொறியியல் சேவை) அனுப்பிவைக்கும் நடைமுறையும் இல்லை. அதற்குப் பதிலாக நிர்மாணங்கள் சம்பந்தமான விடயம் சுகாதார சேவைகள் பணியாளர் நாயகத்தினூடாக மேலதிக செயலாளரினூடாக (நிருவாகம்) அமைச்சு செயலாளருக்கு செல்லும் வகையில் தாபன கட்டமைப்பு தயாரிக்கப்பட்டுள்ளது. நிர்மாணங்கள் சம்பந்தமான கோவைகள், பிரதிப் பணிப்பாளர் நாயகத்திற்கு (வழங்கல்கள்) இலங்கை நிருவாக சேவையின் III ஆம் தரத்திலுள்ள ஒரு உத்தியோகத்தரான நிருவாகப் பணிப்பாளரினால் (கட்டிடங்கள்) சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அவருக்கு கீழே இலங்கை | அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. பொறியியல் பிரிவு விரிவுபடுத்தப்பட்டு நிர்மாண வேலை விடயங்கள் மேலதிக செயலாளரின் (பொறியியல்) மேற்பார்வையின் கீழ் பணிப்பாளர் (கட்டங்கள்) பொறியியலாளரினால் மேற்கொள்ளப்படுதல் சம்பந்தமாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. பிரதிப் பணிப்பாளர் நாயகத்தினால் (திட்டங்கள்) அது சம்பந்தமான மேலதிக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இலங்கை நிருவாக சேவையின் III ஆம் வகுப்பிலுள்ள ஒரு பதவியான நிருவாக பணிப்பாளர் (கட்டிடங்கள்) பதவி மற்றும் இலங்கை பொறியியலாளர் சேவையின் I வகுப்பிலுள்ள பதவியான பணிப்பாளர் (கட்டிடங்கள்) பொறியியலாளர் பதவி, பிரதி பணிப்பாளர் நாயகத்தின் (வழங்கல்) கீழ் காணப்படுகின்ற ஒன்றுக்கொன்று வித்தியாசமான பொறுப்புக்கள், நோக்கெல்லைகள் மற்றும் கடமைப்பட்டியல்களுடனான இரண்டு பதவிகளாகும். பணிப்பாளர் (கட்டிடங்கள்) | முறைப்படியான கடமை ஒப்படைப்பு இன்றி மேலதிக செயலாளருக்கு (பொறியியல் சேவை) செலுத்தப்பட்ட சம்பளமும் படிகளும் பொறுப்புக் கூறக்கூடிய தரப்பினர்களிடமிருந்து அறவிட வேண்டியதுடன் முறையான அதிகாரங்களும் பொறுப்புக்களும் ஒப்படைக்கப்படும் வகையில் தாபன பதவிகள் தயாரிக்கப்பட்டு அமுல்ப்படுத்தப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | பொறியியல் சேவையின் I ஆம் தரத்திலுள்ள ஒரு உத்தியோகத்தர் பணிப்பாளர் (கட்டிடங்கள்) பொறியியலாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டிருந்தார். அதற்கிணங்க இரண்டு சமாந்தர சேவைகளான இலங்கை நிருவாக சேவையின் III ஆந் தரத்திலுள்ள ஒரு உத்தியோகத்தரின் கீழ் இலங்கை பொறியியல் சேவையின் I ஆந் தரத்திலுள்ள ஒரு உத்தியோகத்தர் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தார். | பொறியியலாளரினால் தொழில்நுட்ப சிபாரிசுகளை சமர்ப்பித்தல் என்பன இடம்பெறுகின்றன. நிருவாக பணிப்பாளரினால் (கட்டிடங்கள்) அந்த சிபாரிசுகள், நிதி மற்றும் நிருவாக ஒழுங்குவிதிகள் மற்றும் காணப்படுகின்ற அனைத்து காரணிகளையும் உபயோகித்து நிருவாக ரீதியான விடயங்களை நிறைவேற்றுதல் நிருவாக சிபாரிசுகளைச் சமர்ப்பித்தல் மற்றும் ஒப்படைக்கப்பட்ட அதிகாரங்களின் அடிப்படையில் அங்கீகாரங்கள் வழங்கப்படுகின்றன. பணிப்பாளர் (கட்டிடங்கள்) பொறியியலாளரினால் வழங்கப்படுகின்ற தொழில்நுட்ப சிபாரிசுகளின் அடிப்படையில் நிருவாக பணிப்பாளரினால் (கட்டிடங்கள்) நிருவாக ரீதியான கடமைகளை மேற்கொள்வதன் மூலம் பணிப்பாளர் (கட்டிடங்கள்) பொறியியலாளர் பதவி, நிருவாக பணிப்பாளர் (கட்டிடங்கள்) பதவியின் கீழ் வைக்கப்பட்டுள்ளது என்பது வெளிப்படையானதல்ல. | |
| (இ) | கணக்காய்விற்கச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டின் போது அமைச்சினால் அமுல்ப்படுத்தப்பட்ட 62 நிர்மாணச் செயற்திட்டங்களுக்கு மத்தியில் ரூபா 31,650,382,750 மதிப்பீட்டுக் கிரயமான 30 செயற்திட்டங்களின் ஒப்பந்தக்காரர் மற்றும் ஆலோசகர் (Contractor and Consultant /Engineer) ஆகிய இரண்டு பதவிகளும் ஒரே நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது எனவும் அதன் காரணமாக ஒரு செயற்திட்டத்தினை மிகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் நிறைவேற்றுவது தொடர்பாக | அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. வெளியிடப்பட்ட செயற்திட்டங்களை தாமதமின்றி ஆரம்பிக்கும் தேவைப்பாட்டின் அடிப்படையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான சினக்கனமாக பூர்த்தி செய்யும் அடிப்படையில் முறையான அங்கீகாரத்துடன் உரிய நிறுவனத்திற்கு ஒப்படைக்கப்பட்டது. அந்த அரசாங்க நிறுவனம் அரசாங்கத்தின் கணக்காய்விற்கு உட்படுவதனால் அந்த நிறுவனத்திடமிருந்து நிர்மாண சேவைகளைப் | ஒப்பந்தக்காரர் ஆலோசகர் தரப்பினர்கள் ஒன்றுக்கொன்று சுதந்திரமான நிறுவனமாக இருக்க வேண்டியதுடன் அரசாங்கத்திற்கு குறைந்த செலவு ஏற்படும் வகையிலும் தரமான சேவைகளைப் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும் இந்த நிறுவனங்கள் தெரிவு செய்யப்படுதல் வேண்டும். |

அதே போல செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்தும் நியாயத்தன்மை சுதந்திரம் மற்றும் வெளிப்படைத்தன்மையை பாதுகாப்பது தொடர்பாக அழுத்தங்கள் ஏற்படலாம் எனவும் அவதானிக்கப்பட்டது. 1991 ஆம் ஆண்டின் போது சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்துடன் கையொப்பமிடப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2021 ஆம் ஆண்டுவரை ஆலோசனை செயற்பாடுகள் போட்டி கேள்வி மனு கோரலின்றி அந்த பணியகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டின் போது அமுல்ப்படுத்தப்பட்ட 62 செயற்திட்டங்களுக்கு மத்தியில் 52 செயற்திட்டங்களின் ஆலோசனை சேவைகளை வழங்குதல் அந்த பணியகத்திற்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க போட்டித் தன்மையூடாக பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த பொருளாதார நலன்கள் இழக்கப்பட்டிருந்தன. சில சந்தர்ப்பங்களில் மாத்திரம் ஆலோசனை சேவைக்காக அரசாங்க அபிவிருத்தி மற்றும் நிர்மாணக் கூட்டுத்தாபனம் தெரிவு செய்யப்பட்டிருந்ததனால் ஆலோசனை சேவையை பெற்றுக்கொள்வது தொடர்பாக நிரந்தரமான மற்றும் முறைப்படியான ஒரு கொள்கை அமைச்சினால் பின்பற்றப்பட்டிருக்கவில்லை என்பதும் அவதானிக்கப்பட்டது.

பெற்றுக்கொள்ளும் போது நியாயத்தன்மை, சுதந்திரம், வெளிப்படைத்தன்மை என்பன தொடர்பாக திருப்தி கொள்ள முடியாது என்ற கூற்று அடிப்படையற்றதாகும். அடுத்துவரும் ஆலோசனை சேவைகளுக்காக ஏனைய அரசாங்க நிறுவனங்களை தொடர்பு கொள்வதற்குள்ள இயலுமை சம்பந்தமாக கவனம் செலுத்துமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

(ஈ) அமைச்சிற்குள் மேலதிக செயலாளர் (பொறியியல் சேவை) சிவில் இயந்திர மற்றும் மின்சார பொறியியலாளர்கள் திட்டமிடல் நிபுணர்கள், கைத்தொழில் உத்தியோகத்தர்கள்

அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. சுகாதார அமைச்சு, வைத்தியாசலை முறைமைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களின் பல்வேறு நிர்மாண நடவடிக்கைகள்

பொறியியல் பிரிவிற்கு தற்பொழுது இணைத்துக்கொள்ளப் பட்டுள்ள உத்தியோகத்தர்களுக் கு போதியளவான வேலைகளும்

| | | | |
|---|---|---|---|
| | ஆகியோர்களை உள்ளடக்கிய நிர்மாணத்துறையைச் சார்ந்த 43 உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய ஒரு பொறியியல் பிரிவு காணப்பட்டிருந்தும் நிர்மாணச் செயற்திட்டத்திற்காக அதேபோல வைத்தியசாலையினால் வருடாந்தம் அமுல்ப்படுத்தப்படுகின்ற நவீனமயப்படுத்தல் நடவடிக்கை மற்றும் திருத்தம் செய்தல்களுக்காகவும், திட்டங்களும் மதிப்பீடுகளும் தயாரித்தல் மற்றும் வேலை மேற்பார்வை நடவடிக்கைகள் கட்டணம் செலுத்தும் அடிப்படையில் பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகம் போன்ற வெளி நிறுவனங்களுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. பொறியியல் பிரிவினை விரிவுபடுத்தி முறைப்படியான ஒரு பதவியின் கீழ் அமைச்சு செயலாளர் வரை பொறுப்புக்கள் பாய்ந்து செல்லும் ஒரு பொறிமுறையினை தயாரித்து பொறியியல் பிரிவிற்கு இச்செயற்பாட்டினை ஒப்படைப்பதன் மூலம் வருடாந்தம் அதிகளவான பணத்தை சேமிக்க கூடியதாக இருப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. மத்திய அரசாங்கத்தின் கட்டிட திணைக்களம் மாகாண சபைகள் மாவட்ட செயலகங்கள் என்பவற்றினால் அங்கீகரித்த விலை விகிதங்கள் காணப்பட்டிருந்தும் பொறியியல் செயற்பாடுகள் தொடர்பான மத்திய ஆலோசனை பணியகத்தினால் அங்கீகரிக்கப்பட்ட உயர்ந்த விலை விகிதங்கள் ஈடுபடுத்தப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டன. | தொடர்பாகவும் அந்த நிறுவனங்களின் குளிர்காப்பு இயந்திரங்கள், மின்பிறப்பாக்கி இயந்திரங்கள் போன்ற இயந்திரங்களை வழங்கி பொருத்துதல் திருத்தம் செய்தல், அது தொடர்புபட்ட சேவை உடன்படிக்கைகள் போன்ற நடவடிக்கைகள் தொடர்பாகவும், மருத்துவ வாயு வழங்குதல், தொடர்புபட்ட நிர்மாணங்கள், திருத்தம் செய்தல் என்பன தொடர்பாகவும் பெறுகை நடைமுறையின் போது தொழில்நுட்ப விடயங்களை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு வகையான தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்கள் தொடர்பாகவும் பல கடமைகள் தற்பொழுது பொறியியல் பிரிவின் மட்டுப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்களினால் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. அதற்கிணங்க தற்பொழுது காணப்படுகின்ற நிலைமையில் பெரிய அளவிலான நிர்மாண செயற்திட்டங்களுக்காக ஆலோசனை சேவைகளை வழங்கக்கூடிய இயலுமை அமைச்சின் பொறியியல் பிரிவிற்கு இல்லை. எவ்வாறாயினும் பொறியியல் பிரிவினை விரிவுபடுத்தி நிர்மாணங்கள் சம்பந்தப்பட்ட பொறுப்புக்களை அப்பிரிவிற்கு ஒப்படைப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. | பொறுப்புக்களும் ஒப்படைக்கப்பட வேண்டியதுடன் இப்பிரிவினை விரிவுபடுத்துதல் வேண்டும். |
| (உ) | இரத்தம் மற்றும் உடல் வியர்வைகளால் சிறிய அளவில் அழுக்கடைந்த பிடவைகளை மத்திய பிடவை வழங்கல் | அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றது. வைத்தியசாலையின் பிடவைகளை கழுவுகின்ற | இது சம்பந்தமாக முறையான விசாரணைகள் மேற்கொண்டு |

| | | | |
|---|---|---|---|
| | பிரிவிற்கு அனுப்பி கழுவி சுத்தம் செய்யும் வசதிகள் ஹம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலையிடம் காணப்பட்டிருந்தும் 2019 ஆகஸ்ட் மாதத்திலிருந்து 2021 பெப்ரவரி மாதம் வரையான 06 மாதங்களின் போது அனைத்து ஊத்தை பிடவைகளும் வெளி ஒப்பந்தக்காரர் மூலம் கழுவிக் கொள்வதற்கு ரூபா 17,823,232 செலுத்தப்பட்டிருந்தது. | நடவடிக்கையானது புதிய வைத்தியசாலையை ஆரம்பிப்பதோடு துரிதமாக மேற்கொள்ள முடியாத ஒரு நடவடிக்கையாக இருந்ததனால் தற்பொழுது அனைத்து பிடவைகளையும் கழுவுதல் இப்பிரிவின் மூலம் இடம் பெறுகின்றது. | பொறுப்புக்கூறக்கூடிய தரப்பினர்கள் சம்பந்தமாக மேலதிக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஊ) | ஹம்பாந்தோட்டை மாவட்ட பொது வைத்தியசாலையில் 600 தொலைபேசிகளைக் கொண்ட உள்ளக தொலைபெசி முறைமையானது ஒரு தனியார் நிறுவனத்தினால் SUV- 8300 ஆம் இலக்க மொழியின் (Version) மூலம் ஸ்தாபிக்கப்பட்டிருந்ததுடன் அந்த மொழி காலாவதியாகியிருந்தனால் SUV/9100 ஆம் இலக்க மொழியாக தரமுயர்த்துவதற்கு (Upgrade) ரூபா 1,798,200 தொகை வழங்குனருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. எனினும் வழங்குனரினால் காணப்பட்ட SUV/8100 ஆம் இலக்க மாதிரிக்குறிய தரமுயர்த்தப்பட்ட மொழி (Upgrade Version) இதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்ததனால் அதற்காக செலவு செய்யப்பட்ட முழுப்பணமும் விளைவற்ற செலவாக இருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. உரிய பழைய மொழிக்கு உதிரிப் பாகங்களைப் பெற்றுக் கொள்ள முடியாததனால் உள்நாட்டு முகவர் நிறுவனத்தின் மூலம் முறைமையை நாளது வரையாக்குதல் மேற்கொள்ளப்பட்டது. | -மேற்படி- |
| (எ) | கண்டி தேசிய வைத்தியசாலையில் கதிரியக்கம் சார்ந்த பரிசோதனை நடவடிக்கைகளை நிறைவேற்றுவதற்காக கணனி முறைமை (PACS/RIS) ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்பட்டது. PACS முறைமையின் பயன்பாடு படிப்படியாக உச்ச மட்டத்தினை அடைந்து கொள்ளப்பட்டு வருகின்றது. | எதிர்பார்த்த குறிக்கோளை நிறைவேற்றும் வகையில் முறைமையினைப் பயன்படுத்துதல் வேண்டும். |
| | (i) Picture Archival and Communication System (PACS) With Radiology Information System (RIS) என்ற கணனி முறைமை வெற்றிகரமாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது | அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்பட்டது. PACS முறைமையின் பயன்பாடு படிப்படியாக உச்ச மட்டத்தினை அடைந்து கொள்ளப்பட்டு வருகின்றது. | எதிர்பார்த்த குறிக்கோளை நிறைவேற்றும் வகையில் முறைமையினைப் பயன்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | என தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் 2019 ஒக்தொபர் 02 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த அறிக்கையினை அடிப்படையாகக் கொண்டு ஒப்பந்தக்காரருக்கு வெட் வரியுடன் ரூபா 30,831,350 350 முழுப்பணமும் 2020 நவம்பர் 17 ஆந் திகதி செலுத்தப்பட்டது. எனினும் செயற்திட்டம் பூரணப்படுத்தப்பட்டது என அறிக்கையிட்டு 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலம் மற்றும் முழுக்கொடுப்பனவும் மேறகொண்டு ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்தும் 2022 சனவரி 30 ஆந் திகதி வரை இந்த முறைமை எதிர்பார்த்த குறிக்கோள்களை நிறைவேற்றும் வகையில் வைத்தியசாலையில் பயன்படுத்தவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (ii) | படங்களை அச்சிடுவதற்கு செலவிடப்படுகின்ற அதிக அளவிலான கிரயத்தினை தவிர்த்துக்கொள்ளல் இந்த முறைமையை அறிமுகப்படுத்தும் பிரதான குறிக்கோளாக இருந்த போதிலும் இச்செயற்திட்டம் பூரணப்படுத்தப்பட்டது என தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் சான்றுபடுத்திய திகதியான 2019 ஒக்தோபர் 02 ஆந் திகதியிலிருந்து திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலத்தின் போது கதிரியக்க படங்களை அச்சிடுவதற்காக ரூபா 77 மில்லியனுக்கு மேற்பட்ட | அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றது. PACS முறைமையினை அறிமுகப்படுத்தும் பிரதான குறிக்கோள் கதிரியக்க ஆய்வுகளை பேணிக்காத்தல் (Radiology Studies Archive) என்பதனால் படங்களுக்கான கிரயம் குறைவடைதல் அதன் உப பிரதிபலனாகும். தற்பொழுது அது அதிக அளவான பணத்தால் குறைக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | பணம் செலவு செய்யப்பட்டிருந்தது. மேலும் இந்த முறைமையின் கிரயத்தில் படங்களை களஞ்சியப்படுத்தும் கிரயமும் உள்ளடக்கப்பட்டுள்ளதனால் அச்சிடல் கிரயம் குறைவடைவதற்குப் பதிலாக அக்கிரயத்திற்கு மீண்டும் கிரயம் சேர்த்துக் கொள்ளப்பட்டது. | | |
| (iii) | கதிரியக்க பரிசோதனைகளுக்காக பதிவு செய்யும் ஆவணங்களில் உள்ள தரவுகளை இந்த கணனி முறைமைக்குள் உள்ளடக்குவது மாத்திரம் கதிரியக்க பிரிவின் அலுவலகத்தின் (Front Office) மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற போதிலும் நோயாளியின் வைத்தியசாலையில் பதிவு செய்த இலக்கத்திற்குப் பதிலாக கதிரியக்க பிரிவின் பதிவேடுகளிலுள்ள தொடர் இலக்கத்தினை முறைமைக்குள் உள்ளடக்ககுதல் மற்றும் அந்த இலக்கத்தையும் சரியாக உள்ளடக்கப்படாததனைப் போல நாளாந்தம் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகளும் முறைமைக்குள் உள்ளடக்கப்படுகின்றது என்பதனை உறுதிப்படுத்தும் நடைமுறை இல்லாததன் அடிப்படையில் அச்செயற்பாடும் முறைப்படியாக இடம்பெறவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றது. இக்குறைபாட்டினை சரிசெய்வதற்குத் தேவையான ஒருங்கிணைப்பு நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | அனைத்து தகவல்களையும் தெளிவாகக் காட்டும் வகையில் இப்பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (iv) | வைத்தியசாலைக்குள் பயன்படுத்துகின்ற அனைத்து கதிரியக்க பரிசோதனை இயந்திரங்களும் கணனி முறைமையுடன் தொடர்புபடுத்தப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதற்காக இந்த முறைமைக்குள் வசதிகள் இல்லாததுடன் வைத்தியசாலையின் இருதய நோய்ப் பிரிவில் பயன்படுத்தப்படுகின்ற 04 கதிரியக்க பரிசோதனை இயந்திரங்கள் கணனி முறைமையுடன் தொடர்புபடுத்தப்படவில்லை. இவற்றில் 02 இயந்திரங்கள் களஞ்சிய இயலளவு போதாமையினால் மேலதிக கிரயத்தினை மேற்கொண்டு பரிசோதனைத் தரவுகள் CD/DVD கையடக்க தட்டுக்களில் களஞ்சியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றது. பயன்படுத்துகின்ற நான்கு இயந்திரங்களில் இரண்டு இயந்திரங்கள் 15 ஆண்டுகள் அளவான பழைமையானதாகும். அந்த இயந்திரங்களை PAC PACS முறைமைக்கு தொடர்புபடுத்துமாறு இயந்திரங்களை வழங்குகின்ற நிறுவனங்களுக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. மிகுதியான 02 இயந்திரங்கள் Digital Convertor Defector மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட X-Ray PACS முறைமைக்கு தொடர்புபடுத்துதல் Portable Defector மூலம் செய்யப்படுகின்றது. | எதிர்பார்த்த குறிக்கோளை நிறைவேற்றும் வகையில் முறைமையினை பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். |
| (v) | இந்த முறைமை தொடர்பாக இரு தரப்பினாலும் முறைமைத் தேவைப்பாட்டினை ஆய்வு /பகுப்பாய்வு (System Requirement Study (SRS)) மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் செயற்திட்டத்தினை அறிமுகப்படுத்துவதற்கான பிரேரணைகள் மாத்திரம் (Proposal for PACS implement) தயாரிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க முறைமைக்குள் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள தரவுகளைப் பயன்படுத்தி வைத்தியசாலை நிருவாக நடவடிக்கைகளுக்குத் தேவையான புள்ளிவிபர | அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றது. இந்த PAC PACS முறைமைக்கான அடிப்படையான DCM4CHEE ஆகிய மென்பொருள் உலகின் பிரசித்தி பெற்ற Open Souree Source PACS Soft ware Software என்பதுடன் இது சுகாதார அமைச்சின் அல்லது கண்டி தேசிய வைத்தியசாலையில் முழுமையாக நிர்மாணிக்கப்பட்டிருக்காததனால் System Reguirement Requirement Study (SRS) செய்யும் தேவைப்பாடு இல்லை. | தேவையான முறையைமையை ஸ்தாபிப்பதற்கு முன்னர் முறைமைத் தேவைப்பாட்டு ஆய்வு/ பகுப்பாய்வு மேற்கொள்ளப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரீதியான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும் பகுப்பாய்வுகளை மேற்கொள்வதற்கும் தேவையான அறிக்கைகளை பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் (Reporting Facilities) செயற்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (vi) | வழமையான கடமை நேரத்துக்குப் புறம்பாக மேற்கொள்ளப்படுகின்ற கதிரியக்க பரிசோதனைகளுக்காக கதிரியக்க நிபுணர்களுக்கு மாதிரி படிகள் செலுத்தும் போது மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகளின் எண்ணிக்கை தொடர்பான தரவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு இந்த முறைமைக்குள் வசதிகளை முறைப்படியாக அபிவிருத்தி செய்து பயன்படுத்துவது சம்பந்தமாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றது. மாதிரி படிகளை செலுத்துவது தொடர்பான தரவுகளை வழங்கும் HRM முறைமையை உருவாக்கி பயன்படுத்தும் தேவைப்பாடு காணப்படுகின்றது. | இத்தேவைப்பாட்டினை முறைமைக்குள் ஸ்தாபித்தல் வேண்டும். |
| (vii) | அமைச்சின் கீழுள்ள 20 வைத்தியசாலைகள் மற்றும் தொலை கதிரியக்கவியல் (Tele radiology ) நிலையத்தில் Picture Archival and commutation System (PACS) With Radiology Information System (RIS) முறைமையை தோற்றுவிக்கும் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு அமைச்சு செயலாளருக்கும் ஒரு சீன கம்பனிக்குமிடையே 2019 ஒக்தோபர் 02 ஆந் | அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றது. அமைச்சின் கீழுள்ள 20 வைத்தியசாலைகளைத் தெரிவுசெய்து இந்த தொலை கதிரியக்கவியல் (Tele radiology ) நிலையத்தில் Picture Archival and commutation System (PACS) With Radiology Information System (RIS) முறைமையை தோற்றுவிக்கும் செயற்திட்டத்தினை அமுல்ப்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டது. கண்டி தேசிய வைத்தியசாலையில் | இது சம்பந்தமாக சுதந்திரமான ஒரு ஆய்வினை மேற்கொண்டு காணப்படுகின்ற முறைமைக்கு மேலதிகமாக இன்னுமொரு முறைமையினை ஸ்தாபிக்கும் தேவைப்பாட்டினையும் கிரயத்தின் வினைத்திறனையும் பரீட்சித்தல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | திகதி ஐக்கிய குடியரசு டொலர் 33,250,000 கடன் பணத்திற்காக மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் கண்டி தேசிய வைத்தியசாலையில் மீண்டும் புதிய PACS செயற்திட்டத்தை திட்டமிட்டு 2022 சனவரி 30 ஆந் திகதியளவில் அதனை அமுல்ப்படுத்துவதற்குத் தேவையான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதுவரை வைத்தியசாலையில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த PACS முறைமைக்காக பணத்தை செலுத்தி ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் கடக்கும் வரை முறையாக செயற்படும் நிலையில் இல்லாதிருந்ததன் பின்னணியில் அமைச்சினால் மற்றுமொரு PACS/RIS செயற்திட்டத்தை அறிமுகப்படுத்துவதற்காக நடடிக்கை எடுத்து தற்பொழுது ஸ்தாபிக்கப்பட்ட PACS முறைமைக்காக மேற்கொள்ளப்பட்ட செலவு முழுவதும் விளைவற்ற செலவாக மாறும் வாய்ப்புக் காணப்பட்டது. | காணப்பட்ட PACS முறைமையை மிகவும் உயர் மட்டத்தில் அமுல்ப்படுத்துவதற்கான மேம்படுத்தலினை இதன் மூலம் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. தற்பொழுது காணப்படுகின்ற உபகரணங்களையும் துணைக் கருவிகளையும் இதன் போது பயன்படுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்ததனால் காணப்படுகின்ற முறைமைக்காக பயன்படுத்தப்பட்ட செலவு ஒரு விளைவற்ற செலவு அல்ல. | |
| (viii) | கதிரியக்க பிரிவில் பல்வேறு வகையான 44 கதிரியக்க இயந்திரங்களின் மூலம் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளைப் பதிவு செய்வதற்கு பேணப்பட்டிருந்த நோயாளிகளைப் பதிவு செய்யும் பதிவேடு தெளிவற்றும் முறைமையற்றதுமான ஒரு பதிவேடாக | அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றது. இக்குறைபாடுகளை சரிசெய்து முறையான பதிவேட்டினைப் பேணுவதற்குத் தேவையான ஆலோசனைகள் பிரதான கதிரியக்க நிபுணர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. | அனைத்து தகவல்களையும் தெளிவாகக் காட்டும் வகையில் இப்பதிவேடு பேணப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | இருந்ததுடன் ஒவ்வொரு பரீட்சிப்புக்குமாக தொடர் இலக்கங்கள் முறையாகப் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை . அவ்வாறே வழக்கமான கடமை நேரங்களின் பின்னர் கதிரியக்க நிபுணர்களினால் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளை மேற்பார்வை செய்யும் உத்தியோகத்தர்களால் ஏடுகளில் பதிவு செய்யப்பட்டிருக்காமையின் காரணமாக வழக்கமான கடமை நேரங்களின் பின்னர் மேற்கொள்கின்ற கதிரியக்க பரிசோதனைகளின் எண்ணிக்கையின் சரியான தன்மையை உறுதிப்படுத்திக் கொள்ள முடியாதிருந்தது. | | |

**3.11 முகாமைத்துவ பலவீனங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்கள் | சிபாரிசுகள் |
|---|---|---|---|
| (அ) | 2017 ஏப்ரல் 19 ஆந் திகதிய 03/2017 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து அரசாங்க நிறுவனங்களிலும் விரல் அடையாளத்தை பதிவு செய்யும் இயந்திரத்தை பயன்படுத்துவதன் மூலம் உத்தியோகத்தர்கள் அலுவலகத்திற்கு வருகை தருதல் மற்றும் வெளிச் செல்லலினை உறுதிப்படுத்துவது சம்பந்தமான அறிக்கைகளைப் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் 2017 மே 12 ஆந் திகதிய DMS/0016 ஆம் இலக்க திறைசேரி செயலாளரால் சுகாதார அமைச்சு செயலாளருக்கு வழங்கப்பட்ட கடிதத்தின் பிரகாரம் சுகாதார பதவியணியினரின் வருகை மற்றும் வெளிச்செல்லலினை உறுதிப்படுத்திக் | அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்படுகின்றது. காணப்படுகின்ற தொழிற்சங்க எதிர்ப்புக்களின் காரணமாக இதுவரை வரல் அடையாளத்தை பதியும் இயந்திரத்தினை செயற்படுத்துவதற்கு முடியாதிருந்தது. பிரிவுத் தலைவர்களின் மேற்பார்வையின் கீழ் நாளாந்த வருகை மற்றும் வெளிச்செல்லல் பதிவேட்டினை முறைப்படியாக பராமரிப்பதற்காக தற்பொழுது ஆலோசனை | சுற்றறிக்கை ஒழுங்குவிதிகளின் பிரகாரம் உத்தியோகத்தர்களின் வருகை மற்றும் வெளிச்செல்லல் சம்பந்தமான அறிக்கையை பேணுவதற்கும் அதற்கு இணங்கிய வகையில் உத்தியோகத்தர்களின் மேலதிக கடமைப்படியினைச் செலுத்துதல் சம்பந்தமாக தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டு |

| | | | |
|---|---|---|---|
| | கொள்ளக் கூடிய வகையில் விரல் அடையாளமிடும் இயந்திரங்கள் 2017 யூலை 01 ஆந் திகதியிலிருந்து அமுல்ப்படுத்தப்படவில்லையாயின் நிகழ்கால சம்பளத்திற்கு இணங்க மேலதிக நேர வேலைப்படியினை செலுத்தாமைக்கான பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். அமைச்சினால் அமைச்சிற்கும் அதற்குரிய வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கும் ரூபா 31.08 மில்லியன் செலவு செய்து ஸ்தாபிக்கப்பட்ட 213 விரல் அடையாளத்தை பதிவுசெய்யும் இயந்திரங்கள் பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்ளப்படாது விளைவற்றுக் காணப்பட்டது. திறைசேரி செயலாளரினால் அவை காணப்பட்ட கடிதத்தில் தரப்பட்டுள்ள விடயங்களுக்கு முரணாக நடவடிக்கை எடுத்து நிகழ்கால சம்பளத்தினை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின் போது சம்பளத்திற்காக ரூபா 41,895 மில்லியனும் மேலதிக நேர வேலை மற்றும் விடுமுறை தின சம்பளமாக ரூபா 32.415 மில்லியனுமாக ரூபா 74,310 மொத்த பணம் செலுத்தப்பட்டிருந்தது. அவ்வாறே மேலதிக நேர வேலை மற்றும் விடுமுறை தின சம்பளமாக செலவு செய்யப்பட்ட மொத்தப் பணமானது சம்பள கிரயத்தில் 77 சதவீதமாக இருந்தது. | வழங்கப்பட்டுள்ளது. | முறைமையினைப் பேணுவதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கொழும்பு தேசிய வைத்தியசாலையில் காக்காய் வலிப்பு நோய் பிரிவில் ரூபா 367 மில்லியன் கிரயமான Magnetic Resonance Imaging Scanner (MRI Scanner) இயந்திரம் 2016 மே 09 ஆந் திகதி ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. இயந்திரத்தினை ஸ்தாபிப்பதற்கு முன்னர் பரிசோதனை மேற்கொள்வதற்கு ஒரு ஆண்டு அளவிலான காலம் எடுத்திருந்ததனால் அண்ணளவாக பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்படுகின்ற 5,000 அளவிலான நோயாளிகளுக்கு சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் தவிர்க்கப்பட்டிருந்தது. 2022 சனவரி மாதமளவில் நாளாந்தம் அனுப்பிவைக்கப்படுகின்ற நோயாளிகளுக்கு மேலதிகமாக 639 | அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்படுகின்றது. அப்போது காக்காய் வலிப்பு நோய்ப் பிரிவில் MRI இயந்திரம் ஸ்தாபிக்கப்பட்டிருந்த போதிலும் போதியளவான வைத்தியசாலை ஊழியர்கள் இல்லாததனால் இது விளைவற்றுக் காணப்பட்டது. இயந்திரத்தின் UPS உபகரணத்தின் பெற்றரியின் ஆயுள் காலம் முடிவடைந்திருந்தது என்பது வெளிப்படுத்தப்பட்டிருந்தத | எதிர்பார்த்த குறிக்கோளைகளை நிறைவேற்றும் வகையில் விரைவாக உபகரணங்களை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | நோயாளிகள் காத்திருத்தல் பட்டியலில் இருக்கின்ற நிலைமையில் இயந்திரத்திற்காக தொடர்ச்சியாக மின்சாரத்தினை வழங்குகின்ற சராசரிக் கிரயம் ரூபா 3.7 மில்லியன் தொகையான Uninterruptible Power Supply (UPS) உபகரணங்கள் 17 மாத காலமாக செயற்பாடற்றுக் காணப்பட்டதனால் இயந்திரத்தின் முறையான செயற்பாட்டிற்கு இதனால் தாக்கம் ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன் அதன் மூலம் பரிசோதனைக்கு அனுப்பிவைக்கப்படுகின்ற நோயாளிகளும் அதனுடன் தொடர்புபட்ட சுகாதார பதவியணியினரும் அதிக சிக்கல்களுக்கு உள்ளாகியிருந்தனர். UPS உபகரணம் நீண்ட காலமாக செயற்பாடற்று இருந்ததனால் அவசர மின் துண்டிப்புக்களின் போது இயந்திரத்தில் சுயமாக செயற்படும் பாகங்களுக்கு இதனால் பாதிப்புக்கள் ஏற்படலாம் என்ற கணக்காய்வு அபிப்பிராயத்தினை புறக்கணிக்க முடியாதுள்ளது. | னால் அது பற்றி உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவிற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. இந்த இயந்திரத்தினை வெகுவிரைவில் நல்ல நிலைக்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2018 ஆம் ஆண்டிலிருந்து 2020 ஆம் ஆண்டு வரையான காலத்தின் போது அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படுகின்ற 25 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களின் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை 897 ஆகும். ஓய்வு பெற்றதன் பின்னர் 01 மாதத்திலிருந்து 54 மாதங்கள் வரையான கால தாமதத்துடன் ஓய்வூதியம் கொடுப்பனவு செய்யும் இலக்குகளை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்தமை உத்தியோகத்தர்களின் மற்றும் ஊழியர்களின் தனிப்பட்ட கோவைகள் முறைப்படியாக நாளதுவரையாக பேணப்படாதிருந்தமை மற்றும் ஓய்வூதிய சுற்றறிக்கை ஒழுங்கு விதிகள் தொடர்பாக உரிய கவனமின்றியும் போதியளவு அக்கறையின்றியும் ஓய்வூதிய விண்ணப்பப்படிவங்கள் சமர்ப்பித்திருந்ததனால் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்பட்டிருந்தமை மற்றும் அமைச்சு உள்ளடங்கலாக 16 வைத்தியசாலைகள் மற்றும் | அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றது. அரசாங் உத்தியோகத்தர்கள் ஓய்வு பெறும் தகதியில் தமக்கு தகமையுள்ள திரண்ட பணிக்கொடையை தமது நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய வகையிலும் ஓய்வூதியத்தினை தாமதமின்றி செலுத்தக்கூடிய வகையிலும் தனிப்பட்ட கோவைகளை நாளதுவரையாக்குவது சம்பந்தமாக அனைத்து வைத்தியசாலைகள் மற்றும் நிறுவன தலைவர்களின் மூலம் தனிப்பட்ட கோவைகளுக்கு பொறுப்பான அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்பொழுது மத்திய நிருவாகக் கிளையில் | இது சம்பந்தமாகக் காணப்படுகின்ற முறைமையை வலுப்படுத்தி தாமதத்தினை தவிர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | நிறுவனங்களில் சேவையாற்றி மரணமடைந்த 58 உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களின் விதவைகள்/தபுதாரர்கள் அனாதைகள் ஓய்வூதியத் தகவல்களை பூரணப்படுத்தி ஓய்வூதியத் திணைக்களத்திற்குச் சமர்ப்பிப்பதற்கு 01 மாதத்திலிருந்து 23 மாதங்கள் வரையான காலம் எடுத்திருந்தமை ஆகிய காரணங்களினால் ஓய்வூதியம் மற்றும் விதவைகள்/ தபுதாரர்கள் அனாதைகள் ஓய்வூதியத் தகவல்களை தயாரித்தல் மற்றும் சமர்ப்பித்தல் சம்பந்தமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை பலவீனமான மட்டத்தில் காணப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது. | தனிப்பட்ட கோவைகளுக்குப் பொறுப்பான அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் செயன்முறைப் பயிற்சி வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஈ) | ஹம்பாந்தோட்டை புதிய வைத்தியசாலையில் கதிரியக்க அறையை நிர்மாணிக்கும் திட்டத்தின் பிரகாரம் Fluoroscopy X-ray இயந்திரம் மற்றும் Basic X-Ray இயந்திரத்தினை ஸ்தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் அதற்குப் பதிலாக Ceiling Mounted Digital X-Ray இரண்டு கதிரியக்க இயந்திரங்கள் பிரதான கதிரியக்க பிரிவில் பொருத்தப்பட்டிருந்ததுடன் விபத்துப் பிரிவிற்காக உத்தேசிக்கப்பட்ட X-Ray இயந்திரம் பெருத்தப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க வைத்தியசாலையில் கதிரியக்க சேவை நடவடிக்கைகளை தரமிக்கதாகவும் செயற்திறனாகவும் நிறைவேற்றுவதற்கு முடியாது என கதிரியக்க நிபுணர்களினால் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு 2020 சனவரி 16 ஆந் திகதி தெரியப்படுத்தப்பட்டிருந்த போதிலும் 2021 யூலை மாதம் வரை இக்குறைபாடு பூரணப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே Enras Nouus Nonus செயற்திட்டத்திடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட Philips Digital Diagnose C 50 வகையான Ceiling Mounted Digital X- Ray இயந்திரத்தின் செயற்பாடானது ஹம்பாந்தோட்டை பழைய பொது வைத்தியசாலையில் காணப்பட்ட | அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. இந்த விடயம் சம்பந்தமாக ஆய்வுசெய்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | இது சம்பந்தமாக ஆய்வினை மேற்கொண்டு தேவையான சரி செய்தல்கள் செய்யப்படுதல் வேண்டும். |

Shimadzu flow Mounted X- ray இயந்திரம் மற்றும் Fuji DR முறைமையினை விட குறைந்த மட்டத்தில் காணப்பட்டது என்பது அவதானிக்கப்பட்டதுடன் அதன் காரணமாக ஹம்பாந்தோட்டை புதிய பொது வைத்தியசாலையில் கதிரியக்க பிரிவின் நடவடிக்கைகளை செயற்திறனாக நிறைவேற்றுவதற்கு முடியாதிருந்தது என்பது அவதானிக்கப்பட்டது.

(உ) 2022 ஏப்ரல் 25 ஆந் திகதி வரை 18 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்கள் மாத்திரம் கணக்காய்விற்காகச் சமர்ப்பித்த தகல்களுக்கு இணங்க வைத்தியசாலை சேவைகள் வழக்கம் போல அமுல்ப்படுத்தப்பட்ட 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கொவிட் 19 தொற்றுநோய் நாடு முழுவதும் பரவியிருந்த 2021 ஆம் ஆண்டின் போது அந்த 18 வைத்தியசாலைகளில் வதிவிட சிகிச்சை பெற்றுக்கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை 26 சதவீதத்தினாலும் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுக்கொண்ட நோயாளிகளின் எண்ணிக்கை 67 சதவீதத்தினாலும் பல்வேறு சிகிச்சை நிலையங்களிலிருந்து சிகிச்சை பெற்ற நோயாளிகளின் எண்ணிக்கை 38 சதவீதத்தினாலும் ஆக குறிப்பிடத்தக்க அளவான சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. இந்நிலையில் வைத்தியசாலை பதவியணியினர்களை முறைப்படியாக பயன்படுத்துவதற்கு பொறுப்புக்கூறக்கூடிய தரப்பினர்கள் நடவடிக்கை எடுப்பார்களாக இருந்தால் மேலதிக நேரவேலை மற்றும் மேலதிக சேவை படிகளை 2019 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2021 ஆம் ஆண்டின் போது குறைக்கக் கூடிய இயலுமை காணப்பட்டிருந்தும் மருத்துவ உத்தியோகத்தர்களின் 39.7 சதவீதத்தினாலும் தாதி உத்தியோகத்தர்களின் 25 சதவீததத்தினாலும் மற்றும் ஏனைய உத்தியோகத்தர்களின் 39.6 சதவீதத்தினாலும் மேலதிக நேர வேலை மற்றும் மேலதிக நேர சேவைப்படிகள் அதிகரித்திருந்தன.

அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. இதன் போது ஒட்டுமொத்த வைத்தியசாலைகளின் தரவுகளும் பகுப்பாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை. அந்த 18 வைத்தியசாலைகள் அல்லது நிறுவனங்கள் ஆரம்ப வைத்தியசாலைகள், இரண்டாந்தர வைத்தியசாலைகள், மூன்றாந்தர வைத்தியசாலைகள் என இதில் தனித்தனியாகக் காட்டப்படவில்லை. ஒரு நோயாளியிலிருந்து மற்றொரு நோயாளிக்கு நோய்த் தன்மைகள் மற்றும் நெருக்கடித் தன்மைகள் மாற்றமடைகின்றன. அவ்வாறு ஒவ்வொரு நோயாளிக்காக மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகளின் எண்ணிக்கையும் கூடிக்குறையலாம். அவ்வாறே தீவிர சிகிச்சை பிரிவிற்கு சேர்த்துக்கொள்ளப்படுகின்ற நோயாளிகளுக்காக ஆய்வுகூட பரிசோதனை அதிக அளவில் செய்யப்படலாம்.

இது சம்பந்தமான சுதந்திரமான ஆய்வினை மேற்கொண்டு இந்நிலைமைக்கான காரணத்தை இனங்காண வேண்டியதுடன் தேவைப்பாட்டினை உறுதியாக இனங்கண்'டு பதவியணியினருக்கான மேலதிக நேர வேலைப்படியினை அங்கீகரித்தல் வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | அமைச்சின் அவசர சுற்றிவளைப்பு பிரிவின் 2021 ஆம் ஆண்டிற்கான செயற்பாடுகள் மற்றும் செயல்முன்னேற்றம் சம்பந்தமான கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கு இணங்க 2021 சனவரி 01 ஆந் திகதியில் காணப்பட்ட முழுமையாகப் பூர்த்திசெய்யப்படாத 483 பரிசோதனைகள் மற்றும் 2021 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட 521 பரிசோதனைகளாக 1,001 பரிசோதனைகளில் 427 பரிசோதனைகள் மாத்திரம் மீளாய்வாண்டின் போது முழுமையாக முடிவடைந்திருந்தன. இதற்கிணங்க ஆண்டின் இறுதியில் காணப்பட்ட பூர்த்திசெய்யப்படாத பரிசோதனைகளின் எண்ணிக்கை 577 அல்லது 58 சதவீதமாகும். அவ்வாறே 24 சந்தர்ப்பங்களின் போது பரிசோதனைகள் தொடர்பான முறைப்பாடுகள் பெற்றுக்கொள்ளப்பட்ட திகதிக்கும் பரிசோதனைக்காக உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்ட திகதிக்குமிடையே 33 நாட்களிலிருந்து 245 நாட்கள் வரையான கால தாமதம் காணப்பட்டது. | அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. அவசர சுற்றிவளைப்பு பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்ற பரிசோதனைகளின் தன்மைக்கு இணங்க அவற்றினை முடிவுறுத்துவதற்கு எடுக்கின்ற காலம் ஒன்றுக்கொன்று மாற்றமானதாகும். 2021 ஆம் ஆண்டில் பல சந்தர்ப்பங்களில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு சட்டம் மற்றும் பயணக்கட்டுப்பாட்டுகள் விதிக்கப்பட்டமை, உத்தியோகத்தர்களுக்கு கொவிட் 19 வைரசு தொற்றியிருந்தமை மற்றும் தனிமைப்படுத்தலுக்கு அனுப்பிவைத்தலின் அடிப்படையில் திட்டமிட்டவாறு பகுப்பாய்வு நடவடிக்கைகளை முடிவுறுத்த முடியாதிருந்தன. பரிசோதனைகளுக்காக தகவல்கள் கிடைத்த பின்னர் அவை சம்பந்தமான ஆய்வுகளை மேற்கொண்டதன் பின்னர் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுவதனால் அதற்காகவும் காலம் எடுக்கின்றது. | அவசர சுற்றிவளைப்பு பிரிவிற்கு அனுப்பிவைக்கப்படுகின்ற பரிசோதனைகளை விரைவாக பூர்த்தி செய்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுதல் வேண்டும். |
| (எ) | அமைச்சு மற்றும் அதன் கீழ் காணப்படுகின்ற 60 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களின் காணிகளையும் கட்டிடங்களையும் பயன்படுத்துவது தொடர்பாக கணக்காய்விற்காக வேண்டிக் கொண்ட தகவல்கள் அமைச்சு உள்ளடங்கலாக ஏனைய 25 வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களிடமிருந்து இந்த அறிக்கைத் திகதி வரை கிடைத்திருக்கவில்லை. 35 வைத்தியசாலைகள் மற்றும் சுகாதார நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களைப் பயன்படுத்தி பின்வரும் அவதானிப்புக்கள் | | |

மேற்கொள்ளப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| (i) | தகவல்களை சமர்ப்பித்த 35 வைத்தியசாலைகள் மற்றும் ஏனைய சுகாதார நிறுவனங்களில் 02 வைத்தியசாலைகளின் காணிகளுக்காக முறையான உறுதிகள் தயாரிக்கப்பட்டிருக்காததுடன் 03 வைத்தியசாலைகளின் காணிகளுக்காக அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நில அளவையாளரின் திட்டவரைபடங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை ல. அவ்வாறே 19 வைத்தியசாலைகளின் காணிகளின் காணிகள் மற்றும் கட்டிடங்களின் பெறுமதியை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றது. இது தொடர்புபட்ட வைத்தியசாலைப் பணிப்பாளர்களால் நில அளவையாளர் திணைக்களம் மற்றும் மதிப்பீட்டுத் திணைக்களத்துடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அமைச்சின் கீழ் காணப்படுகின்ற அனைத்து காணிகள் சம்பந்தமாகவும் தேவையான ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் அவற்றை மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | கண்டி தேசிய வைத்தியசாலைக்குரிய காணிகளில் 169 குடும்பங்களும் இரத்தினபுரி போதனா வைத்தியசாலைக்குரிய காணிகளில் 36 குடும்பங்களும் முல்லேரியா கிழக்கு கொழும்பு தள வைத்தியசாலைக்குரிய காணிகளில் 40 குடும்பங்களும் காலி கராபிடிய போதனா வைத்தியசாலைக்குரிய 0.1764 ஹெக்டேயர் அளவான 04 காணித் துண்டுகளில் 04 குடும்பங்களும் நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்குரிய 0.4401 ஹெக்டேயர் அளவான 07 காணித் துண்டுகளில் 12 நபர்களும் கம்பொல தள வைத்தியசாலையின் மதிப்பீடு செய்யப்படாத 05 பேச்சர்ஸ் காணியில் ஒரு நபரும் அனுமதியின்றி குடியிருந்து வருகின்ற போதிலும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களை | அவதானிப்புக்களுடன் இணங்கிக்கொள்ளப்படுகின்றது. காணிகள் (உரித்தினை மீளப் பெற்றுக்கொள்ளல்) அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் வைத்தியசாலை காணிகளில் அனுமதியின்றி குடியிருப்பவர்களை வெளியேற்றி காணிகளை பயன்படுத்தும் உரிமையை தீர்த்துவைக்கும் உத்தியோக பூர்வ அதிகாரியாக இருக்கின்ற உரிய பிரதேச செயலாளர் மற்றும் உரிய வைத்தியசாலை பணிப்பாளர் மற்றும் ஏனைய தொடர்பு பட்ட அரசாங்க நிறுவனங்களுடன் இணைத்து தீர்த்துவைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | அமைச்சின் கீழ் காணப்படுகின்ற அனைத்துக் காணிகளிலுள்ள அனுமதியற்ற குடியிப்பாளர்களை வெளியேற்றுவதற்கும் அந்த ஆதனங்களை பாதுகாத்துக் கொள்வதற்கும் பொறுப்புக் கூறக்கூடிய நிறுவனங்களுடன் இணைந்து நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | வெளியேற்றி காணிகளை மீளப் பெற்றுக் கொள்வதற்கு பொறுப்புக் கூறக்கூடிய நபர்கள் முறைப்படியாகவும் போதிய அளவிலும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | | |
| (iii) | கேகாலை பொது வைத்தியசாலைக்குரிய 225 சதுர அடி அளவிலான நிருவாகக் கட்டிடம் 2007 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 8,500 மாதாந்த வாடகைக்கு இலங்கை வங்கிக்கும் பெறுமதி மதிப்பீடு செய்யப்படாத ஆனால் அண்ணளவாக ரூபா 20,000,000 பெறுமதியான நாதெனிய தோட்டம் என்ற காணியில் 40 பேச்சர்ஸ் அளவான பகுதி 50 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இலங்கை மின்சார சபைக்கும் மற்றும் காலி கராபிடிய போதனா வைத்தியசாலைக்குரிய காணியில் 20 பேச்சர்ஸ் காணியும் 1996 ஏப்ரல் 10 ஆந் திகதியிலிருந்து கராபிடிய மக்கள் வங்கிக்கும் வழங்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக எழுத்துமூல உடன்படிக்கையோ அல்லது ஒப்படைத்தல் கடிதமோ அந்த வைத்தியசாலைகளிடம் இருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. இந்த வைத்தியசாலையின் நிருவாக கட்டிடத்தில் செயற்படுகின்ற இலங்கை வங்கி கிளைக்கு அறவிட வேண்டிய வாடகை ரூபா 8,500 என அரசாங்க மதிப்பீட்டு திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதனால்அந்த வாடகை 2020 சனவரி மாத்திலிருந்து அறவிடப்படுகின்றது. இலங்கை மின்சார சபையின் உப அலுவலகம் வைத்தியசாலை வளவில் அமைந்துள்ள போதிலும் அக்காணிப் பகுதியை ஒப்படைப்பது சம்பந்தமான ஆவணங்கள் வைத்தியசாலையில் இல்லாததனால் அந்த ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்காக இலங்கை மின்சார சபைக்கு தெரிவித்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. | இக்காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக முறையான உடன்படிக்கைகள் செய்து கொள்வதாற்கும் நிர்ணயிக்கப்பட்டவாறு வாடகையை அறவீடு செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (iv) | கண்டி போதனா வைத்தியசாலையின் காணி பொலிஸ் திணைக்களத்தினால் ஹந்தால சிசில கட்டிடமும், ஹெதல காக்காவலிப்பு நோய் வைத்தியசாலையின் அளவும் பெறுமதியும் உறுதிப்படுத்தப்படாத காணிகளில் சிங்க சங்கம் ஹேகிந்த கிறிஸ்துவராஜா வித்தியாலயம், இராணுவ வளங்கள் நிலையம், இந்துக் கோவில், கங்காதிலக விஹாரை கடற்படை பொலிஸ் பிரிவு ஆகிய நிறுவனங்கள் | அவதானிப்புக்களுடன் இணங்கிக் கொள்ளப்படுகின்றது. வைத்தியசாலை அல்லது சுகாதார நிறுவனங்கள் பயன்படுத்திவருகின்ற காணிகள் முறைப்படியாக ஒப்படைக்கவில்லையாயின் உரிய பிரதேச செயலாளரினை விசாரித்து அவற்றின் உரிமையை தீர்த்துவைத்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அனுமதியற்ற குடியிருப்பாளர்கள் | இக்காணிகளைப் பொறுப்பேற்பதற்கு அல்லது முறைப்படியாக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அமைந்திருந்த போதிலும் அக்காணிகளைத் தீர்த்துவைப்பதற்கு அல்லது ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | வசிப்பார்களாக இருந்தால் அவர்களிடமிருந்து உரித்தினை மீளப்பெற்றுக்கொள்வதற்கு அல்லது பிரதேச செயலாளர்களை விசாரித்து பொருத்தமான நடவடிக்கை எடுக்குமாறு அனைத்து வைத்தியசாலை பணிப்பாளர்களுக்கும் சுகாதார நிறுவனங்களின் தலைவர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. | |
| (ஏ) | தேசிய பாதீட்டுத் திணைக்களம் அங்கீகரித்த ரூபா 40 மில்லியன் நிதி எல்லையினை மிகைத்து ஒன்றிற்கு ரூபா 10.6 மில்லியன் வீதம் ரூபா 53 மில்லியன் செலவு செய்து வாயு சீராக்கி செய்யப்பட்ட 54 ஆசனங்களைக் கொண்ட 05 அதிசொகுசு பஸ்கள் 05 தாதிகள் கல்லூரிகளுக்கு 2018 ஏப்ரல் மாதத்தின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. சாத்தியவள ஆய்வு இன்றி கொள்வனவு செய்யப்பட்ட இந்த பஸ்கள் தாதிகள் கல்லூரிகள் அமைந்துள்ள மாகாண வீதிகளில் ஓடுவதிலுள்ள சிக்கல்களின் காரணமாகவும் சில தாதிகள் கல்லூரி வளவிற்குள் செல்ல முடியாததினாலும் பல தொழில்நுட்ப கோளாறுகளினாலும் குறைந்த பயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்டு நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. 2021 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் இந்த பஸ்களின் பயன்பாடு தொடர்பாக காணப்பட்ட நிலைமை சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | 2018 ஏப்ரல் மாதத்திலிருந்து 2021 திசெம்பர் 31 வரையான 44 மாத காலத்தின் போது 05 பஸ்கள் ஓடியிருந்த மொத்த தூரம் 94,260 கிலோ மீற்றர்களாக இருந்ததுடன் ஒரு பஸ் ஒரு மாதத்தில் ஓடிய சராசரி தூரம் 428 கிலோ மீற்றர்களாக இருந்தன. அதே போல எரிபொருள் ஒரு லீற்றருக்கு 1.2 கிலோ மீற்றரிலிருந்து 3 கிலோ | அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றது. இது சம்பந்தமாக விசாரணைகள் நடத்துமாறு 2022 யூன் 21 ஆந் திகதி சிரேஷ்ட உதவி செயலாளருக்கு (அவசர சுற்றிவளைப்புக்கள்) பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளன. | இது சம்பந்தமாக முறையான விசாரணைகளை மேற்கொண்டு மேலதிக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மீற்றர் வரையான தூரம் மாத்திரம் ஓடியிருந்தமை நாளாந்த ஓட்டக்குறிப்பிற்கு இணங்க உறுதிப்படுத்தப்பட்டது. | | |
| (ii) | காலி தாதிகள் கல்லூரிக்கு வழங்கப்பட்ட பஸ் 2020 திசெம்பர் 16 ஆந் திகதியின் பின்னர் வெகும் முறைமையிலுள்ள குறைபாடுகளினால் ஓடப்படாதிருந்ததுடன் அக்குறைபாடுகளை உள்ளடக்கி திருத்தங்கள் செய்வதற்காக பெறுமதி சேர் வரியுடன் ரூபா 538,425 செலவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2022 சனவரி 31 ஆந் திகதி வரை பஸ் ஓடும் நிலையில் இருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றது. இந்த பஸ்ஸின் வாயு சீராக்கி முறைமை மற்றும் வெகும் முறைமை செயற்படாதிருந்தமை மற்றும் இன்னும் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த திருத்த வேலைகளை உள்ளூர் முகவர் நிறுவனமான லங்கா அசோக் லேலன்ட் நிறுவனத்தினால் மேற்பொள்ளப்பட்டிருந்த போதிலும் அதன் பின்னர் ஓடும் போது மீண்டும் ஒரு தடவை வாயு சீராக்கி முறைமையிலும் வெகும் முறைமையிலும் குறைபாடு உருவாகியிருந்ததன் காரணமாகவும் முறைப்படியாக பூச்சுக்கள் பூசப்படாததன் காரணமாகவும் மீண்டும் ஒரு தடவை திருத்தங்கள் செய்யப்பட்டது இதன் காரணமாக ஒரு ஆண்டிற்கு அண்மித்த காலம் பஸ் செயற்படவில்லை. 2022 மார்ச் 30 ஆந் திகதி இந்த பஸ் கிளச்சி முறைமையில் குறைபாடுகளுடனான நிலைமை உருவாகியதன் காரணமாக மீண்டும் ஒரு தடவை தற்காலிகமாக ஓடுவதிலிருந்து நீக்கிகொள்வதற்கு நிர்ணயிக்கப்பட்டது. | -மேற்படி- |
| (iii) | ஆரம்ப நிலைக்கு பிந்திய தாதிகள் கல்லூரிக்கு வழங்கப்பட்ட பஸ் இறுதியாக 2020 செப்தெம்பர் 08 ஆந் திகதி ஓடியிருந்ததுடன் அதன் பின்னர் ஓடாமைக்கான காரணம் கணக்காய்விற்குச் | அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றது. இந்த பஸ் Covid 19 விசேட கடமைக்காக தற்காலிகமாக அமைச்சு போக்குவரத்து பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டது. | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்படவில்லை. | தற்பொழுது அக்கடமை முடிவடைந்து மீள ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | |
| (iv) | களுத்துறை தேசிய சுகாதார கல்லூரியின் பணிப்பாளரால் 2020 திசெம்பர் 30 ஆந் திகதி நிறுவனத்திற்கு வழங்கப்பட்டிருந்த பஸ் ஒரு ஆண்டிற்கு மேற்பட்ட காலம் தொழில்நுட்ப கோளாறு காரணமாக ஓடவில்லை என அமைச்சிற்கு தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 யூன் மாதமளவில் பஸ்ஸினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக பஸ்ஸின் 02 பெற்றரிகள் செயற்படாதிருந்தன. | அவதானிப்புக்களுடன் இணங்கப்படுகின்றது. பஸ்ஸினை ஓடுவதற்கு எடுத்துக்கொள்ள வேண்டியிருந்ததனால் முகவர் நிறுவனத்தின் மூலம் அல்லது அங்கீகரித்த நிறுவனத்தின் மூலம் திருத்தம் செய்வதற்கு தேவையான சிபாரிசுகளை வழங்குமாறு தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

## 3.12 உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவு

| | **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள்கள்** | **சிபாரிசுகள்** |
|---|---|---|---|
| (அ) | உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவிற்கு கிடைக்கின்ற சேவை தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக உத்தியோகத்தர்களை அனுப்பிவைக்கும் போது அச்செயற்பாடுகளுக்கு தேவைப்படுகின்ற பயிற்சி பெற்ற பதவியினர்களின் எண்ணிக்கை தேவையான உதிரிப் பாகங்களின் வகையும் அளவும் ஒதுக்கீடு செய்யப்படுகின்ற நாட்களின் எண்ணிக்கை மற்றும் படிகளையும் ஏனைய கொடுப்பனவுகளையும் உள்ளடக்கிய வெளியே செல்லும் நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரின் மூலம் அங்கீகரித்துக்கொள்ளும் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. திருத்துதல்கள் Preventive, Maintenance Corrective Maintenance என்ற இரண்டு பிரதான வகைகளாகக் காணப்படுகின்றது. பராமரிப்பிற்கு உள்ள வைத்திய உபகரணங்களின் எண்ணிக்கைக்கு நேரொத்ததாக நிறுவனத்தில் இருக்கின்ற பதவியினர்கள் போதியளவானதாக இல்லாததனால் உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவின் மூலம் Corrective Maintenance மாத்திரம் மேற்கொள்ளப்பட்டது. உரிய வைத்தியசாலைக்கு | சேவை தேவைப்பாட்டினைப் பூரணப்படுத்துவதற்காக உத்தியோகத்தர்களை அனுப்பிவைக்கும் போது அச்செயற்பாடுகளுக்கு தேவையான பயிற்சி பெற்ற பதவினர்களின் எண்ணிக்கை தேவையான உதிரிப்பாகங்களின் வகையும் எண்ணிக்கையும் ஒதுக்கீடு செய்யப்பட்ட நாட்களின் எண்ணிக்கை மற்றும் படிகளும் ஏனைய கொடுப்பனவுகளும் |

| | | | |
|---|---|---|---|
| | அவ்வாறே வெளியே செல்லும் உத்தியோகத்தர் உரிய சேவை நிலையத்திற்கு அறிவித்தமை பற்றியும் எடுத்துக்கொண்ட காலத்தை உறுதிப்படுத்தும் நடைமுறையும் இருக்கவில்லை. அவ்வாறான நடைமுறை இன்றி அப்பிரிவிலுள்ள உத்தியோகத்தர்கள் சென்ற பயணங்களுக்காக மீளாய்வாண்டின் போது பயணச் செலவுகளாக ரூபா 1,279,813 செலுத்தப்பட்டிருந்தது. | அறிவிக்கப்பட்டு மருத்துவ உபகரணங்களை திருத்தம் செய்வது தொடர்பான மருத்துவ உபகரணங்களுக்குப் பொறுப்பான உத்தியோகத்தரினால் கையொப்பமிட்டு சான்றுபடுத்தப்படுகின்றது. வெளியே செல்லுகின்ற உத்தியோகத்தர்கள் உரிய சேவை நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டது பற்றியும் எடுத்துக்கொண்ட காலத்தையும் உறுதிப்படுத்தும் நடைமுறையாக வெளிச்செல்லும் பதிவேடு பேணப்படுகின்றது. | உள்ளடக்கிய வெளிச்செல்லும் நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அதிகாரமளிக்கப்பட்ட ஒரு உத்தியோகத்தரின் மூலம் அங்கீகரித்துக் கொள்ளும் நடைமுறை அறிமுகப்படுத்துதல் வேண்டும். |
| (ஆ) | அனைத்து அரசாங்க வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்காக அதிக பெறுமதி கொண்ட மருத்துவ உபகரணங்களின் ஒட்டுமொத்த தேவைப்பாட்டினையும் மதிப்பீடு செய்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டிற்கு இணங்க முன்னுரிமைப் பட்டியலைத் தயாரித்து ஒரே தடவையில் பெறுகைகளை மேற்கொள்வதன் மூலம் கழிவுகள் மற்றும் கிரயத்தைக் குறைத்தல் ஆகிய நலன்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதற்குப் பதிலாக ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் நிதி ஏற்பாட்டினை பகிர்ந்தளித்து பிராந்திய பெறுகைக்குழுவின் மூலம் மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கு வசதியளிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது அமைச்சினால் உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவிற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 4,880 மில்லியன் நிதி ஏற்பாட்டில் ரூபா 766 மில்லியன் அல்லது 16 சதவீதம் உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவினால் எதுவித அதிகாரமுமின்றி வைத்தியசாலைக்கு பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தது. | அவதானிப்புக்களுடன் இணங்கிக்கொள்ளப்படவில்லை. உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவினால் விலை கூடிய மற்றும் அதிக அளவிலான மருத்துவ உபகரணங்கள் பெறுகை செய்யப்படுகின்றன. வைத்தியசாலை பெறுகை வரம்பு காணப்படுகின்ற மருத்துவ உபகரணங்களை வைத்தியசாலைகள் சிறிய அளவில் மாத்திரம் வேண்டிக் கொண்டிருக்கையில் வைத்தியசாலைகளின் மூலம் கொள்வனவு செய்வதற்காக வைத்தியசாலைகளுக்கு நிதி ஏற்பாடுகள் வழங்கப்படுகின்றன. அந்த தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவின் பொறியியலாளர்கள் பங்குபற்றுவார்கள். | அரசாங்கத்தின் வைத்தியசாலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு தேவைப்படுகின்ற மருத்துவ உபகரணங்களின் ஒட்டு மொத்த தேவைப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டு கிடைத்துள்ள நிதி ஏற்பாட்டிற்கு இணங்க முன்னுரிமை பட்டியல் தயாரிக்கப்பட்டு ஒரே தடவையில் பெறுகை செய்வதன் மூலம் கழிவு மற்றும் கிரயத்தை குறைத்தல் ஆகிய நாலன்களை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (இ) | சுகாதார முறைமை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் மேலதிக நிதியளிப்பின் கீழ் கொவிட் 19 சிகிச்சை நிலையங்களுக்கு | | |

| | | | |
|---|---|---|---|
| | தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக உயிரியல் மருத்துவ பொறியியல் சேவை பிரிவிற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டினை பயன்படுத்தி இணைய தளத்தினூடாக அறிவித்தல் வெளியிடப்பட்டு கையில் இருப்பு காணப்படுகின்ற (EX- Stock) பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து மாத்திரம் கேள்வி மனுக்கள் கோரி சந்தை விலை ஒப்பீட்டு முறைமையை பின்பற்றி தெரிவுசெய்யப்பட்ட வழங்குனருக்கு 19 ஒப்பந்தங்களை வழங்கி 19 வகையைச் சார்ந்த 4,400 மருத்துவ உபகரண விடயங்கள் ரூபா 2,328 மில்லியன் செலவு செய்து கொள்வனவு செய்யப்பட்டன. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) | அவசர தேவைப்பாடாக கையில் இருப்பு (EX-Stock) காணப்படுகின்ற பதிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடமிருந்து மாத்திரம் கேள்வி மனுக்கள் கோரி சந்தை விலை ஒப்பீட்டு முறைமையை பின்பற்றி 50 Defibrillators , 35 Portable X-Ray இயந்திரங்கள், 135 Suction Apparatus, 325 High Flow Nasal Oxygen Machine 10 Ventilators (Neonatal) கொள்வனவு செய்வதற்கான பெறுகைகளின் போது கையில் இருப்பு காணப்படுகின்ற அல்லது பகிர்ந்தளிக்கும் கால அட்டவணை சமர்ப்பிக்கப்பட்டு அதற்கிணங்க வழங்கக் கூடியது என்ற பிழையான தகவல்களைச் சமர்ப்பித்து கேள்வி மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் குறிப்பிடத்தக்க அளவான தாமதத்துடன் பொருட்கள் வழங்கப்பட்டிருந்தன. | அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. கேள்வி மனுக்களை சமர்ப்பித்த சந்தர்ப்பத்தில் காணப்பட்ட இருப்புக்களின் அளவு தொடர்பான (Ex Stock) தகவல்கள் வழங்கப்பட்டிருந்தும் மேலே குறிப்பிட்டவாறு தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மற்றும் பெறுகைக் குழு நடைபெற்ற போது உருவாகிய நடைமுறைச் சிக்கலினால் ஏற்பட்ட தாமதங்களை முன்னிட்டு பெறுகைத் தீர்மானங்களை எடுக்கும் போது தாமதங்கள் ஏற்பட்டது. இக்காலப்பகுதியின் போது மருத்துவ உபகரணங்களுக்கு காணப்பட்ட அதிக வேண்டுதல்களினால் தனிப்பட்ட அன்பளிப்பாளர்கள் இந்த இருப்பினைப் பெற்று சுகாதார முறைமைக்குள் உள்ளிடுவதற்கு நடவடிக்கை எடுத்ததனால் நாங்கள் விசாரித்த போது காணப்பட்ட இருப்புக்கள் இல்லாமல் போதல் இடம்பெற்றிருந்தது. | பிழையான தகவல்களை வழங்கிய வழங்குனர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 35 Portable X-Ray Machines வழங்குவதற்காக கேள்வி மனுக்களை சமர்ப்பித்திருந்த | அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. தண்டப்பணத்தை | பிழையான தகவல்களை சமர்ப்பித்த |

| | | | |
|---|---|---|---|
| | கேள்விதாரர்களுக்கு மத்தியல் தகமைபெற்ற மற்றும் நான்காவது ஆகக் குறைந்த கேள்வி மனுவைச் சமர்ப்பித்திருந்த கேள்விதாரருக்கு 20 இயந்திரங்களின் ஒப்பந்தம் மாத்திரம் வழங்கப்பட்டு எட்டாவது ஆகக்குறைந்த கேள்வி மனுவைச் சமர்ப்பித்த கேள்விதாரருக்கு 15 இயந்திரங்களின் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. 15 இயந்திரங்களை வழங்குவதற்காக ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த வழங்குனரினால் கட்டளையை பெற்ற உடன் 05 இயந்திரங்களும் 02 வாரங்களுக்குள் 10 இயந்திரங்களையும் வழங்குவதற்கு இணங்கிக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் 70 நாட்கள் தாமதத்தின் பின்னர் இயந்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. இவ்வாறான பிழையான தகவல்களின் அடிப்படையில் அந்த வழங்குனர் தெரிவுசெய்யப்பட்டிருந்ததன் காரணமாக மற்றும் 20 இயந்திரங்களின் ஒப்பந்தங்கள் வழங்கப்பட்ட தகமைபெற்ற ஆகக் குறைந்த கேள்விதாரருக்கு 35 இயந்திரங்களின் ஒப்பந்தம் வழங்கப்படாமையின் காரணமாக ஏற்பட்ட நட்டம் ரூபா 37,780,285 ஆகும். பிழையான தகவல்களை சமர்ப்பித்து உபகரணங்களை வழங்குவதில் தாமதத்தை ஏற்படுத்தியிருந்த வழங்குனரிடமிருந்து ரூபா 4,385,787 தண்டப் பணம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. | கழித்தக்கொள்ளும் நடைமுறைக்கு இணங்க மேற்கொள்ளப்பட்டுள்ளது. 15 இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக ஒப்பந்தங்கள் வழங்கப்பட்ட கேள்விதாரருக்கு நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் பொருட்களை வழங்கும் இயலுமை காணப்பட்டிருந்தும் உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவில் களஞ்சிய வசதிகள் இல்லாததன் அடிப்படையில் அப்பிரிவினால் உரிய பொருட்களை தாமதித்தே பொறுப்பேற்கப்பட்டிருந்ததனால் கணக்காய்வில் குறிப்பிட்டுள்ளவாறு பிழையான தகவல்களை அடிப்படையாகக் கொண்டு கேள்விதாரர்கள் தெரிவுசெய்தல் இடம்பெறவில்லை. | வழங்குனரிடமிருந்து முழு நட்டத்தையும் அறவீடு செய்தல் வேண்டும். |
| (iii) | 1,110 Nebulizers களை கொள்வனவு செய்யும் பெறுகைக்காக தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்களினால் 06 | அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. அவசர கொள்வனவு செய்தல் நிலைமையின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட இந்த Nebulize | பெறுகை நடைமுறையில் வெளிப்படைத் தன்மையை பேணுவதற்கு கவனம் |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் மற்றும் 07 ஆம் இலக்க அங்கீகரிக்கப்பட்ட பொருள் விபரக் குறிப்புக்களுக்கு விலை மனுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. அந்த விலை மனுக்கள் கடிதத்தின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டது எனக் குறிப்பிட்டு கெள்வி மனுக்கள் மதிப்பீடு செய்யப்பட்டு அந்த கேள்வி மனுக்கள் பதிலளிக்கப்பட்ட கேள்வி மனுவாகக் கருதி பெறுகை வழங்கப்பட்டிருந்தது. எனினும் 2021 யூலை 02 ஆந் திகதி நடாத்தப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் இக்கேள்விதாரர் பதிலளிக்கப்பட்ட கேள்விதாரராக சிபார்சு செய்வதற்காக 2021 யூலை 22 ஆந் திகதி கேள்விதாரரினால் சமர்ப்பித்த விலை மனுவுடனான ஒரு கடிதம் அடிப்படையாகக் கொள்ளப்பட்டிருந்தது. | Nebulizer 1110 இற்காக தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர் துணைக் கருவிகள் மற்றும் உதிரிப் பாகங்களின் விபரங்களை வழங்கியிருக்காததனால் பெறுகை நிறுவனம் தொலை பேசியின் மூலம் அத்தகவல்களை வழங்குவதாக உறுதிப்படுத்தியதன் பின்னர் அது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு உறுதிப்படுத்துவதற்காக தொலைபேசியின் மூலம் தெரியப்படுத்தப்பட்டதுடன் வழங்குனரிடமிருந்து 2021 யூலை 15 ஆந் திகதி கடிதம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | செலுத்துதல் வேண்டும். |
| (iv) | 960 Pulse Oximeter களை கொள்வனவு செய்யும் பெறுகை தொடர்பாக 02 (b) ஆம் இலக்க அங்கீகரிக்கப்பட்ட பொருள் விபரக் குறிப்பிற்கு இணங்க Pulse Rate ஒன்று 20... 240 20-240 bpm வீச்சுக்குள் இருக்க வேண்டிய போதிலும் 200 உபகரணங்களை வழங்குவதற்காகத் தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரரினால் வழங்கப்பட்டிருந்த உபகரணங்களில் Pulse Rate ஒன்று 30-250bpm வீச்சுடையதாக இருந்தது. அவ்வாறே 03 (அ) ஆம் இலக்க அங்கீகரிக்கப்பட்ட பொருள் விபரக் குறிப்பின் பிரகாரம் Display, An LCD Screen காணப்பட வேண்டிய போதிலும் 560 உபகரணங்களை வழங்குவதற்காக தெரிவு செய்யப்பட்ட | அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. No OR (b) ஆம் இலக்க பொருள் விபரக் குறிப்பின் பிரகாரம் Pulse Rate ஒன்று 20-240 இற்கு இடைப்பட்ட BPM ஆக இருக்க வேண்டும் சாதாரண ஒரு நபரின் 60-180 இற்கும் இடைப்பட்ட அளவீட்டுப் பெறுமதியில் Pulse Rate இருக்க வேண்டிய போதிலும் 30 BPM இனை விட குறைவாக செல்கையில் நோயாளிகளின் Pulse Orximeter இல் அளவீட்டினைப் பெற்றுக்கொள்ளுதல் மேற்கொள்ளப்படாது ஏனைய கூடுதல் சிகிச்சைக்காக அனுப்பிவைக்க வேண்டியுள்ளது. LCD மற்றும் LED ஆகிய இரண்டுக்குமிடையே வித்தியாசம் இல்லாததனால் LED இனை தெரிவு செய்தல் இடம்பெற்றுள்ளது. | பொருள் விபரக் குறிப்பினை சரியாக தயாரிக்க வேண்டியதுடன் ஒவ்வொரு கேள்விதாரருக்கும் கேள்வி மனுவினைச் சமர்ப்பிப்பதற்காக சமனான சந்தர்ப்பம் வழங்கப்படுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கேள்விதாரரினால் வழங்கப்பட்ட உபகரணம் LED Screen ஒன்றுடனான உபகரணமாகும். | | |
| (v) | 75 ICU Ventitators களை கொள்வனவ செய்வது தொடர்பான பெறுகையின் போது ICU Ventilators களுக்காக இருக்க வேண்டிய அங்கீகரிக்கப்பட்ட பொருள் விபரக் குறிப்புக்களுக்கும் தகைமைபெற்ற வழங்குனர்களினால் வழங்கப்பட்ட உபகரணங்களில் காணப்பட்ட பொருள் விபரக் குறிப்பிற்குமிடையே பாரிய அளவான 02 மீறல்கள் காணப்பட்டன. | அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. இயந்திரங்களின் சிகிச்சை செயன் முறைக்கு தகமையில்லாத இந்த இரண்டு மீறல்களும் சிறிய மீறல்களாகக் கருதி தொழில்நுட்பக் குழுவினால் சிபார்சுகள் வழங்கப்பட்டுள்ளன. | இது சம்பந்தமாக விசாரணைகளை நடாத்தி பொறுப்புக் கூறக்கூடிய தரப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (vi) | 325 High Flow Oxygen Theropy இயந்திரங்களை கொள்வனவு செய்யும் பெறுகையின் 05 (b) ஆம் இலக்க அங்கீகரிக்கப்பட்ட பொருள் விபரக் குறிப்பின் பிரகாரம் In bild In- Built Air /Oxygen Mixer உடனான High Flow Oxygen Therapy இயந்திரமாக இருக்க வேண்டிய போதிலும் காணப்பட்ட இருப்பினை கருத்திற்கொண்டு High Flow Oxygen Therapy இயந்திரங்கள் 125 இனை வழங்கும் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்த வழங்குனரினால் வழங்கப்பட்டிருந்த 125 High Flow Oxygen Therapy இயந்திரங்கள் In - Built இல்லாத Air /Oxygen Mixer உடனான இயந்திரமாகும். | அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. நிதி பொருளாதார மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சின் பெறுகை வழிகாட்டிக் கோவையின் 2 ஆம் பிரிவிற்கு இணங்க இப்பெறுகை மேற்கொள்ளப்பட்ட பெறுகைக்காக இரண்டு கேள்விதாரர்கள் இருந்ததுடன் அக்கேள்விதாரர்களுக்கு மத்தியில் ஒரு வழங்குனரிடமிருந்து 125 இலத்திங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டதுடன் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கையின் பிரகாரம் அந்த இயந்திரங்களுக்கு In - Build In - Built Air Oxygen Mixture இல்லாதிருந்த போதிலும் பின்வரும் விடயங்களை கவனத்தில் கொண்டு Covid அவசர பெறுகை (CEPC- COVID Emergency Procurement) குழுவின் மூலம் 125 இயந்திரங்களுக்காக அக்கேள்விதாரர்கள் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்கள். | இது சம்பந்தமாக விசாரணைகளை நடாத்தி பொறுப்புக்கூறக்கூடிய தரப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | I NMRA சான்றிதழ் பெற்ற ஒரேயொரு கேள்விதாரராக இருத்தல்<br>II அதுவரை வைத்தியசாலையில் காணப்பட்ட ஒரேயொரு High Flow Nasal மாதிரியாக இருத்தல்.<br>III EX- Stock காணப்படுதல் | |
| (vii) | 100 Multipara Meter ICU இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்குரிய பெறுகையின் பொருள் விபர குறிப்பிற்கும் வழங்கப்பட்ட இயந்திரங்களில் காணப்பட்ட பொருள் விபரக்குறிப்பிற்குமிடையே பாரிய 08 மீறல்கள் காணப்பட்டன. | அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. இப்பெறுகைக்காக தெரிவு செய்யப்பட்ட மாதிரி தற்பொழுது அரசாங்க வைத்தியசாலைகளில் பெரும்பாலும் பயன்படுத்தப்படுகின்ற மாதிரியைப் போல இது மருத்துவர்களின் சிபாரிசுடனான மாதிரியாக இருப்பதனால் இந்த பந்தியில் குறிப்பிட்ட விடயத்தை சிறிய மீறலாகக் கருதி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் சிபார்சு வழங்கப்பட்டுள்ளது. | இது சம்பந்தமாக விசாரணைகளை நடாத்தி பொறுப்புக்கூறக்கூடிய தரப்பினர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (viii) | 20 Dialysis இயந்திரங்களை கொள்வனவு செய்யும் பெறுகை ஆரம்பத்திலேயே நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் ஒரு அங்கத்தவருக்குப் பதிலாக புதிய ஒரு அங்கத்தவர் 2021 யூன் 23 ஆந் திகதி நியமிக்கப்பட்டிருந்தார். எனினும் அந்த அங்கத்தரவருக்கு நியமனம் கிடைப்பதற்கு முன்னர் அதாவது 2021 யூன் 21 ஆந் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு பங்குபற்றி அத்திகதியில் உரிய குழு அறிக்கையில் கையொப்பமிட்டிருந்தார். | அவதானிப்புக்களுடன் இணங்கவில்லை. Covid அவசர பெறுகையின் கீழ் மேற்கூறிய பெறுகை இடம்பெற்றுள்ளதனால் இவ்வாறான தவறுகள் இப்பெறுகையில் இடம்பெற்றுள்ளது. எவ்வாறாயினும் எதிர்காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் இடம்பெறாமைக்கான பொறுப்புக்கு உத்தரவாதமளிப்பதற்கு உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பெறுகை நடைமுறையில் வெளிப்படைத் தன்மையை பேணுவதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும். |